810

Madras & Andhra Universities

The Tamil Text Book

FOR

THE S. S. L. C. PUBLIC EXAMINATION

AND FOR

The Matriculation Examination

1937

Price Re. 1-0-0.

Madras & Andhra Universities

The Tamil Text Book

FOR

DETAILED STUDY — GROUP A.

FOR

THE S. S. L. C. PUBLIC EXAMINATION

AND FOR

The Matriculation Examination

1937

11 AUG 1937
MADRAS
1363
494.8

PRINTED AT THE 'TAMIL KADAL' PRESS
SAN THOME, MADRAS

1936

பொருளடக்கம்

செய்யுட்பாடம்

	பக்கம்
I கடவுள் வாழ்த்து	
1. தாயுமானவர் பாடல்	1
2. சருவ சன செபம்	2
II அறவுரை	
1. திருக்குறள்	5
III தொடர்நிலைச் செய்யுள்	
1. சிலப்பதிகாரம் — கண்ணகி வழக்குரைத்தது	7
2. கம்பராமாயணம் — கிளை கண்டு நீங்கு படலம்	10
3. வில்லிபுத்தூராழ்வார் பாரதம் — நச்சுப் பொய்கைச் சருக்கம்	22
4. பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடற்புராணம் — விறகு விற்ற படலம்	34
5. ஸ்ரீமத் குமாரசுவாமியம் — வீரமாகேந்திரத் திருவிளையாடல்	43
IV வருணனை	
1. இமயமலை	46

வசனபாடம்

1. நாட்டுக்கு நன்மை செய்பவன் செலவாளியா? சிக்கனக்காரனா? 47
[திரு. கா. நமச்சிவாய முதலியாரவர்கள்]

2. திருக்குறளும் பொதுநோக்கமும் 56
[வித்வான் திரு. எஸ். ஆறுமுகமுதலியாரவர்கள், B. A. Hons., L. T.]

3. பொய்யாமொழிப் புலவர் 61
[திரு. மு. ராகவையங்காரவர்கள்]

4. சில ஷிகாரி அல்லது வேட்டுவப் பிராணிகள் 71
[திரு. எம். ஏகாம்பரநாத ஐயரவர்கள், எம். ஏ., எல். டி.]

5. கோப்பெருஞ்சோழர் 78
[திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்]

6. சருவதேச சங்கம் 86
[ஸ்ரீமதி ரா. அரங்கநாயகி யம்மையாரவர்கள்]

7. தமிழ்நாடு 95
[திரு. வி. கலியாணசுந்தரமுதலியாரவர்கள்]

8. உணவு நஞ்சாவது ஏன்? 109
[பி. என். அப்புஸ்வாமி ஐயரவர்கள், பி. ஏ., பி. எல்.]

9. டால்ஸ்டாய் மகான் 126
[திரு. தே. வீரராகவ ஐயங்காரவர்கள்]

மனப்பாடஞ் செய்யவேண்டிய பகுதி

		அடிகள்
1.	கடவுள் வாழ்த்து	8
2.	சருவ சன செபம் 15—24, 95—105, ...	21
3.	திருக்குறள்	40
4.	சிலப்பதிகாரம் 49—59	11
5.	கம்பராமாயணம் 9, 10, 19, 30—33, 36—43, 45—48, 50, 51, 53, 54	92
6.	வில்லிபுத்தூராழ்வார் பாரதம் 35—37	12
7.	பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடற்புராணம் 18, 27, 28	12
8.	இமயமலை 2	4
		200

திருத்தம்

குறிப்பு : 159-ஆம் பக்கம் 8-ஆம் வரியில் 'எட்டாம்' என்பதை ஒன்பதாம் என்று திருத்திக்கொள்க.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 AUG 1937
MADRAS

I

கடவுள் வாழ்த்து

1. தாயுமானவர் பாடல்

ஆசைக்கோ ரளவில்லை அகிலமெல் லாம்கட்டி
ஆளினும் கடல்மீதிலே
ஆணைசெல வேநினைவர் அளகேசன் நிகராக
அம்பொன்மிக வைத்தபேரும்
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
நெடுநாள் இருந்தபேரும்
நிலையாக வேஇனும் காயகற் பந்தேடி
நெஞ்சுபுண் ணுவர்எல்லாம்
யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும்
உறங்குவது மாகமுடியும்
உள்ளதே போதும்நான் நானெனக் குளறியே
ஒன்றைவிட் டொன்றுபற்றிப்
பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற
பரிசுத்த நிலையையருள்வாய்
பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணனந்தமே.

— தாயுமானவர்.

2. சருவ சன செபம்[1]

* * * *

ஒவ்வொர்கா ரணமும் உரியகா ரியத்தைச்
செய்தே தீரச் செய்குவ தெதுவோ,
நன்மையை நினைவார் நவில்வார் புரிவார்
நன்மையின் பயனை நண்ணச் செய்வதும்,
தீமையை உன்னுவார் செப்புவார் செய்வார்
தீமையின் பயனுறச் செய்வதும் எதுவோ
அதனை அகத்துள் அகலா தமைத்தே,
எண்ணுதல் இயம்புதல் இயற்றுதல் என்னும்
முச்செயல் களினும் முயல்வே னாக.

* * * *

அறமுறை திறம்பி அறஞ்செயே னாக;
அறநெறி வழீஇப்பொருள் ஆக்கே னாக;
அறவழி யன்றியின் படையே னாக.
என்றும், நல்லோர் இணக்கமே நான்இணங்
நல்லோர் நினைவே நான்நினைந் திடுக; [கிடுக;
நல்லோர் உரையே நான்உரைத் திடுக;
நல்லோர் நடையே நான்நடந் திடுக;
பிறர்நன் முறைகளைப் பேணிஎன் முறைகளா
ஆக்குதற் காசை அடைவே னாக;
உயிர்களை வருத்தல் ஒழிவே னாக;
உயிர்போம் எனினுமெய் உரைப்பே னாக.

* * * *

உயிரினும் மானம் ஓம்புவே னாக;
இறப்பே னயினும் இரவே னாக;
அயலவர் பொருளினை அவாவே னாக;
அவர்கள்தம் வாழ்வுகண் டழுக்கறே னாக;
அவர்செயும் நன்றியை அயர்த்திடே னாக;

---

[1] ஆசிரியரின் அனுமதி பெற்றுப் பதிப்பிக்கப்பட்டது.

முன்புபின் பவர்பழி மொழியே னாக;
எங்கணும் அவர்புகழ் இயம்புவே னாக;
அவர்குறை காண்டலிற் குருடனே னாக;
அவர்மறை கேட்டலிற் செவிடனே னாக;
அவர்க்கின்னா கூறலில் ஊமனே னாக;
அவர்க்கூறு செய்தலில் மூடவனே னாக;
அவர்கேடு சூழ்தலில் அறிவிலே னாக;
எனைக்கெடுத் தவர்க்கும்நன் றியற்றுவே னாக;
வைதவர் தம்மையும் வாழ்த்துவே னாக;
வெறுத்தவ ரெவரையும் விரும்புவே னாக;
ஒறுத்தவ ருக்கும் உதவுவே னாக;
பகைவர்க்கும் அன்புசெய் பண்பினே னாக;
இத்தனை நல்லொழுக் கியைந்துளேம் என்று
பெருமைபா ராட்டிடும் பிழையிலே னாக;
வாழ்வு வரின்இறு மாந்திடே னாக;
தாழ்வுறு மெனின்மனந் தளர்ந்திடே னாக;

* * * *

எவ்வுயிர் துன்புறக் காணினும் இரங்கி
அவ்வுயிர்க் குதவி ஆற்றுவே னாக;
என்னுடை நன்மைபோல் யாவர்நன் மைக்கும்
உழைத்திட ஊக்கம் உடையே னாக;
என்வாழ் நாளெலாம் இடையறா தினிதே
பிறர்க்குநன் றாற்றிப் பெற்றிடும் இன்பால்
என்மனம் நிறைவினை எய்துவ தாக.

* * * *

ஓருயி ரும்துன் புற்றிடச் செய்யா
முதன்மை அறம்புவி முழுதும் பரம்புக.
துன்பம் எவ் வுயிரையும் துன்னா தொழிக.
பகையும் துயரும் பயமும் நீங்கி
எல்லா வுயிர்களும் இன்பம் எய்துக.
அனைத்துயிர் களும்மன வமைதியை அடைக.
நன்மை எங் கெங்குமே நண்ணியோங் கிடுக.

தீமைஎவ் வெவருமே செயவொண் ணு தாக.
அறிவைப் பெருக்கலால், அருஞ்செயல் செயலால்
பெறுதற் குரியநற் பேறுக ளெல்லாம்
யாவரும் எய்தி இன்புடன் வாழ்க.

* * * *

60. பற்பல மக்கட் பகுதியும் பகையற்
றொற்றுமை யுற்றுநண் புடையராய் வாழ்க.

—திரு. வே. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள்.

II

அறவுரை

திருக்குறள்

குடிமை

1. ஒழுக்கமும் வாய்மையும் நாணுமிம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார்.

2. நகைஇகை இன்சொல் இகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு.

3. வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரிதல் இன்று.

மானம்

4. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு.

5. ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்
கெட்டான் எனப்படுதல் நன்று. [நிலையே

6. மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்
பீடழிய வந்த விடத்து. [தகைமை

7. மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்.

பெருமை

8. பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

9. பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து.

சான்ருண்மை

10. அன்புநாண் ஒப்புரவு கண்ணேட்டம் வாய்மை
டைந்துசால் பூன்றிய தூண். [யோ

11. கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.

12. ஆற்றுவா ராற்றல் பணிதல் அதுசான்ருேர்
மாற்ருரை மாற்றும் படை.

பண்புடைமை

13. அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்
பண்புடைமை என்னும் வழக்கு. [டும்

14. நண்பாற்ரு ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்ரு ராதல் கடை.

15. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யாற்றிரிந் தற்று.

நாணுடைமை

16. பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்
குறைபதி என்னும் உலகு.

17. பிறர்நாணத் தக்கது தான்நாண ணயின்
அறம்நாணத் தக்க துடைத்து.

குடிசெயல்வகை

18. குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்.

19. நல்லாண்மை என்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல்.

20. அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை.

— திருவள்ளுவர்.

III

தொடர்நிலைச் செய்யுள்

1. சிலப்பதிகாரம்

கண்ணகி வழக்குரைத்தது

'வாயி லோயே, வாயி லோயே,
அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்
திறைமுறை பிழைத்தோன் வாயி லோயே,
"இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத் தா"ளென்
றறிவிப் பாயே அறிவிப் பாயே' என,
வாயிலோன், 'வாழியெங் கொற்கை வேந்தே
தென்னம் பொருப்பிற் றலைவ வாழி [வாழி
செழிய வாழி தென்னவ வாழி
பழியொடு படராப் பஞ்சவ வாழி
அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேற் றடக்கைக் கொற்றவை அல்லள்;
அறுவர்க் கிளைய நங்கை, இறைவனை
ஆடல்கண் டருளிய அணங்கு, சூருடைக்
கானகம் உகந்த காளி, தாருகன்
பேருரங் கிழித்த பெண்ணும் அல்லள்;
செற்றனள் போலும் செயிர்த்தனள் போலும்
பொற்றொழிற் சிலம்பொன் றேந்திய கையள்,
கணவனை இழந்தாள் கடையகத் தாளே,
கணவனை இழந்தாள் கடையகத் தாளே' என,
'வருக மற்றவட் டருக இங்' கென,
வாயில் வந்து கோயில் காட்டக்

கோயில் மன்னனைக் குறுகினள் சென்றுழி,
'நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்
யாரை யோநீ மடக்கொடி யோய்'எனத்
'தேரா மன்னா, செப்புவ துடையேன்;
எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன்; அன்றியும்,
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத்[தோன்
தான்தன், அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்
பெரும்பெயர்ப் புகார்என் பதியே; அவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை யாகி,
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா, நின்னகர்ப் புகுந்திங்
கென்காற் சிலம்பு பகர்தல் வேண்டி,
நின்பால், கொலைக்களப்பட்ட கோவலன் மனைவி;
கண்ணகி என்ப தென்பெய ரே'எனப் [அன்று;
'பெண்ணணங்கே, கள்வனைக் கோறல் கடுங்கோல்
வெள்வேற் கொற்றம் காண்'என, ஒள்ளிழை
'நற்றிறம் படராக் கொற்கை வேந்தே,
என்காற் பொற்சிலம்பு மணியுடை அரியே'எனத்
'தேமொழி உரைத்தது செவ்வை நன்மொழி;
யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே;
தரு'கெனத் தந்து தான்முன் வைப்பக்
கண்ணகி அணிமணிக் காற்சிலம் புடைப்ப,
மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே,
மணிகண்டு, தாழ்ந்த குடையன் தளர்ந்தசெங் கோலன்
'பொன்செய் கொல்லன் றன்சொற் கேட்ட
யானோ அரசன்! யானே கள்வன் !!
மன்பதை காக்குந் தென்புலங் காவல்
என்முதல் பிழைத்தது கெடுகஎன் ஆயுள்'என
மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே; தென்னவன்

கோப்பெருந் தேவி குலைந்தனள் நடுங்கிக்
'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவ தில்'லென்
றிணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி.

— இளங்கோவடிகள்.

2. கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்

கிளை கண்டு நீங்கு படலம்

பரதன் இராமரிடம் வருதல்

1. கோதறத் தவஞ்செய்து குறிப்பின் எய்திய
நாதனைப் பிரிந்தனள் நலத்தி னீங்கினள்
வேதனைத் திருமகள் மெலிகின் றாள்விடு
தூதெனப் பரதனும் தொழுது தோன்றினான்.

இராமர்திருவடிகளில் பரதன் வீழ்தல்

2. 'அறந்தனை நினைந்திலை, அருளை நீத்தனை
துறந்தனை முறைமையை' என்னுஞ் சொல்லினன்
மறந்தனன் மலரடி வந்து வீழ்ந்தனன்
இறந்ததன் தாதையை எதிர்கண் டென்னவே.

பரதனைக்கண்டு இராமர் கண்ணீர் பெருக்குதல்

3. உண்டுகொல் உயிரென ஒடுங்கி னானுருக்
கண்டனன் நின்றனன் கண்ணன் கண்ணெனும்
புண்டரீ கம்பொழி புனல வன்சடா
மண்டலம் நிறைந்துபோய் வழிந்து சோரவே.

இராமர் பரதனைத் தழுவுதல்

4. அயாவுயிர்த் தழுகணீர் அருவி மார்பிடை
உயாவுறத் திருவுளம் உருகப் புல்லினன்
நியாயமத் தனைக்குமோர் நிலயம் ஆயினன்
தயாமுதல் அறத்தினைத் தழுவி என்னவே.

இராமர் தந்தையின்நலனை விசாரித்தல்

5. புல்லினன் நின்றவன் புனைந்த வேடத்தைப்
பல்முறை நோக்கினன் பலவும் உன்னினன்
'அல்லலின் அழுங்கினை ஐய வாளுடை
மல்லுயர் தோளினன் வலிய னே?'என்றான்.

பரதன் கூறுதல்

6. அரியவன் உரைசெயப் பரதன், 'ஐயநிற்
பிரிவெனும் பிணியினல் என்னைப் பெற்றஅக்
கரியவள் வரமெனும் கால னல்தனக்
குரியமெய் நிறுவிப்போய் உம்ப ரான்'என்றான்.

இராமர் மண்ணிடை வீழ்தல்

7. விண்ணிடை அடைந்தனன் என்ற வெய்யசொல்
புண்ணிடை அயிலெனச் செவிபு காமுனம்
கண்ணொடு மனஞ்சுழல் கறங்கு போலஆய்
மண்ணிடை விழுந்தனன் வானின் உம்பரான்.

இராமர் சிறிது தெளிந்து புலம்புதல்

8. இருநிலம் சேர்ந்தனன் இறையு யிர்த்திலன்
உருமினை அரவென உணர்வு நீங்கினன்
அருமையின் உயிர்வர அயர்வு யிர்த்தகம்
பொருமினன் பன்முறை புலம்பி னனரோ.

9. 'சொற்பெற்ற நோன்பின் துறையோன் அருள் [வேண்டி
நற்பெற்ற வேள்வி நவைநீங்க நீஇயற்றி
எற்பெற்று நீபெற்ற தின்னுயிர்போய் நீங்கலோ?
கொற்பெற்ற வெற்றிக் கொலைபெற்ற கூர்வேலோய்.

10. 'தேனடைந்த சோலைத் திருநாடு கைவிட்டுக்
கானடைந்தேன் என்னத் தரியாது காவல,நீ

வானடைந்தாய்; இன்னம் இருந்தேனுன் வாழ்வுகந்தே
ஊனடைந்த தெவ்வர் உயிரடைந்த ஒள்வேலோய்.'

இராமரைத் தம்பியர் முதலியோர் தாங்க, வசிட்டர் தேற்றுதல்

11. என்றெடுத்துப் பற்பலவும் பன்னி இடருழக்குங்
குன்றெடுத்த போலுங் குவவுத்தோட் கோளரியை
வன்றடக்கைத் தம்பியரும் மற்றுள்ள மன்னவரும்
சென்றெடுத்துத் தாங்கினர் மாவதிட்டன் தேற்றினன்.

12. 'அய்யநீ யாதொன்றும் அவலிப் பாயலை
உய்திறம் அவற்கினி இதனின் ஊங்குண்டோ?
செய்வன வரன்முறை திருத்திச் சேந்நின்
கையினல் ஒழுக்குதி கடனெ லாம்'என்றான்.

இராமர் நீர்க்கடன் ஆற்றுதல்

13. என்றபின் ஏந்தலை ஏந்தி வேந்தரும்
பொன்றிணிந் தனசடைப் புனித னேடும்போய்ச்
சென்றனர்; 'செறிதிரைப் புனலிற் செய்'கென
நின்றனர்; இராமனும் நெறியை நோக்கினன்.

14. புக்கனன்; புனலினின் முழுகிப் போந்தனன்
தக்கநன் மறையவன் சடங்கு காட்டத்தான்
முக்கையின் நீர்விதி முறையின் இந்தனன்
ஒக்கநின் றுயிர்தொறும் உணர்வு நல்குவான்.

இராமர், சானகி இருந்த இடத்துக்குச் செல்லுதல்

15. ஆனவன் பிறவுள யாவும் ஆற்றிப்பின்
மானமந் திரத்தவர் மன்னர் மாதவர்
ஏனையர் பிறர்களும் சுற்ற ஏகினன்
சானகி இருந்தவச் சாலை எய்தினன்.

பரதன், பிராட்டிமுன் வீழ்ந்து அரற்றுதல்

16. எய்திய வேலையில் தமியள் எய்திய
தய்யலை நோக்கினன்; சாலை நோக்கினுன்
கய்களிற் கண்மலர் புடைத்துக் கால்மிசை
அய்யனப் பரதன்வீழ்ந் தரற்றி ணனரோ.

இராமர், தம் தந்தை இறந்தமையைச் சீதைக்குத் தெரிவித்தல்

17. அந்நெடுந் துயருறும் அரிய வீரனைத்
தன்னெடுங் கரத்தினுல் இராமன் தாங்கினுன்
நன்னெடுங் கூந்தலை நோக்கி, 'நாயகன் [ருன்.
என்னெடும் பிரிவினில் இறந்திட் டான்' என்

சீதை புலம்புதல்

18. துண்ணெனும் நெஞ்சினள் துளங்கி ளுள்துணைக்
கண்ணெனும் நெடுங்கயல் கலுழி கான்றிட
மண்ணெனுஞ் செவிலிமேல் வைத்த கையினள்
பண்ணெனுங் கிளவியால் பன்னி ஏங்கினுள்.

சீதை துயருறுதல்

19. கன்னகு திரள்புயக் கணவன் பின்செல
நன்னகர் ஒத்தது நடந்த கானமும்
மன்னவன் துஞ்சினன் என்ற மாற்றத்தால்
அன்னமும் துயர்க்கடல் அடிவைத் தாளரோ.

முனிபத்தினியர் சீதையைக் கங்கையில் முழ்குவித்து இராமரிடம் சேர்த்தல்

20. ஆயவள் தன்னைநேர்ந் தங்கை ஏந்தினர்
தாயரின் முனிவர்தம் தருமப் பன்னியர்
தூயநீர் ஆட்டினர்; துயரம் நீக்கினர்;
நாயகற் சேர்த்தினர் நவையின் நீங்கினுர்.

சுமந்திரன், கோசலை முதலியோருடன் இராமரிடம் வருதல்

21. தேன்றருந் தெரியலச் செம்மல் நால்வரை
இன்றவர் மூவரோ டிருமை நோக்குறுஞ்
சான்றவர் குழாத்தொடும் தருமம் நோக்குறுந்
தோன்றல்பால் சுமந்திரன் தொழுது தோன்றினான்.

தாயரைக் கண்ட இராமன் கண்ணீர் சிந்துதல்

22. 'எந்தை யாண்டையான்? இயம்பு வீ' ரென
வந்த தாயர்தம் வயங்கு சேவடிச்
சிந்தி நின்றனன் சேந்த கண்ணநீர்
முந்தை நான்முகத் தவற்கும் மூந்தையான்.

யாவரும் வருந்துதல்

23. தாய ருந்தலைப் பெய்து தாந்தழீஇ
ஓய்வில் துன்பினால் உரறல் ஓங்கினார்
ஆய சேனையும் அணங்க னார்களும்
தீயில் வீழ்ந்துதீ மெழுகின் தேம்பினார்.

கோசலை முதலியோர் சீதையைத் தழுவி வருந்துதல்

24. பின்னவ் வீரரைப் பெற்ற பெற்றியப்
பொன்ன னார்களும் சனகன் பூவையைத்
துன்னி மார்புறத் தொடர்ந்து புல்லினார்
இன்னல் வேலைபுக் கிழிந்த மூழ்குவார்.

சேனைவீரர் முதலியோர் இராமரை அடைதல்

25. சேனை வீரரும் திருநன் மாநகர்
மான மாந்தரும் மற்று ளோர்களும்
ஏனை வேந்தரும் பிறரும் யாவரும்
கோனை எய்தினர் குறையுஞ் சிந்தையார்

சூரிய அத்தமன வருணனை

26. படஞ்செய் நாகணைப் பள்ளி நீங்கினன்
இடஞ்செய் தொல்குலத் திறைவன் ஆதலால்
தடஞ்செய் தேரினன் தானும் நீரினல்
கடஞ்செய் வானெனக் கடலில் மூழ்கினன்.

இராமர் பரதனை வினவுதல்

27. அன்று தீர்ந்தபின் அரச வேலையும்
துன்று செஞ்சடைத் தவரும் சுற்றமும்
தன்று ணைத்திருத் தம்பி மார்களும்
சென்று சூழஆண் டிருந்த செம்மல்தான்.

28. 'வரதன் துஞ்சினன் வையம் ஆணையால்
சரதம் நின்னதே; மகுடம் தாங்கலாய்
விரத வேடம்நீ என்கொல் வேண்டினய்?
பரத கூ' றெனப் பரிந்து கூறினன்.

பரதன் கூறுதல்

29. என்ற லும்பதைத் தெழுந்து கைதொழா
நின்று தோன்றலை நெடிது நோக்கி,' நீ
அன்றி யாவரே அறத்து ளோரதர்
பின்று வாய்கொலாம்' என்னப் பேசுவான்.

30. 'மனக்கொன் றூதன வரத்தின் நின்னையும்
நினக்கொன் றூநிலை நிறுவி நேமியான்
தனைக்கொன் றூடருந் தனயன் ஆதலால்
எனக்கொன் றூதவம் அடுப்ப தெண்ணினல்.

31. 'நோவ தாகவிவ் வுலகை நோய்செய்த
பாவ காரியிற் பிறந்த பாவியேன்
சாவ தோர்கிலேன்; தவஞ்செய் வேனலேன்;
யாவ னாகியிப் பழிநின் றேறுவேன்?

32. ‘பிறந்து நீயுடைப் பிரிவில் தொல்பதம்
துறந்து மாதவம் தொடங்கு வாயென்றால்
மறந்து நீதியில் திறம்பி வாளிற்கொன்
றறந்தின் றூலென அரச தாள்வெனே?

33. ‘தொகையில் அன்பினல் இறைவன் துஞ்சநீ
புகையும் வெஞ்சுரம் புகுதப் புந்தியால்
வகையில் வஞ்சனய் அரசு வவ்வயான்
பகைவ னேகொலாம் இறவு பார்க்கின்றேன்.

34. ‘உந்தை தீமையும் உலகு றூதநோய்
தந்த தீவினைத் தாய்செய் தீமையும்
எந்தை நீங்கமீண் டரசு செய்’கெனச்
சிந்தை யாவதும் தெரியக் கூறினன்.

இராமர் பதில் கூறத் தொடங்குதல்

35. சொற்ற வாசகத் துணிவு ணர்ந்தபின்
‘இற்ற தோஇவன் மன’மென் றெண்ணுவான்
‘வெற்றி வீரயான் விளம்பக் கே’ளென
மூற்ற நோக்கினன் மொழிதல் மேயினன்.

இராமர் பரதனுக்குச் சமாதானம் கூறுதல்

36. ‘முறையும் வாய்மையும் முயலும் நீதியும்
அறையும் மேன்மையோ டறனும் ஆதியாம்
துறையும் யாவையும் சுருதி நூல்விடா
இறைவர் ஏவலால் இயைவ காண்டியால்.

37. ‘பரவு கேள்வியும் பழுதில் ஞானமும்
விரவு சீலமும் வினையின் மேன்மையும்
உரவி லோய்தொழற் குரிய தேவரும்
குரவ ரேயெனப் பெரிது கோடியால்.

38. 'அந்த நற்பெருங் குரவர் ஆரெனச்
சிந்தை தேர்வுறத் தெரிய நோக்கினல்
தந்தை தாயரென் றிவர்கள் தாமலால்
எந்தை, கூறவே றெவரும் இல்லையால்.

39. 'தாய்வ ரங்கொளத் தந்தை ஏவலால்
மேய நங்குலத் தருமம் மேவினேன்
நீவ ரங்கொளத் தவிர்தல் நீர்மையோ?
ஆய்வ ரும்புலத் தறிவு மேவினய்.

40. 'தனயர் ஆயினர் தந்தை தாயரை
வினையின் நல்லதோர் இசையை வேய்தலோ?
நினைய லோவிடா நெடிய வன்பழி
புனைத லோ? ஐய, புதல்வர் ஆதல்தான்.

41. 'இம்மை பொய்யுரைத் திவறி எந்தையார்
அம்மை வெம்மைசேர் நரகம் ஆளயான்
கொம்மை நன்னிதிக் குவையின் வைகிவாழ்
செம்மை சேர்நிலத் தரசு செய்வெனே?

42. 'வரனில் உந்தைசொல் மரபி னுலுடைத்
தரணி நின்னதென் றியைந்த தன்மையால்
உரனின் நீபிறந் துரிமை ஆதலால்
அரசு நின்னதே ஆள்க' என்னவே.

பரதன் இராமரை வேண்டுதல்

43. 'முன்னர் வந்துதித் துலகம் மூன்றினும்
நின்னை ஒப்பிலா நீபி றந்தபார்
என்ன தாகில்யான் இன்று தந்தனென்
மன்ன, போந்துநீ மகுடம் சூடெனு.

44. 'மலங்கி வையகம் வருந்தி வைகநீ
உலங்கொள் தோளுனக் குறுவ செய்தியோ?

கலங்கு ரூவணங் காத்தி போங்'தெனப்
பொலங்கு லாவுதாள் பூண்டு வேண்டினன்.

இராமர் கூறுதல்

45. 'பசைந்த சிந்தைநீ பரிவின் வையமென்
வசஞ்செய் தாலது முறைமை யோ? வசைக்
கசைந்த எந்தையார் அருள அன்றுநான்
இசைந்த ஆண்டெலாம் இன்றொ டேறுமோ?

46. 'வாய்மை என்னுமீ தன்றி வையகம்
தூய்மை என்றுமொன் றுண்மை சொல்லுமோ?
தீய்மை தானதில் தீர்தல் அன்றியே
ஆய்மெய் யாகவே றறைய லாவதே?

47. 'எந்தை ஏவஆண் டேழோ டேழென
வந்த காலம்நான் வனத்துள் வைகநீ
தந்த பாரகந் தன்னை மெய்ம்மையால்
அந்த நாளெலாம் ஆள்என் ஆணையால்.

48. 'மன்னவ னிருக்க வேயும்
மணியணி மகுடம் சூடு
கென்ன,யா னியைந்த தன்னான்
ஏயது மறுக்க அஞ்சி;
அன்னது நினைந்து நீஎன்
ஆணையை மறுக்க லாமோ?
சொன்னது செய்தி ஐய,
துயருழந் தயரல்' என்றான்.

வசிட்டர் இராமருக்குக் கூறுதல்

49. ஒள்ளியோன் இனைய எல்லாம்
உரைத்தலும் உரைக்க லுற்ற
பள்ளநீர் வெள்ளம் அன்ன
பரதனை விலக்கிப் 'பண்டு

தெள்ளிய குலத்தோர் செய்கை
சிக்கறச் சிந்தை நோக்கி
வள்ளியோய், கேட்டி' என்ன
வசிட்டமா முனிவன் கூறும்.

50. 'இதவியல் இயற்றிய குரவர் யாரினும்
மதவியல் களிற்றினய், மறுவில் விஞ்சைகள்
பதவிய இருமையும் பயக்கப் பண்பினல்
உதவிய ஒருவனே உயரும் என்பரால்.

51. 'என்றலால் யானுனே எடுத்து விஞ்சைகள்
ஒன்றலா தனபல உதவிற் றுண்மையால்,
"அன்"றென தின்றென தாணே ஐய, நீ
நன்றுபோந் தளியுனக் குரிய நா'டென்ருன்.

இராமர் மறுமொழி கூறுதல்

52. கூறிய முனிவனைக் குவிந்த தாமரை
சீறிய கைகளால் தொழுது செங்கணன்
'ஆறிய சிந்தனை அறிஞ, ஒன்றுரை
கூறுவ துள'தெனக் கூறல் மேயினன்.

53. 'சான்றவ ராகதன் குரவ ராகதாய்
போன்றவ ராகமெய்ப் புதல்வ ராகதான்
தேன்றரு மலருளான் சிறுவ, செய்வெனென்
றேன்றபின் அவ்வுரை மறுக்கும் இட்டதோ?

54. 'தாய்பணித் துவந்தன தந்தை செய்கென
ஏயஎப் பொருள்களும் இறைஞ்சி மேற்கொளாத்
தீயஅப் புலையனின் செய்கை தேர்கிலா
நாயெனத் திரிவது நல்ல தல்லதோ?

55. 'முன்னுறப் பணித்தவர் மொழியை யானென
சென்னியிற் கொண்"டது செய்வென்" என்றதன்

பின்னுறப் பணித்தனை பெருமை யோயெனக்
கென்னினிச் செய்வதை உரைசெய் இங்'கென்ருன்.

பரதன், தன் துணிபு கூறுதல்

56. முனிவனும் 'உரைப்பதோர் முறைமை கண்டிலம்
இனி' யென இருந்தனன்; இளைய மைந்தனும்
'ஆணையதேல் ஆள்பவர் ஆள்க நாடுநான்
பனிபடர் காடுடன் படர்தல் மெய்' யென்ருன்.

வானத்தில் இமையவர் கூடி ஆராய்தல்

57. அவ்வழி இமையவர் அறிந்து கூடினர்
'இவ்வழி இராமனை இவன்கொண் டேகுமேல்
செவ்வழித் தன்றுநஞ் செய' லென் றெண்ணினர்
கவ்வையர் விசும்பிடைக் கழறல் மேயினர்.

இமையவர் கூற்று

58. 'ஏத்தரும் பெருங்குணத் திராமன் இவ்வழி
போத்தருந் தாதைசொல் புரக்கும் பூட்சியான்
ஆத்தஆண் டேழிரே டேழும் அங்கிலம்
காத்தலுன் கடனிவை கடமை' என்றனர்.

இராமர், பரதனை வேண்டுதல்

59. வானவர் உரைத்தலும், 'மறுக்கற் பாலதன்
றியானுனை இரந்தனன் இனிஎன் ஆணையால்
ஆனதோர் அமைதியின் அளித்தி பா' ரெனத்
தானவன் றுணைமலர்த் தடக்கை பற்றினன்.

பரதன் சூளுரைத்தல்

60. 'ஆமெனில் ஏழிரண் டாண்டில் ஐய, நீ
நாமநீர் நெடுநகர் நண்ணி நானிலம்
கோமுறை புரிகிலை என்னில் கூரெரி
சாமிது சரதநின் ஆணை சாற்றினேன்.'

இராமர் இணங்குதல்

61. என்பது சொல்லிய பரதன் யாதுமோர்
துன்பிலன் அவனது துணிவை நோக்கினன்
அன்பினன் உருகினன் 'அன்ன தா'கென்ருன்
தன்புகழ் தன்னினும் பெரிய தன்மையான்.

இராமர்திருவடிநிலையைப் பரதன் பெறுதல்

62. விம்மினன் பரதனும் வேறு செய்வதொன்
றின்மையின் அரிதென எண்ணி ஏங்குவான்
'செம்மையின் திருவடித் தலந்தந் தீ'கென
எம்மையும் தருவன இரண்டும் நல்கினன்.

பரதன் தொழுது மீளுதல்

63. அடித்தலம் இரண்டையும் அழுத கண்ணினன்
'முடித்தலம் இவை'என முறையிற் சூடினன்
படித்தலத் திறைஞ்சினன் பரதன் போயினன்
பொடித்தலம் இலங்குறு பொலங்கொள் மேனியான்.

— கம்பர்.

3. வில்லிபுத்தூராழ்வார் பாரதம்

ஆரணிய பருவம்

நச்சுப்பொய்கைச் சருக்கம்

துரியோதனன் செய்வித்த வேள்வியை யமதருமன் அறிந்தது

1. இப்பால் இவ்வா ரூமஞ்செய்
திவனிப் பூதம் இனிதெழுப்ப
அப்பா லிருந்த வனசரிதர்
ஐவர்க் கமைந்த வாறுரைப்பாம்
மூப்பா லினுக்கு மூதற்பாலாய்
மும்மைப் புவனங் களுங்காக்குந்
தப்பா வாய்மை அறக்கடவுள்
அறிந்தான் எண்ணம் தப்புவிப்பான்.

பாண்டவர் தங்கியிருக்கும் வனத்தில், பார்ப்பனச்சிறுவன்து மான்றோலை மான் எடுத்துச் செல்லுதல்

2. தன்மைந் தனுமத் தம்பியரும்
சரியா நின்ற தபோவனத்து
நன்மைந் தரிலோர் முனிமைந்தன்
நன்னூ லுடன்பூண் அசினத்தை
வின்மைந் தரையும் மதியாமல்
விரைந்துட் புகுந்து விசைத்தகல்வான்
தொன்மைந் தனைப்போல் ஓருழைகொண்
டோடிற் றென்னல் சொலவுண்டோ!

பாண்டவர்கள் அதனை யறிந்து மானைத் தொடர்ந்து செல்லுதல்

3. மறைவாய்ச் சிறுவன் 'கலைத்தோலை
மான்கொண் டோடி வானிடையில்
பொறைவாய்ப் புகுந்த தபயம்'எனப்
புகுந்தாங் கழுது புலம்புதலும்

நறைவாய்த் தொடையல் அறன்மகனும்
இளைய வீரர் நால்வருந்தம்
துறைவாய்ச் சிலையோ டம்பேந்தித்
தொடர்ந்தார் அதனைச் சூழ்புலிபோல்.

4. அகப்பட் டதுபோல் முன்னிற்கும்;
அருகெய் தலுங்கூர் ஆசுகம்போல்
மிகப்பட் டோடும்; தோன்றாமல்
வெளிக்கே ஒளிக்கும்; விழியிணைக்கு
முகப்பட் டிடுமீண் டைவருந்தம்
முரண்டோள் வன்மை தளர்வளவும்
தகைப்பட் டொழிந்தார் அதிலாசை
ஒழிந்தார் இந்த்ர சாலமென.

யமதருமன் நச்சுச்சுனையா யமைந்திருத்தல்

5. 'கானீ திவர்க்குத் தலைதெரியாக்
கானம் கருத்து மிகக்கலங்கிப்
பானீ யத்துக் கைவருமெய்
பதையா நிற்பர்' என அறிந்து,
தூநீர் நச்சுச் சுனையாயச்
சுனைசூழ் வரவோர் தொன்மரமாய்
யானீ அவனென் றெண்ணாமல்
எல்லாம் ஆனேன் இருந்தானே.

தருமன் நீர்கொணருமாறு சகதேவனை அனுப்புதல்

6. தருமனும் தம்பி மாரும்
தாலுவும் புலர்ந்து தாகத்
துருகிய மனத்த ராகி
உடல்தளர்ந் தயரும் ஆங்கண்

எரியுறு கானம் போல்வான்
இளவலை நோக்கி, ' இன்னே
மருவரும் புனல்கொண் டோடி
வருதிநீ விரைவின் ' என்றான்.

சகதேவன் நச்சுப்பொய்கையை யடைந்து நீர்பருகுதல்

7. அக்கணத் தினிற்சா தேவன்
அடவிகள் தோறும் தேடி
எக்கணுங் காணு ஞகி
என்றுதோய் குன்றொன் றேறி
மிக்கவண் சீத வாச
விரிசுனை ஒன்று காணுப்
புக்கனன் பருக லுற்றான்
பொலிவறப் புலர்ந்த நாவான்.

தருமன், நகுலனையும் விசயனையும் முறையே அனுப்புதல்

8. செழும்புனல் உதரந் தன்னிற்
சேருமுன் ஆவி பொன்றி
விழுந்தமை அறிவு ருது
மீளவும் நகுலன் றன்னை
அழுங்கினன் ஏவச் சென்றான்
அவனுமப் பரிசின் மாய்ந்தான்;
எழும்படை விசயன் றன்னை
ஏவினன் அவனும் போனான்.

விசயன் நீர்பருகி இறத்தல்

9. தம்பியர் கிடந்த தன்மை
கண்டுமத் தலைவன் மேன்மேல்
வெம்புறு கொடிய தாக
மிகுதியால் விரைந்து வாரிப்

பைம்புனல் அருந்தி அவ்வா
றிறந்தனன்; பரிதா பத்தோ
'டெம்பியர் என்செய் தார்!'என்
றிறைவனும் இனைந்து சோர்ந்தான்.

வீமன் சென்று பொய்கையைக் கண்டு,
அது நச்சுப்பொய்கை எனத் துணிதல்

10. வீமனங் கவனைத் தேற்றி
மெலிவுறு சோகத் தோடும்
இமமொத் தெரியுங் கானம்
எங்கணும் திரிந்தங் கெய்திச்
சாமுறைத் தம்பி மாரைக்
கண்டருந் தடத்து நீரை
ஆமெனக் கருதா 'தாலம்
ஆகு'மென் றகத்திற் கொண்டான்.

வீமன், விசயனைக்கண்டு வருந்துதல்

11. குசையுடைப் புரவித் திண்டேர்க்
குரக்குவெம் பதாகை யானை
அசைவில்பொற் சயிலம் அன்ன
ஆண்டகை மனத்தி னானைத்
திசையனைத் தினுந்தன் நாமம்
தீட்டிய சிலையின் வெம்போர்
விசையனைத் தன்கண் ணீரால்
மெய்குளிப் பாட்டி னானே.

வீமன், நகுலசகதேவரைக் கண்டு வருந்துதல்

12. நற்றுணைச் சிறுவ னோடு
நகுலனை நோக்கி, 'அந்தோ
எற்றுணை இழந்தேன்' என்னும்;
'என்செய்வ தினிநான்' என்னும்;

‘முற்றுணே வனும்அக் கானில்
முடிந்திடு மொழிய வேறோர்
பிற்றுணே காண்க லாதேன்
யாரொடு பேசு வேனே.

வீமன் மணலில் எழுதிவிட்டு நீர்பருகுதல்

13. ‘மணிமுர சுயர்த்தோன் இண்டு
வருதலுங் கூடும்; வந்தால்
அணிதரு நச்சுத் தோயம்
அருந்தவும் கூடும்’ என்னுப்
பணியுடன் செய்வான் போலப்
பருமண லேட்டிற் கையால்
துணிவுற எழுதி அந்தத்
தோயமே தானுந் துய்த்தான்.

தருமன் தனியனுதல்

14. ஆருயிர் பொன்றுங் காலே
அமுதமும் விடமாம் என்று
பாருளோர் உரைக்கும் மாற்றம்
பழுதறப் பலித்த காலே,
மாருதி முதலா வுள்ள
மன்னவர் நால்வர் தம்மோ
டோருயி ரான மற்றை
ஒருவனே ஒருவ னுனன்.

தருமன் சோகத்தால் சோர்ந்து வீழ்தல்

15. கட்புல னுக வேறோர்
உயிரையும் காண்க லாத
வெட்புலந் தன்னிற் சோகம்
மிஞ்சவே தாகம் விஞ்சி

உட்புலன் அழிந்து பின்போம்
உள்ளமோ டுயங்கி வீழ்ந்தான்
நட்புலந் தவரால் முன்னம்
கானகம் நண்ணி னானே.

காளமாமுனி, வேள்வியிற் றோன்றிய பூதத்திற்குப் பணித்தல்

16. இங்கிவர் உயங்கி வீந்த
எல்லையில், எரிசெய் ஓமத்
தாங்கவண் எழுந்த பூதம்
அம்முனி தன்னை நோக்கிப்
'பாங்குடன் புரியும் ஏவல்
பணித்தருள்' என்ன, நெஞ்சில்
தீங்கிலா முனியும் பூத
அரசுடன் செப்பு வானே.

17. 'நின்றிடா திமைப்பிற் குந்தி
மைந்தராய் நெடிய கானில்
துன்றிடா வைகும் வேந்தும்
துணைவரும் இருந்த சூழல்
சென்றிடா ஒன்றாய் ஐந்து
செயற்கையாம் உடலைச் சேரக்
கொன்றிடா வருதி' என்று
கூறிய உறுதி கேளா.

பூதம் முனிவனுக்குக் கூறுதல்

18. ஐம்பெரும் பூதம் ஒக்கும்
அப்பெரும் பூதம் சாதிச்
செம்பொனின் ஒளிரும் மேனித்
தெய்வமா முனியை நோக்கி

'வெம்புகான் உறைவோர் இன்றென்
விழிக்கிலக் கல்ல ராஞல்
எம்பிரான், நினையே கொல்வன்'
எனத்தொழு தேகிற் றன்றே.

பூதம் காடுசென்று தருமனைக் காண்டல்

19. காட்டுறு கோடை வெப்பம்
களைகுவான் கரிய மேக
மோட்டுருக் கொண்டு மின்ஞல்
முளைத்தெழும் எயிறு தாங்கித்
தோட்டுணைப் புடைகொண் டெங்கும்
சூறைபோல் மரங்கள் வீழ்த்திக்
காட்டுறை வாழ்க்கை யானைக்
கண்ணுறக் கண்ட தன்றே.

20. 'அந்தணன் சொன்ன வேந்தர்
ஐவரில் அறஞல் வந்த
மைந்தன்மற் றிவனே ஆவி
மாய்ந்ததோர் வடிவ ஞகிச்
சந்தனத் தருவிற் சார்ந்து
சாய்முடித் தலைய ஞகி
மந்திரம் மறந்த விஞ்சை
மாக்களின் வடிவு சோர்ந்தான்.

பூதம் வீமன்முதலியோரைக் காண்டல்

21. 'சிறந்தமெய்ந் நிழல்போல் சூழுந்
துணைவரும் சேர விட்டுத்
துறந்தனர் போலும் யாண்டும்
துப்பிலா வெப்பந் தன்ஞல்

இறந்தனன் இவனும் மற்றிங்
கென்செய்வேன்' என்றென் றெண்ணி
நிறைந்தநீர்ச் சுனையில் மற்றை
நிருபர்நால் வரையுங் காணா.

பூதம் வருந்தி எண்ணுதல்

22. 'பச்செனும் புனலான் மிக்க
பங்கயச் சுனையுங் கொல்லும்
நச்சுவெஞ் சுனையே போலும்
நால்வருஞ் சேர மாண்டார்
இச்சுனை அருந்திப் போலும்
என்னினைந் தேது செய்தார்!
நிச்சயங் கொடிது கெட்டேன்!
இந்தநிட் டூரம் என்னே!

பூதம் மீண்டுசெல்லுதல்

23. 'காவலன் வார்த்தை கேட்டுக்
காளமா முனிவன் என்னும்
நாவலன் ஓமத் தீயின்
நம்மையுற் பவித்து விட்டான்
மேவலர் கொல்லு முன்னே
வீந்தனர் இந்தப் பாவம்
கேவலம் அல்ல' என்று
கிளர்சினம் மூண்டு மீண்டே.

பூதம் காளமாமுனியிடங் கூறுதல்

24. 'காலங்கண் மூன்றும் எண்ணுங்
கடவுள்நீ கலக்கம் எய்தி,
ஞாலங்கொள் நசையின் இல்லா
நயனிதன் மகன்சொற் கேட்டுச்

சீலங்கொள் வாய்மை யாய், செந்
தீயெழு கானிற் சின்னீர்
ஆலங்கொல் பான்மை யாரை
யார்கொல்வான் அருளிச் செய்தாய்?

பூதம், காளமாமுனியைக் கொல்லுதல்

25. 'நீயிதற் கிலக்க மாகி
நின்றனை' என்று கோபத்
தீயெழப் பொடிக்குங் கண்ணும்
சிரிப்பெழும் எயிறு மாகி
மூவிலைச் சூலந் தன்னால்
முனிதலை துணிந்து வீழ
ஏவலிற் பழுதில் பூதம்
இவனையே எறிந்த தன்றே.

தருமன் உணர்வடைதல்

26. மூச்ச றப்புலர்ந் துயங்கிய முரசவெங் கொடியோன்
மாச்சி னைத்தடஞ் சந்தன மகீருக நிழலில்
வீச்சு றப்பயில் தென்றலால் மெய்யுயிர் எய்தி
நாச்சு வைப்படு ஞானநன் மந்திரம் நவிலா.

தருமன், தம்பியரை நினைத்தல்

27. தனைப்ப யந்தநற் றருமதே வதைதிரு வருளால்
வினைப்ப யன்களால் உறுதுயர் யாவையும் வீட்டிச்
சுனைப்பெ ரும்புனற் றுகமும் அடிக்கடி தோன்ற
நினைப்பும் எய்தியத் தம்பியர் தம்மையும் நினைந்தான்.

தருமன் சென்று தம்பியரைக் காணுதல்

28. ஆன தன்மன வலியுடன் ஆண்டுநின் றெழுந்து
கான கத்திடை நீங்கிய அறன்றரு காளை
போன தம்பியர் சேவடிச் சுவட்டினிற் போயத்
தூநி றப்புனல் உண்டுவீழ் துணைவரைக் கண்டான்,

29. ஊறி லாமைகண் 'டுடற்றினர் இல்'லென உணர்ந்து,
'மாறி லாதவர் எங்ஙனம் ஆருயிர் மாய்ந்தார்?
சேறி லாதவெஞ் சுரத்திடைச் செழும்புனல் நுகரும்
பேறி லாமையின் இறந்தனர் போலுமிப் பெரியோர்.'

தருமன், வீமன் எழுதியதைக் கண்டு செய்தி யறிதல்

30. அண்ட கோளகை அனையதோர் ஆதபத் திரத்தால்
மண்ட லங்களீ ரொன்பதும் புரந்திட வல்லான்
சண்ட மாருதி எழுதிய தாழ்மணல் எழுத்தைக்
கண்டு 'நஞ்சமிக் கயத்தறல்' என்பது கண்டான்.

தருமன் நச்சுநீர் பருகச் செல்லுதல்

31. 'வெஞ்ச மஞ்செய வருவர்கொல் மீண்டுமென் றரு
வஞ்சகன் செய்த வஞ்சனை இது'வென மதித்து[ளில்
நஞ்ச நீர்கொடு தானுந்தன் நாவினை நனைக்கும்
நெஞ்ச னாகியந் நிறைபுனற் கயத்திடை நேர்ந்தான்.

அசரீரி தருமனுக்குக் கூறுதல்

32. திருந்து நல்வரைச் செங்கையால் அள்ளிய நீரை
அருந்தும் அவ்வயின், அகல்விசும் பிடையசரீரி
'கருந்த டம்புனல் நஞ்சிது நுகர்வது கருதேல்;
விருந்தர் நால்வரும் என்மொழி கேட்டிலர் வெய்யோர்.

33. 'உன்னை யான்வின வுரைதனக் குத்தரம் உரைத்துப்
பின்னை நீநுகர் பெறுதுபெற் றனையவிப் புனலை
அன்னை போலுயிர் அனைத்தையும் புரந்திடும் அரசே,
என்னை யோபெருந் தாகம்விஞ் சிடினுமின்' றெனவே.

தன்னை வினவுமாறு தருமன் வேண்டுதல்

34. பெருக லம்பெறு மகனையப் பேரறக் கடவுள்
இருவி சும்பினில் அருவமாய் இயம்பிய மாற்றம்
திருவு ளந்தனிற் கொண்டுதன் செங்கைநீர் வீழ்த்திப்
பொருவி லாமகன் 'புகலுவ புகறிநீ' என்றான்.

வினவும் விடையும்

35. சொல்லு நூல்களிற் பெரியதே தரியமெய்ச் சுருதி
இல்ல றத்தினுக் குரியதே தெண்ணுடை இல்லாள்
மல்லல் மாலையில் மணமுள தேதுவண் சாதி
நல்ல மாதவம் ஏதுதங் குலம்புரி நடையே.

36. முனிகு லந்தொழு கடவுள்யார் மொய்துழாய் முகுந்தன்
நனைம ணங்கமழ் குழலினர்க் கியற்கையா ததுநாண்
தனமி குந்தவர்க் கேதரண் தகைபெறு தானம்
இனிய தேதிரு செவிக்கிளங் குதலையர் இன்சொல்.

37. நிற்ப தேதுகொல் நீடிசை ஒன்றுமே நிற்கும்
கற்ப தேதுகொல் கசடறக் கற்பதே கல்வி
அற்ப மாவதே தனைத்தினும் அயற்கரத் தேற்றல்
'சிற்ப மாமிவை செப்'பெனச் செப்பினன் சிறுவன்.

யமதருமன் கூறுதல்

38. இவ்வ கைப்பல வினவலும் இயம்பிய மகனை
அவ்வ யிற்பெரி துவந்துகண் ணினுக்கிலக் காகிச்
செவ்வ யிற்பொலஞ் சிலம்பெனச் சேர்ந்துமெய் தழுவி
வெவ்வ யிற்புரி விரகெலாம் விளம்பினன் மாதோ.

39. அறப்பெருங் கடவுளென் றறிந்து தாதையைச்
சிறப்புடன் சேவடி சென்னி சேர்த்திய
மறப்பெரும் புதல்வனை மகிழ்ந்து 'நும்பியர்
இறப்பினை ஒழிப்பதற் கேது உண்டெனு.

40. 'நச்சுநீர் குடித்துயிர் நீத்த நால்வரின்
உச்சமாம் அன்புடை ஒருவன் றன்னைநீ
இச்சையான் இம்மறை இயம்பி எண்ணியோர்
அச்சமற் றழை'யென அருள்செய் தானரோ.

தருமன், மந்திரத்தால் சகதேவனை எழுப்புதல்

41. தாதைகூ றியமறை தனைக்கொண் டேசுதன்
ஏதமுற் றிடாவகை இளைய தம்பியை
ஊதைவந் துள்புக உணர்ச்சி நல்கினன்
வேதமும் நிகரிலா விரத வாய்மையான்.

யமதருமன் வினவுதல்

42. கண்டுநின் றறப்பெருங் கடவுள் 'வாயுவின்
திண்டிறல் மாமகன், தேவர் கோமகன்
மண்டழல் விடத்தினன் மடிய மாமருத்
தண்டர்நல் கிளவலை அழைத்த தென்?' என்றான்.

தருமன் விடையிறுத்தல்

43. 'குத்திரம் இலாமொழிக் குந்திக் கியானொரு
புத்திரன் உளனெனப் புரிந்து நல்கினாய்;
மத்திரிக் கொருமக வில்லை வல்லவர்
சித்திரம் வகுத்தெனத் திகழும் மேனியாய்.'

யமதருமன் மறைகளும் படைகளும் வழங்குதல்

44. என்றுதன் தந்தையோ டியம்பத் தந்தையும்
மன்றலந் தொடைமுடி மைந்த னுக்கமர்
வென்றிடு மறைகளும் வில்லொ டேவுவேல்
என்றபல் படைகளும் யாவும் நல்கினன்.

தருமன் முதலியோர் யமதருமனை வணங்கித் தமது வனத்தை அடைதல்

45. தம்பியர் அனைவரும் தத்தம் ஆவிபெற்
றும்பரிற் றலைவனும் உரிய தந்தையை
வம்பவிழ் மலரடி வணங்கி நெஞ்சுடன்
அம்பக மலர்ந்துதம் அடவி எய்தினர்.

— வில்லிபுத்தூராழ்வார்.

4. பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற்புராணம்

விறகுவிற்ற படலம்

ஏமநாதன் என்னும் பாணன் மதுரையை யடைதல்

1. மன்றலங் தெரியல் மார்பன்
வரகுணன் செங்கோ லோச்சிப்
பொன்றலங் காவ லானிற்
பொலியும்நாள், ஏம நாதன்
என்றொரு விறல்யாழ்ப் பாணன்
வடபுலத் திருந்தும் போந்து
வென்றிகொள் விருதி னோடும்
விஞ்சைசூழ் மதுரை சார்ந்தான்.

ஏமநாதன் பாண்டியனவையிற் பாடுதல்

2. பூழியர் பெருமான் கோயில்
புகுந்துவேத் தவையத் தெய்திச்
சூழிமால் யானை யானைத்
தொழுதுபல் புகழ்கொண் டாடி,
ஏழிசை மழலை வீணை
இடந்தழீஇச் சுருதி கூட்டி
வாழியின் னிசைத்தேன் மன்ன
னஞ்செவி வழியப் பெய்தான்.

ஏமநாதன் பரிசில்பெற்றுச் செல்லுதல்

3. முகையுடைந் தவிழ்ந்த மாலை
முடித்தலை துளக்கித் தூசு
பகலவிர் மணிப்பூண் நல்கிப்
பல்லுணக் கருவி நல்கி

அகன்மனை வேறு காட்டி
அரசர்கோன் வரிசை செய்ய,
இகலறு களிப்பி னேடும்
இசைவல்லான் இல்லிற் புக்கான்.

பாண்டியன், பாணபத்திரரை வருவித்தல்

4. மீனவன் வரிசை பெற்ற
செருக்கினும் விருதி னனும்
மானமேற் கொண்டு, தன்னே
டின்னிசை பாட வல்ல
தானயாழ்ப் புலவர் வேறிங்
கில்லெனத் தருக்குஞ் செய்தி
கோனறிந் துழையர்க் கூவிப்
'பத்திரற் கொணர்திர்' என்றான்.

பாண்டியன் வினவ, பாணபத்திரர் கூறத்தொடங்குதல்

5. உழையரால் விடுக்கப் பட்ட
பத்திரன் உவரி வென்றோன்
கழல்பணிந் தருகு நிற்பக்
கௌரியன் நோக்கிப் 'பாணி
பழகிசை வல்லா னேடும்
பாடுதி கொல்லோ?' என்ன,
மழலையாழ் இடந்தோள் இட்ட
பாணர்கோன் வணங்கிச் சொல்வான்.

பாண்டியன், பாணபத்திரருக்கு ஆணைதந்து விடுத்தல்

6. 'தென்னவர் பெரும, யானுன்
திருவுள வலனும் கூடல்
முன்னவ னருளு மூட்டு
முயற்சியான் முயன்று பாடி,

அன்னவன் விருது வாங்கி
அவனைவீ றழிப்பன்' என்றான்
மன்னவன் 'நாளைப் பாடு;
போ'கென வரைந்து சொன்னான்.

ஏமநாதன்பாற் கற்பவர் வீறு தோன்றத் திரிதல்

7. இற்கண்ணே இசைவல் லான்போய்
இருந்துழி, அனையான் பாங்கர்க்
கற்கும்பாண் மக்கள் மல்ல
லாவணம் கவலை மன்றம்
பொற்குன்றம் அனைய மாட
மறுகெங்கும் போகிப் போகிச்
சொற்குன்ற வகையாற் பாடித்
திரிந்தனர் வீறு தோன்ற.

பாணபத்திரர் ஏமநாதனை
வெல்லுவது எவ்வாறு என்று எண்ணுதல்

8. இவ்விசை கேட்டு 'நன்'றென்
றதிசயித் 'திசைவல் லான்பால்
வவ்விசை மைந்தர் பாடும்
வண்ணமீ தென்னை கெட்டேன்!
அவ்விசை வல்லான் பாடு
முறையெற்றோ! அவனை நாளைச்
செவ்விசை பாடி வெல்வ
தெவன்?'எனத் திவவுக் கோலான்.

பாணபத்திரர்
சோமசுந்தரக்கடவுளை வணங்கித் தம் மனை புகுதல்

9. மையணி மிடற்றி னானை
மதுரைநா யகனை வந்தித்
'தையனே அடியேற் கின்றுன்
அருட்டுணை செய்யல் வேண்டும்

மெய்யனே' என்று போற்றி
வேண்டுகொண் டன்பு தோய்ந்த
பொய்யறு மனத்தான் இல்லம்
புக்கினி திருந்தான் இப்பால்.

சோமசுந்தரர், விறகுவிற்போன்வடிவங் கொள்ளுதல்

10. வருத்த னாகிவந் திருந்தவ னிசைப்பகை மாற்ற
விருத்த னும்விற காளென விண்ணிழி விமானத்
தொருத்த னாறி வாகிய உண்மையா னந்தத்
திருத்த னார்தம திச்சையால் திருவுருக் கொள்வார்.

சோமசுந்தரர் விறகு சுமந்து செல்லுதல்

11. தறிந்த இந்தனந் தினந்தொறும் தாங்கிநீள் பங்கி
பறிந்து தேய்ந்தழுந் தியதலை யுடையராய்ப் பரிந்து
மறிந்த கங்கையும் பங்குறை மங்கையுங் காணு
தெறிந்த இந்தனச் சுமைதிரு முடியின்மேல் ஏற்றி.

12. நடந்து, கொள்ளுநர்க் கருவிலை பகர்ந்துநான் மாடம்
மிடைந்த வீதியும் கவலையும் முடுக்கரும் மிடைந்து
தொடர்ந்த வேதமும் பிரமன்மால் சூழ்ச்சியும் பகலுங்
கடந்து போகியவ் விசைவலான் கடைத்தலைச் செல்வார்.

மாலைக்காலம் வருதல்

13. திங்கள் வாணுதல் முயற்கறைத் திலகமும் சிவந்த
மங்கு லாடையும் மயங்கிரு ளோதியும் வான்மீன்
பொங்கு மாரமும் பொலிந்துதன் கொண்கனைப் [பொருப்பன்
மங்கை தேடிவந் தாளென வந்தது மாலை.

சோமசுந்தரர் பாடுதல்

14. எடுத்த இந்தனம் ஒருபுறத் திறக்கியிட் டூன்றி,
அடுத்த வன்புறந் திண்ணைமீ தமர்ந்திளைப் பாறித்
தொடுத்த இன்னிசை சிறிதெழீஇப் பாடினர் 'சுருதி
மடுத்தி யாரவன் பாடுவான்?' என்றிசை வல்லான்.

சோமசுந்தரர், ஏமநாதனுக்குக் கூறுதல்

15. வண்டறை கொன்றை யான்முன்
வந்து'நீ யாரை?' என்றான்
'பண்டரு விபஞ்சிப் பாண
பத்திர னடிமை' என்றான்
முண்டக மலரோன் மாயோன்
புரந்தரன் முதல்மற் றேனை
அண்டரும் தன்குற் றேவல்
அடிமையாக் கொண்ட அம்மான்.

16. 'கனியிசைக் கிழவன் றன்கீழ்க்
கற்பவ ரனேகர் தம்முள்
நனியிசைக் கிழமை வேட்டு
நானுமவ் வினைஞ னானேன்;
தனியிசைக் கிழவன் நோக்கித்
"தசையெலாம் ஒடுங்க மூத்தாய்;
இனியிசைக் கிழமைக் காகாய்"
என்றெனைத் தள்ளி விட்டான்.

சோமசுந்தரர் மீண்டும் பாடுதல்

17. '"வெவ்விற கெறிந்து கட்டி
விலைபகர்ந் தேனும் ஐய,
இவ்வயி றோம்பு கே"னென்
றித்தொழில் பூண்டேன்' என்ன,
நய்வளந் தெரிந்த ஏம
நாதனும் 'விறகு மள்ளா,
அவ்விசை யொருகால் இன்னும்
பா'டென ஐயன் பாடும்.

18. விரைசார் மலரோன் அறியா விகிர்தன்
அரைசாய் மதுரை அமர்ந்தான் என்னே!

அரைசாய் மதுரை அமர்ந்தான் அவனென்
புரைசார் மனனும் புகுந்தான் என்னே!

சோமசுந்தரர் பாடிய இசையின் சிறப்பு

19. பைத்தலை விடவாய் நாகம்
பல்பொறி மஞ்ஞை நால்வாய்
மத்தமான் அரிமான் புல்வாய்
வல்லியம் மருட்கை எய்தித்
தத்தமா றறியா வாகித்
தலைத்தலை மயங்கிச் சோர
இத்தகை மாவும் புள்ளும்
இசைவலைப் பட்ட அம்மா!

20. வன்றரை கிழிய வீழ்போய்
வான்சினை கரிந்து நின்ற
ஒன்றறி மரங்க ளெல்லாம்
செவியறி வுடைய வாகி
மென்றளி ரீன்று போது
விரிந்துகண் ணீருஞ் சோர
நன்றறி மாந்தர் போல
நகைமுகம் மலர்ந்த மாதோ.

21. கண்ணிறை நுதலோன் சாம
கண்டத்தின் எழுந்த முல்லைப்
பண்ணிறை தேவ கீதம்
சராசர வுயிரும் பாரும்
விண்ணிறை திசைக ளெட்டும்
விழுங்கித்தன் மயமே யாக்கி
உண்ணிறை யுயிரும் மெய்யும்
உருக்கிய திசைவல் லானே.

சோமசுந்தரர் மறைந்து போதல்

22. சிந்தை தோயுமைம் பொறிகளுஞ் செவிகளாப் புலன்கள்
ஐந்தும் ஓசையா இசைவலான் இருந்தன னாகப்
பந்த நான்மறை நாவினுற் பத்திர னாளாய்
வந்து பாடினார் இந்தனச் சுமையொடு மறைந்தார்.

ஏமநாதன் கவலுதல்

23. 'யான றிந்தசா தாரியன் றிம்பருள் இதனை
"நான றிந்த"தென் றொருவரும் நவின்றிலர் தேவ
கானம் இதிவற் குணர்த்தினேன் கடவுளே யன்றி
ஏனை மானிடர் வல்லரோ? இதுவியப்' பென்னா.

24. 'இழுக்கி விட்டவிக் கிழமக னிசையிதேல் அந்த
வழுக்கில் பத்திரன் பாடலெற் றோ! என மதியா
அழுக்கம் உற்றெழுந் திசைவலா னடுத்ததன் பண்டர்
குழுக்க ளுங்குலை குலைந்திட இருள்வழிக் கொண்டான்.

சோமசுந்தரர், பாணபத்திரர்கனவில் தோன்றுதல்

25. அன்று பத்திரன் கனவில்வந் தாடலேற் றழகர்
'இன்று பத்திர, இசைவலா னிடைவிற காளாய்ச்
சென்று, "பத்திர னடிமையாம்" என்றுபாண் செய்து
வென்று பத்திரஞ் செய்துநின் வேண்டுகோள்' என்றார்.

பாணபத்திரர் வருந்திக் கூறுதல்

26. கண்ம லர்ந்தெழு பத்திரன்
கரையிலா வுவகை
உண்ம லர்ந்தெழும் அன்புகொண்
டுக்கவெங் கதிரோன்
விண்ம லர்ந்தெழு முன்புபோய்,
விசும்பிழி கோயிற்
பண்ம லர்ந்தநான் மறைப்பொரு
ளடித்தலம் பணிந்தான்.

27. 'கடிய கானகம் புகுதவோ! கட்டிய விறகை
முடியி லேற்றவோ! முண்டகத் தாள்கணொந் திடவந்
தடிய னேன்பொருட் டடாதசொற் பகரவோ! வஞ்சக்
கொடிய னேன்குறை யிரந்தவா! விளைந்ததே குற்றம்!

28. 'நெடிய னேமுதல் வானவர் நெஞ்சமும் சுருதி
முடிய னேகமுங் கடந்தநின் முண்டகப் பாதம்
செடிய னேன்பொருட் டாகவிச் சேணிலந் தோய்ந்த;
அடிய னேற்கெளி தாயதோ ஐய,நின் பெருமை!'

பாணபத்திரர் பாண்டியனைக் காணுதல்

29. என்ன வந்தனை செய்துநின் றேத்தியங் கயற்கண்
மின்ன மர்ந்தபங் கொருவனை வலங்கொடு மீண்டு,
மன்னர் தம்பிரா னாகிய வரகுண தேவன்
றன்னை வந்தடி பணிந்தனன் தந்திரிக் கிழவோன்.

பாண்டியன், ஏமநாதனை அழைக்க ஏவலரை விடுத்தல்

30. வந்த ஏழிசைத் தலைமகன் வரவறிந் தரசன்
'அந்த ஏழிசைக் கிழவனை அழை'என, உழையோர்
பந்த யாழ்மக னிருக்கைபோய்ப் பார்த்தனர் காணார்;
சிந்தை யாகுல மடைந்தவன் போனவா தெரியார்.

31. 'எங்கு ளான்?'எனத் தேடுவா ரிவரெதிர் அயல்வாய்
அங்கு ளார்சிலர் அறிந்தவா றறைகுவார் 'அவனேற்
றிங்கு ளான்விற கெடுத்தொரு முதுமகன் இவன்பாற்
பொங்கும் ஏழிசைப் பத்திர னடிமையாய்ப் போந்தான்.

ஒற்றர் பாண்டியனிடங் கூறுதல்

32. 'பாடி னான்பின்பு பட்டது தெரிகிலேம்; பாணன்
ஓடி னான்'எனக் கேட்டலும் ஒற்றர்போய்க் கொற்
கூடி னனவை அடைந்தவர் சொல்லிய வாறே[றஞ்
ஆடி னார்வியப் படைந்தனு மானமுற் றரசன்.

பாணபத்திரர் பாண்டியனிடங் கூறுதல்

33. தன்ன டைந்தவத் தந்திரித் தலைவனை நோக்கி
'என்ன வாறவன் போனவா றிங்கினும் போன
பின்னை யாதுநீ செய்தனை ?' என இசைப் பெருமான்
தென்னர் கோனடி தொழுதுதன் செய்தியை மொழிவான்.

பாணபத்திரர் கூறியது கேட்டுப் பாண்டியன் எண்ணுதல்

34. ஏவன் மைந்தர்போய்
விளங்கிவந் திசைத்ததும் வீணைக்
காவ லன்கனு நிகழ்ச்சியும்
ஒத்தலின், கைக்கும்
பூவ லங்கலான் 'இதுநம்
பொன்னகர்க் கூடற்
றேவர் தம்பிரான் றிருவிளை
யாட்'டெனத் தெளிந்தான்.

பாண்டியன், சோமசுந்தரரைப் பணிதல்

35. இகழ்ந்த கூற்றெறி சேவடிக் கிடையறு நேயந்
திகழ்ந்த பத்திர னன்பையும் தேவரைக் காப்பான்
அகழ்ந்த ஆழிநஞ் சுண்டவ னருளையும் வியந்து
புகழ்ந்து போய்மது ராபுரிப் புனிதனைப் பணியா.

பாண்டியன், பாணபத்திரருக்குச் சிறப்புச் செய்தல்

36. பத்தர் யாழிசைக் கிழவனைப் பணைக்கைமா னெருத்தில்
வைத்து மாடநீள் நகர்வலஞ் செய்வித்து மலர்ந்த
சித்தம் ஆழ்ந்திட வரிசைகள் மிதப்புறச் செய்து
தத்து மான்றேரடைத் தேரினன் தன்மனை புகுவான்.

— பரஞ்சோதி முனிவர்.

5. ஸ்ரீமத் குமாரசுவாமியம்

ஒன்பதாவது

வீரமாகேந்திரத் திருவிளையாடல்

(முதற்பத்து. வீரபாகுதேவர் முன்னிலை)

1. 'சூர னெஞ்ச நிலைய றிந்து
சொல்'லெ னச்செவ் வேளினல்
நீர லம்பு செந்தி நின்று
போக விட்ட னெய்தைமா
வீரம் விஞ்சு வீர பாகு
விண்டு கந்த மாதனம்
ஆர நின்று விசுவ ரூபம்
ஆய வாசி பாய்ந்தனன்.

2. பாய்ந்த போதி லங்கை யின்வ
டாது பம்பு சேனைகள்
வாய்ந்த வீர சிங்கன் யாளி
வதனன் மைந்தன் முதலினோர்
காய்ந்தெ திர்ந்து பொன்றி னார்கள்
காளை சூரன் மூதனகர்
ஏய்ந்த வுத்த ரங்கி ழக்கி
யங்கு தானை கண்டனன்.

3. வீரர் வெள்ளம் நாலு மங்கு
மேவு கோர னோடதி
கோர னிற்கு நிலையு ணர்ந்து
கொண்டு தெற்கு வாயில்போய்
இர மற்ற ஆயி ரங்க
யச்சி ரத்தன் இரியுமா
றேர லங்கு கால்கொ டேகு
ழைத்து மேலை எய்தினான்.

4\. மாவு டம்ப டக்கி மேலை
வழியி னுட்பு குந்துகோன்
மேவு மன்ற மெய்தி மாண
நிந்த னன்செவ் வீரன்வேற்
றேவு மந்த வீர னெண்ணு
மாறெேர் சீய வாசனம்
ஆவ யிற்றி கழ்ந்தி டச்செய்
தானெ லாரும் மெச்சவே.

5\. மன்னு றுப்பி னெழிலெ றிப்ப
வாள்கொள் மஞ்செ றிப்பநற்
புன்ன கைப்பி ளெளியெ றிப்ப
அப்பொ னுச னத்தமர்
கொன்ன லத்த னைக்க ணுற்று
'நீயு னுதி கூறடா,'
என்னு மத்தன் மொழிமுன் வீரன்
எம்பி ரானி னம்பிரான்.

6\. 'அறிதி அப்பி ரானு டம்பில்
அண்டம் யாவும் வந்திடும்
இறுதி னத்தில் அதில டங்கும்
என்னு முண்மை யுந்தெரி
குறிய சொற்கள் வெளியி டற்க
கோதி லாத தேவர்தஞ்
சிறைத விர்த்து நறிய கோல்செ
லுத்து வாய்செ யாவிடின்.

7\. 'தார கன்பல் வஞ்ச கௌஞ்ச
சயில னுற்ற கதியினைச்
சேர நேரும் நீயும் என்று
செப்ப வேங்கி னக்கெனைப்
பேர ருட்பி ரான்வி டுத்த
பெற்றி யோர்தி' என்றலும்
சூரன் மீசை தனைமு றுக்கி
முரணி யீது சொல்லுவான்.

8. ‘சிறுவ ரைத்த டிந்த வன்மை
செப்ப வந்த இவனைமுன்
தெறுதிர்’ என்றெ ராயி ரந்திண்
வீரர் தம்மை ஏவினன்
உறுமி நன்கு ருத்தெ ழுந்த
அவரை யெற்றி மேல்வருந்
தறுகண் நூறு தலைய னவி
பொன்ற வேச வட்டிமேல்.

9. வரும வன்ப டைப்பெ ருக்கை
வலிய கோபு ரம்பெயர்த்
தொருகை யாலெ றிந்தொ ழித்தொ
ழிந்து பத்து வெள்ளமாய்
வருப தாதி யாவும் விசுவ
மாமெய் கொண்டு கால்களால்
இருகை யான்மு ருக்கி னன்இ
லங்கு வீர பாகுவே.

10. பின்னெ திர்த்த ஆயி ரம்பு
யத்து வீரர் பிணமென
மன்னி லத்தில் வீழ வேம
ராம ரம்பி டுங்கிமேல்
உன்னி யேய றைந்த அந்த
ஒருவ னுள்ள மூள்ளதே
என்னை யாளும் இச னேபு
கழ்ப்பு தற்கும் இசனே.

— ஸ்ரீமத் குமாரசுவாமி.

IV

வருணனை

இமயமலை[1]

1. உலகி லெங்கணும் உயரிய வரைகளின் ஓங்கி
அலகி லாவளம் உடையதாய் அழகிதாய் அறவோர்
நிலவ நின்றதாய் நீடிய நெறியதாய் நிலையாய்
இலகு பற்பல வளத்ததாய் எழிலுறும் இமயம்.

2. வெய்ய வன்கதிர் வீசினும் விலகிடா தென்றும்
துய்ய தண்பனிப் படைகொடு துலங்குற விளங்குஞ்
செய்ய வானளாஞ் சிகரிகள் பலப்பல சிறப்ப
மய்ய ளாவிய உடலது மால்வரை இமயம்.

3. பொன்னின் கோட்டது; புனிதவெண் கோட்டது; புரைதீர்
மன்னு மானச வாவியும் உடையது; வரைப்பில்
துன்னும் ஆனினம் மானினம் முதலிய துலங்கப்
பன்னு சீரது; பேரது பனிவரை இமயம்.

4. கங்கை யென்றுல கேத்திடு கடவுள்மா நதியும்
பொங்கு நான்முகன் புத்திரை எனும்பெயர்ப் புன
மங்கி டாதுபாய் சிந்துவும் வளம்பல மலிய [லும்
எங்க ணும்பரந் திழிபுன லுடையதால் இமயம்.

—திரு. கா. நமச்சிவாய முதலியாரவர்கள்.

---

[1] ஆசிரியரின் அனுமதி பெற்றுப் பதிப்பிக்கப்பட்டது.

1. நாட்டுக்கு நன்மை விளைப்பவன் செலவாளியா? சிக்கனக்காரனா?[1]

[திரு. கா. நமச்சிவாய முதலியாரவர்கள்]

1. பாண்டிவள நாட்டில் பண்டைக்காலத்தே மணிமுடி தாங்கிய மன்னனொருவன் செங்கோல் செலுத்திச் சிறப்புற விளங்கியிருந்தான். அவன், கல்வியறிவு பெரிதும் உடையவன்; எதனையும் ஆராய்ந்து பார்ப்பவன்; உய்த்துணர்ந்து, அதன் உண்மையைத் தேர்பவன்; கற்றோரைத் தன் கண்ணேபோற் கருதிக் காக்க வல்ல நல்லியல்பு வாய்ந்தவன். அதனால், நல்லிசைப்புலவ ரனைவரும் அவன் அவைக்கண் குழுமி அன்புற்று வாழ்வாராயினர். அரசன், தன் மனத்தில் தோன்றும் ஐயப்பாடுகளை அவர்கள் முன்னிலையில் வெளியிட்டுத் தீர்த்துக்கொள்ளும் இயல்புடையவன். அவன்பெயர் பாண்டியன் மாகீர்த்தி என்பது.

2. மாகீர்த்திக்கு மக்கள் இருவர் இருந்தனர். அவ்விருவர்க்கும் மனப்பான்மை வேறுபட்டிருந்தது. ஒருவன், தன் தந்தை தனக்கு வழங்கும் பொருளனைத்தையும் செலவு செய்து மகிழ்ச்சி யடைவான். மற்றவனோ, தனக்குக் கிடைக்கும் பொருளனைத்தையும் சிதறவிடாமல் சேர்த்துவைத்து, அதனைக் கண்டு கண்டு மனம் பூரிப்பான். அவ்விருவர் செயல்களையும் கண்ணாரக் கண்ட காவலன், 'என்னே இவர்தம் இயல்பு! ஒன்றற்கொன்று மாறான வழியை யுடையதாய் உளது. தன்நாட்டுக்கு நன்மை விளைப்பவன் செலவாளியா? சிக்கனக்காரனா? இவற்றின் உண்மை நன்கு புலப்பட அறிதல் வேண்டும்' என்று ஆராய்வா-

[1] ஆசிரியரின் அனுமதி பெற்றுப் பதிப்பிக்கப்பட்டது.

ஞனன். அவனுக்கு ஏதும் புலப்படவில்லை; அதனல் அவன், தன் அவைக்கண் சிறந்து விளங்கிய புலவர்களுள் இருவரை நோக்கி, ஒருநாள் வினவுவானயினன்.

3. ‘இன்னிசைப் புலவீர், என் மனத்துள் ஓர் ஐயப்பாடு உளது; அதனை நீவிர் ஆராய்ந்து தீர்த்தல் வேண்டும். இவ்வுலகில் மானிடர்க்கு மனப்பான்மை மாறுபடுகின்றது; அதனை மனத்தின் இயல்பு என்கின்றனர். ஒருவன் பெருஞ் செலவாளியாக இருக்கின்றான்; மற்றொருவன் மிக்க சிக்கனக்காரனக இருக்கின்றான். இவ்விரண்டு இயல்புகளும் ஏறுமாறானவை. இவற்றை அவனவனுக்கு உற்ற மனப்பான்மை என்னலாம். இவ் விருவரின் மனப்பான்மையையும் மாற்ற இயலாது. ஆயினும், இவ்விருவருள் தன்நாட்டுக்கு நலம் பயப்பவன் யாவன் என்னுஞ் செய்தியே என் மனத்துக்கண் எழுந்த ஐயப்பாடு. அதனை நீவிர் இருவீரும் ஆராய்ந்து சொற்போரின்மூலமாக எனக்குத் தெளிவித்தல் வேண்டும்’ என்றான்.

4. கீரன், நக்கீரன் என்னும் புலவர் இருவரும் அவ் வையப்பாட்டைத் தீர்த்தற்பொருட்டுச் சொற்போர் புரிவாராயினர்.

5. கீரன் — ‘பாண்டி வேந்தே, மானிடனொருவன் பெறத்தக்க பேறுகள் நான்காகும். அவை, அறம் பொருள் இன்பம் வீடு என்பன. அவற்றுள், அறமும் பொருளும் இன்பமுமே இம்மையில் அடையக்கூடியவை. அம்மூன்றனுள்ளும் முந்துறச் சிறந்துநிற்பது பொருளேயாகும். ஒருவன் அறஞ்செய்தற்கும், இன்பம் துய்த்தற்கும் பொருளொன்றே ஆதாரமாயுளது.

“ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள்
ஏனை யிரண்டும் ஒருங்கு”

என்றார் வள்ளுவனர்.

6. 'அஃதாவது, பொருளைப் பெரிதுந் தேடினவர்க்கு மற்றை அறமும் இன்பமும் ஒருசேர எளிதில் வந்தடையும்என்பதாம். ஆதலின், அத்தகைய பொருளை வீணிற் செலவு செய்யாது, எவ்வாற்ருனும் அதனைக் காத்து வாழ்வதே பேரறமாம். 'பொருடனைப் போற்றி வாழ்' என்னும் மூதுரையும் உலகில் வழங்குகின்றதே. பெருஞ் செலவாளியைக்காட்டிலும் பெருஞ் சிக்கனக்காரனே தன்நாட்டுக்கு நற்பயன் விளைப்பவன் என்பது என் கருத்து. ஆதலின், அதற்கான நியாயங்களை எடுத்துக்காட்டுகின்றேன் :

7. 'முதலாவது—சிக்கனக்காரன், பொருள் பலவகையினுலுஞ் சிதறுண்டு போகாமல், ஓரிடத்திலேயே மூதற்பொருளாகச் சேர்ந்திருக்கச் செய்துவருவதனல், அவன்நாட்டின் செல்வம், அவன்நாட்டிலேயே நிலைத்திருக்கும். அதனல், பொருள்நூலின் கொள்கைப்படி, சிக்கனக்காரன் தன்நாட்டிற்குப் பெரும்பயன் விளைப்பவனுகின்ருன். பிற நாடுகளுக்கு நம்நாட்டுப்பொருள்கள் பற்பல வகையில் செல்லுமாயின், நம் நாடு நாளடைவில் நலங்குன்றி வறுமை யடையும். ஆதலின், சிக்கனக்காரன்செய்கை பொருள்நூலின் முறைக்குப் பொருந்தியிருக்கின்றது. பிறநாட்டு வேந்தர் நம்நாட்டின்மீது படையெடுத்து வருங்காலத்தும், பஞ்சம் முதலிய இடுக்கண்கள் நேருங்காலத்தும் பொருள் பெரிதும் வேண்டப்படும். ஆதலின், சேமித்து வைக்கப்படும் பொருளே நாட்டிற்கு நலம்பயப்பதாகும்.

8. 'இரண்டாவது—பெருஞ்செலவாளியின் செய்கை அறநூல்முறைக்கு மாருனது.

> "ஆன முதலில் அதிகஞ் செலவானுன்
> மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
> எல்லார்க்குங் கள்ளனய் ஏழ்பிறப்புந் தீயனய்
> நல்லார்க்கும் பொல்லனும் நாடு"

என்பவாதலால், பெருஞ்செலவாளியின் செய்கை அறிவுடையோரால் வெறுத்து ஒதுக்கத்தக்கதே யாகும்.

9. 'மூன்றாவது—பொருளினிடத்துப் பற்றில்லாத ஒருவன் அதனைப் பற்பல வகையில் செலவழிக்கத் துணிவான். பொருள், தீச்செயலுக்கே பெரும்பாலும் காரணமாயிருத்தலின், செலவாளி அதனைத் தீச்செயலில்செலவிடப் பின்னிடான். நற்செயலுக்கும் பொருள் காரணமாகு மன்றோ; பெருஞ் செலவாளி அப்பொருளை நற்செயலிற் செலவு செய்யானோ எனின், செய்தலுங் கூடும். ஆயினும், தீச்செயலில் தன்பொருளைச் செலவிடாதிருக்க அவனைத் தடுப்பது ஏதும் இல்லையே. சிக்கனக்காரன் நற்செயலில் தன்பொருளைச் செலவிட்டுப் புகழைத் தேடிக்கொள்ளாவிடினும், தீச்செயலில் அதனைச் செலவுசெய்து இகழ்வைத் தேடிக்கொள்ள இடந்தரமாட்டான்.

10. 'நான்காவது—செலவாளி, சிக்கனக்காரன் ஆகிய இவரிருவரும் நேர்மாறாய் இருந்து, தம் நாட்டுக்குச் சில வழிகளில் நன்மையையும், சில வழிகளில் தீமையையும் புரிந்துவருகின்றனராயினும், மிக்க செலவாளியைவிட மிக்க சிக்கனக்காரன் தன்நாட்டுக்கு நலம் பயப்பவன் ஆகின்றான். அஃது எப்படி யெனின், தேனீக்கள் காலமறிந்து மலர்தோறும் சென்று வருந்தியுழைத்து, தேனைத் திரட்டிக் கொண்டுபோய்க் கூட்டில் சேர்த்துவைப்பதுபோல, சிக்கனக்காரன் ஒல்லும்வகையால் செல்வம் தேடித் தன் பேழையில் சேர்த்துவைக்கின்றான். ஈக்கள் தேடிவைத்த தேன், பின்னர், பலருக்கும் பயன்படுவதுபோல, சிக்கனக்காரன் இட்டிவைத்த பொருள், அவனுக்குப்பின்னர், பலருக்கும் பயன்படுவதாகும். ஆகவே, சிக்கனக்காரன், தன் வாழ்நாள்முழுவதும் தான் தேடிய பொருளினால் ஒரு பயனும் அடையாமற்போயினும் பின்னர் அதனால் பலர் பய-

னடைகின்றனர். பெருஞ் செலவாளியோ எனின், பொருளினலாகிய பயனைத் தானிருக்குமளவும் துய்க்கின்றானில்லை; சிறிது காலமே அதன் இன்பத்தை அனுபவிக்கின்றான்.

11. 'ஐந்தாவது—சிக்கனக்காரன் ஒருவகையில் இன்பமும் அடைகின்றான். தன் பொருளைப் பார்த்துப் பார்த்து இன்புறுகின்றான். செலவாளியோ இவ்வகையான இன்பம் எய்துதல் அரிது. ஏனெனின், பெருஞ்செலவினல் தன் கைப்பொருள் அனைத்தையும் செலவிட்டபின் மேன்மேலும் வருவாயில்லாத காலத்தில் துன்புறுவான். பலருக்கும் வழங்கிய காரணத்தால் அவன் அடைந்த மகிழ்ச்சியினும், பொருளற்ற காலத்தில் அடையும் வருத்தமே மிகப் பெரிதாகக் காணும். இம்மட்டோ, பொருள் மிக்கிருந்த காலத்துத் தான் மேற்கொண்டிருந்த பழக்கவழக்கங்க ளெல்லாவற்றையும், வருவாய் குன்றியவிடத்து விடக்கூடாமையின், மிக்க துன்பமே அடைவான்; தான் உலகத்தில் இருந்து என்ன பயன் என்றும் எண்ணுவான். எப்பொழுதும் வறியநிலையிலேயே வாழ்ந்துகொண்டிருப்பவனது நிலைமையைக்காட்டிலும், முதலில் செல்வனயிருந்து பின்னர் வறுமை யடைந்தவனது நிலைமை, அம்மம்ம, கொடிது கொடிது! சிக்கனக்காரன், செல்வம் இருந்தும் வறியநிலையிலேயே வாழ்ந்துவந்தவனதலால், அவனுக்கு எவ்விதத் துன்பமும் இல்லை.

12. 'மேற்போந்த நியாயங்களால், சிக்கனக்காரனே தன்நாட்டுக்கு நலம் பயப்பவன் என்பது என்கொள்கை'.

13. கீரன் கூறிய கட்டுரையைக் கேட்ட நக்கீரன் எழுந்து தன் உட்கோளை எடுத்துரைப்பானனன்.

14. 'மன்னர் மன்ன, கீரர் கூறிய உரையின்படி இவ்வுலகில் ஒருவன் அடையத்தக்க பெரும்பேறுகளுள்

பொருளே முதன்மையானது என்பதற்கு எள்ளளவும் ஐயமில்லை.

"வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்த இருதலையும் எய்தும்"

என்பது உண்மையுரையே. அத்தகைய பொருளை எவ்வகையிலும் இம்மியும் செலவு செய்யாமல் சேர்த்து-வைக்குஞ் சிக்கனக்காரனை வரையாது வழங்கும் வள்ளலைக்காட்டிலும் தன் நாட்டிற்குப் பெரும்பயன் விளைப்பவன் எனக் கீரர் கூறியது எனக்குச் சிறிதும் உடன்பாடன்று.

15. 'முதலாவது — பொருள்நூலின் கொள்கையின்-படி ஒரு நாட்டின் பொருள் நாற்புறமும் பரவச் செய்வதே அந்நாட்டின் நலத்திற்கு அடுத்ததென்பதைக் கீரர் மறந்தனர்போலும்! ஒருநாட்டில் சிலர் பெருஞ்-செல்வராய் இருக்கப் பலர் மிக்க வறியர்களா யிருப்பது அந்நாட்டிற்கு நலம் விளைப்பதன்று. எந்நாட்டில் மக்கள் அனைவரும் ஒரேநிலையில் இருக்கின்றார்களோ, அந்நாடே சிறந்தநாடாகும். சிக்கனக்காரன், பொருளை-யெல்லாம் பிறரிடத்துப் பரவாதபடி, தன்னிடத்திலேயே சேர்த்துவைத்துக்கொண் டிருப்பானாயின், அப்பொரு-ளினாலாகிய பயனை அந்நாடு முற்றும் இழந்துவிடும். இவ்வுண்மையை யுணர்ந்தே, நம் பெரியோர் தக்க ஏற்பாடுகள் பலவற்றைச் செய்திருக்கின்றனர்.

16. 'திருமணம் முதலிய சிறந்த செயல்களை நடத்துங் காலத்தில் செல்வர்கள் — இயம், இன்னிசை, நாட்டியம் முதலியவற்றில் தேர்ச்சி பெற்றவர்களை அமைத்துப் பொருள் தந்து, சிறப்புற நடாத்துஞ் செயலை மேற்-கொண்டிருந்தனர் என்று தெரியவருகின்றது. பெருஞ் செல்வனான ஒருவன் தன் பொருளனைத்தையும்சேமித்து-வைத்திருப்பானாயின், அது மற்றையோர்க்குப் பயன்-படாமற் போகுமன்றே! அன்றியும், அரிது முயன்று

கற்ற இன்னிசையாளர் முதலியோர் பிழைப்பின்றி, பெரிதும் வறுமையுற்றுத் துன்பம் எய்துவர்.

17. 'இரண்டாவது — செலவாளியின் செய்கை அறநூலுக்கு முரண்பாடாகும் என்று கீரர் கூறியது வியப்பினும் வியப்பாகும். அவர், தம் கொள்கையை நிலைநிறுத்த, 'ஆன முதலில்' என்னுஞ் செய்யுளை எடுத்துக்கூறினர். அவ்வறநூலே எனக்கும் துணைசெய்யாமற் போகவில்லை.

"பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் — கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் பாரே அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம்"

என்னுஞ் செய்யுளைக் கீரர் கேட்பாராயின், யாது விடை கூறுவரோ அறியேம். பொருளைச் சேர்த்துவைக்குஞ் சிக்கனக்காரன் செய்கை, அருவருக்கத்தக்கதென்பது இச்செய்யுளால் தெளிவாமன்றே!

18. 'மூன்றுவது — பெருஞ் செலவாளி, தீமைக்குக் காரணமான பற்பல கொடிய செயல்களைச் செய்யவும் பின்னிடான் என்று கீரர் கூறியது சிறுவர்வாயினும் சிரிப்பை விளைக்கும்; அவன், தீச்செயல்களுக்கே தன் பொருளைச் செலவிடுவான் என்பது பொருந்தாதன்றே! குமணன் என்னும் அரசன் தன் நாட்டைத் துறந்து காட்டில்வதிந்தகாலத்தும், வறுமையால் வாடித் தன்னைத் தேடியடைந்த பெருந்தலைச்சாத்தனர் என்னும் புலவர்க்குத் தன் தலையையும் கொடுக்க உடம்பட்டானன்றே! அதனல், வள்ளலாவான் தன் உயிரையும் வழங்கப் பின்னிடான் என்பது வெளியாகும்.

19. 'நான்காவது—சிக்கனக்காரன் தேனீக்களைப்போல மெய்வருந்திப் பொருளைத் தேடி அதனைச்செலவு செய்யாமல் சேர்த்துவைப்பதனல், அப்பொருள் அவன் இறந்த பின்னர்ப் பலருக்கும் பயன் படுவதாகும் என்று

கீரர் கூறியதும் ஒரு நியாயமாமோ? வள்ளலாகிய செலவாளி தான் வாழும்போதே பலருக்கும் வழங்கித் தானுந் துய்த்து அப் பொருளைப் பயன் படுத்துவது சிறந்த செயலன்றோ?

"உண்ணான் ஒளிநிறான் ஓங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான் — கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அ ஆ!
இழந்தானென் றெண்ணப் படும்"

என்னுஞ் செய்யுளுக்கு இசைய, சிக்கனக்காரன், சேர்த்துவைத்த பொருளையுடையனாயினும் அதனை இழந்தவனேயாவனன்றோ?

20. 'ஐந்தாவது—பொருட்பேய் பிடித்த பேராசையுள்ள ஒருவன் அப்பொருளைச் சேர்ப்பதற்கு எவ்வகைப்பட்ட தீச்செயலையும் செய்யப் பின்னிடான்; கொலை முதலிய குற்றங்களைச் செய்யவும் அஞ்சான். சிக்கனக்காரன் தான் இறக்குமளவும் தன் பொருளைப் பார்த்துக்கொண்டே இன்பமடைகின்றான் என்று கீரர் கூறினர். வள்ளலோ தன் வாழ்நாளில் தான் இட்டிய பொருள்களைப் பலர்க்கும் வழங்கி, "இத்துவக்கும் இன்பம்" அடைகின்றான்.

21. 'ஆறாவது — அறத்திற்கும் இன்பத்திற்கும் பொருள் காரணமாகும்; அதுவே வீட்டிற்கும் ஒருவாறு காரணமாகும். ஆதலின், பொருளை நல்வழியிற் செலவழிப்பவனே அறம் இன்பம் வீடு ஆகிய இவற்றை அடையப் பெறுவான். சிக்கனக்காரன் இவற்றுள் ஒன்றையேனும் பெறான். அதனால், செலவாளியின் செயல் இவ் வுலகத்திற்கு உபகாரமாகவும், அவனுக்கே பெரும்பயனை விளைப்பதாகவும் இருத்தலின், சிக்கனக்காரனைவிடச் செலவாளியே சிறந்தவனாவன் என்பது என் சித்தாந்தம்' என்றான்.

22. இவ்விருவரும் கூறிய பேருரைகளைக் கேட்டு முடிவு தேராஞகி மன்னன் மனந்தடுமாறி நிற்கையில், கீரன்கொற்றனர் என்னும் புலவர் ஆராய்ந்து முடிவு கூறுவாராயினர்.

23. 'மன்னர் மன்ன, இன்னிசைப் புலவர்களாகிய இருவரும் நேர்மாருன கருத்தையே கூறினர். கீரர், பொருளைச் சேர்த்துவைக்குஞ் சிக்கனக்காரனே சிறந்தவனென்று கருத்துக்கொண்டனர். நக்கீரர், வரையாது கொடுக்கும் வள்ளலே சிறந்தவனென்று வாதித்தனர். அவரவர் தத்தம் கூற்றுக்கேற்ப மேற்கோளுங் காட்டினர்.

24. 'செல்வம் உலக இன்பத்திற்கு முக்கிய காரணமாகும். அதனைச் செலவு செய்யாது வறிதே வைத்திருப்பதனல் பயனின்று. செலவாளி தன் வருவாய்க்குத் தக்க செலவு செய்தல்வேண்டும். வருவாய் சுருக்கமாகவும் செலவு பெருக்கமாகவும் இருப்பின், அச் செலவாளி இன்னலுறுவான். அதனல், தன் வருவாயை நோக்கி ஒருவன் செலவு செய்தல்வேண்டும். தேடிய பொருள் அனைத்தையும் புதைத்து வைப்பவன் பூதம்போல்பவன் ஆவன்.'

25. இவ்வாறு கீரன்கொற்றனர் கூறிய முடிவுரையைக் கேட்ட முடிமன்னன் உண்மை தேர்ந்து உவப்புற்ருன். அதனல் அவன், 'செலவாளியே இவ்வுலகத்திற்கு மிகச் சிறந்த துணைவனுவன்' என்பதை அனைவர்க்கும் விளங்கக் கூறினன்; 'செலவாளி, தன் செயலினல் தான் ஒருவன் துன்புற்ருலும், பலருக்கும் பயன்பட்டு, அவரனைவரையும் இன்புறச் செய்வதனல், அவனே சிக்கனக்காரனைவிடத் தன் நாட்டிற்கு மிக்க நலம்புரிபவனுகின்ருன் என்பது தேற்றம்' என்ருன்.

2. திருக்குறளும் பொதுநோக்கமும்[1]

[வித்வான் திரு. எஸ். ஆறுமுக முதலியாரவர்கள், B. A. (Hons)., L. T.]

தமிழ்நாடு செய்த தவப்பயனாய் அவதரித்த திருவள்ளுவர் உலகத்தோருக்கு ஒழுக்கமுறை வகுத்த சான்றோர் வரிசையில் சிறந்தாரொருவராக வைத்தெண்ணப்படுகின்றாரென்பது அனைவரும் அறிந்ததொன்றாம். உலகம் போற்றும் தம் பெருநூலில் ஆசிரியர் வகுத்துப்போந்த ஒழுக்கமுறை, இன்னார் என்ற வரையறையின்றி யாவரும் கையாளுதற்கு உரியதா யிருக்கின்றது. ஒழுக்கமுடைமையிற் கூறியபடி ஒழுக்கத்தை ஓம்புவோர் விழுப்ப மடைவர் என்பதனைத் தம் வாழ்க்கையிலேயே நடத்திக் காட்டி, கூடாவொழுக்கத்தில் கண்டிக்கப்பட்ட போலித்துறவொழுக்கம் உலகத்தாரை ஏமாற்றுவதற்கே உரியது என்பதனையும் உலகத்தவருக்குப் போதித்து, மனத்துக்கண் மாசிலராகி, குணமென்னுங் குன்றேறி நின்ற திருவள்ளுவர் அனைவரும் ஏற்றுக்கொண்டு கையாளுதற்குரிய ஒழுக்கமுறையினை வகுத்தது ஒரு வியப்பன்று. திருவள்ளுவர், தம் வாழ்க்கையனுபவத்தையே, 'யாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்' என்று சுரந்தெழும் அருள்மிகுதியினால், அனைவரும் உய்யுமாறு ஒப்பற்ற ஒழுக்கநெறியாகத் திருக்குறளால் நமக்கு அருளிச்செய்தார் என்னலாம். சிறந்த ஒழுக்கமுறையினை வகுத்த காரணத்தால், இவரைத் 'தமிழ்நாட்டுச் சாக்ரடிஸ்' என்று கொள்வாரும் உண்டு.

தெய்வப்புலவர் அருளிய பொதுமறை உலகத்தெழுந்த ஒழுக்கநூல்கள் பலவற்றினும் தலைசிறந்து

[1] ஆசிரியரின் அனுமதி பெற்றுப் பதிப்பிக்கப்பட்டது.

விளங்குகின்றது. உயரிய கொள்கைகளையும், இவர் தாம் கையாளுவதென்ற வரையறையின்றி மக்கள் எல்லாரும் ஒருங்கே ஏற்றுக்கொண்டு ஒழுகத்தக்க ஒழுக்க-முறையையும் கொண்டுள்ள ஒருநூல், உயர்தனிச் செம்-மொழிகளுள் யாதாவதொன்றில் எழுதப் படினும், அஃது அனைவராலும் போற்றிப் படிக்கப்பட்டு, பல்வேறு மொழிகளிற் பெயர்த்தெழுதவும் படும். சாதி, மத, கால, தேசப் பிரிவுகளைப் பொருட்படுத்தாது சிறந்த ஒழுக்கமுறையை எல்லாருக்கும் பொதுவாக எடுத்துக்கூறிச் செல்வதே அதற்குரிய காரணமாகும். இத்திறத்தில் திருக்குறளும் ஒப்புயர்வற்று விளங்கு-கின்றது.

* * * *

இல்லறம் நடத்தும் இயல்பும், தூய துறவற நெறியும், சமுதாய ஒழுக்க முறையும், அரசனும் அவன் அங்கங்களும் மேற்கொள்ளவேண்டிய அர-சியல் முறைகளும், இன்னோரன்ன பிறவும், சுருங்கக் கூறின் மனிதவாழ்க்கையின் ஒப்பற்ற முழுஇலட்சி-யமும் ஆசிரியர், தம் நூலிற் பொது நோக்கங்கொண்டே புகன்றுள்ளார். இவர் வகுத்த ஒழுக்கமுறை தமிழ்-நாட்டோடுமட்டும் தன் செல்வாக்கை நிறுத்திக்கொள்-ளாமல் உலகுமுழுவதும் ஒரு தனிச் செங்கோல் ஓச்சி வருவது நம்மொழிக்கு ஒரு பெருஞ் சிறப்பாகும்.

உலக முழுவதும் ஒரே கண்கொண்டு பார்த்து, அனைவர்க்கும் ஒத்த நீதியையே கூறி, சாதி, மத, கால, இட, மொழி, நிறவேற்றுமைகளைக் கடந்துநிற்கும் இத் தமிழ்மறையின் பொதுத்தன்மையைப் பண்டுதொட்டு இன்றுகாறும் புலவர்களும் பிறரும் போற்றிப் புகழ்ந்துவருகின்றனர்.

* * * *

அதனால், இச்சீரியநூல் எச்சாதியினருக்கும், எந்-நாட்டினருக்கும், எச்சமயத்தினருக்கும், எக்காலத்தி-

னருக்கும் பொதுவாகிய உண்மைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குந் தனிநூலாயிருத்தல் அறியப்படும். சில நூல்கள் தாம் எழுந்தகாலத்தில் வாழும் மக்களின் கருத்தைக் கவரும் பொருள்பற்றிக் கூறிச்செல்லும். அத் தலைமுறையில் வாழும் மக்கள் மறையவே, அந்நூல்களும் படிப்பாரின்றி மறையும். ஏனெனில், பிற்காலத்தில் தோன்றுவோரின் கருத்துக்களும் இலட்சியங்களும் மாறிவிடுகின்றன. ஆனால், எக்காலத்துக்கும் பொருந்தக்கூடிய உறுதிப்பாடுகளைத் தெரிவிக்கும் நூல் முக்காலத்தும் நின்று நிலவும். பிறவிப்பேறுகளாகிய அறம் பொருள் இன்பங்களையும், அவற்றின்மூலமாக வீட்டின் திறத்தையும் தெரிந்து, திருவள்ளுவர் செய்த நூல் "எக்காலத்திலும் மாறாப்பயன் தரும் மாண்புடைய நூலாய் விளங்குகின்றது." இதைக் "காலங் கடந்த நூல்" என்றே கூறலாம்.

திருக்குறள் சாதிப்பொதுநூலாகவும் விளங்குகின்றது. நான்கு வருணம் என்ற சாதிப்பிரிவைப் பரிமேலழகர் தம்முரையிற் புகுத்திப் பலவிடங்களில் வலிந்து பொருள்கொள்ளினும், திருவள்ளுவர் நான்கு வருணங்களைப்பற்றியாதல், அவை தமிழ்நாட்டில் ஏற்றுக்கொள்ளத் தகுந்தவை யென்றாதல் தம் நூலில் யாண்டும் கூறினாரில்லை; சமன்செய்து சீர்தூக்குங்கோல்போலவே நீதிகளை வகுத்து, அனைவரையும் சமரசப் பார்வையால் பார்க்கின்றார். இந்நூலுக்கு எல்லாரும் உரியர். இவ்வுண்மையைக் கீழ்க்கண்ட திருவள்ளுவமாலைவெண்பாக்கள் விளக்குகின்றன.

"செய்யா மொழிக்குந் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே — செய்யா
அதற்குரியார் அந்தணரே ஆராயின் ஏனை
இதற்குரிய ரல்லாதார் இல்." — வெள்ளி வீதியார்.

"ஆற்றல் அழியுமென் றந்தணர்கள் நான்மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதார் — எட்டெழுதி

வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனர் முப்பாலைச்
சொல்லிடினும் ஆற்றல்சோர் வின்று." —கோதமனர்.

* * * *

உரையாசிரியராகிய பரிமேலழகரும், "எல்லா நூல்களி-லும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கியல்பு" என்கின்றார்.

இதன் சமயப் பொதுத்தன்மைக்கு ஒன்றிரண்டு புறச்சான்று கூறுவோம். அக்காலத்துத் தமிழ்நாட்-டுப் பல சமயங்களும் திருவள்ளுவரைத் தத்தம் சமயத்-தவர் என்று உரிமை கொண்டாடின. இன்றும் அச்-சமயப்போர் உண்டு. இது, திருக்குறள் எல்லாச் சமயத்-தினருக்கும் உரியது என்பதையே காட்டுகின்றதன்றே? கல்லாடமுடையார்,

"சமயக் கணக்கர் மதிவழி கூறாது
உலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன் றனக்கு........."

என்றும், திருவள்ளுவ மாலையில் கல்லாடர்,

"ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றென்ப ஆறு சமயத்தார்—நன்றென
எப்பா லவரும் இயைபவே வள்ளுவனர்
முப்பால் மொழிந்த மொழி"

என்றும் இதன் சமயப்பொதுநோக்கத்தை எடுத்துக்-காட்டுகின்றனர்.

* * * *

கிறிஸ்தவரும் வரவர இதன் பெருமையை அறிய ஆரம்பித்தனர். தமிழ்க்கடலின் எல்லைகண்டவரும், திருக்குறளை ஆங்கிலச்செய்யுணடையில் மொழி-பெயர்த்தவருமாகிய 'போப்' பாதிரியார், "எங்கள் ஏசு-நாதர் மலைமேல் செய்த ஹிதோபதேசத்தின் பிரதி சப்தமாகும் இத்திருக்குறள்" என்பர்.

இஃது எவ்வளவுதூரம் உண்மையைக் கூறுகின்-றது என்ற ஆராய்ச்சிக்குட் புகாமல், இதினின்றும் நாம்

அறியக்கூடியதுதானென்ன என்று பார்ப்பின், திருக்குறளின் நோக்கம் புலப்படும். "இவ்வாறு பலவகைச் சமயத்தினரும் திருக்குறளைத் தம்நூல் என்று போற்றிப் புகழ்கின்ற தன்மையினுல் அவ் விழுமிய நூல் உலகிலுள்ள உயரிய சமயக்கொள்கைகளையெல்லாம் தன்னகத்தே யடக்கித் தனக்கு அங்கங்களாய் அமைத்துக்கொண்டு, அவையனைத்திற்கும் தலைமையில் நிற்குந் தகுதி வாய்ந்த ஒரு தனிநூல் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றது".

இவ்வாறு சமரச ஞானச் செல்வமாகிய இந்நூலைப் படிக்கும் ஒவ்வொருவரும் மனமாற்ற மடைந்து தமக்கென வாழுஞ் சுயநலத்தினின்றும் மாறி, ஒழுக்க முடையவர்களாய்ப் பிறர்க்கென வாழவேண்டுமென்ற எண்ணத்தோடு சமரசப் பார்வையைப் பெறுவரேல், நம்நாடு எவ்வளவு பயன்பெறும்! ஆனுல், இதைப் படிப்போர் எத்துணையர்? திருக்குறள் என்பது என்ன என்றும், திருவள்ளுவர் யார் என்றும் அறியாத தமிழ்மக்கள் பல்லாயிரவர் இந்நாளில் உளர் என்பது யாருமறிந்ததே. நம்மொழியில் பெறலரும் மணிபோன்ற நூல்களிருப்பதையும் அறியாராய், அறியாமை யிருளிற் கிடந்துழலும் நம்நாட்டு மக்களிடைக் கல்வியைப்பரப்பி ஒழுக்கச் சீர்திருத்தத்திற்கு உரிய நூல்களுட் சிறப்பாகத் திருக்குறளின் போதனையை எடுத்துக்கூறப் பல அபிமானிகள் முன்வருவரேல், அவர்கள் செயல் மஹோபகார மாகுமன்றே?

* * * *

3. பொய்யாமொழிப் புலவர்[1]

[திரு. மு. ராகவையங்காரவர்கள்]

'தொண்டை நன்னாடு சான்றோ ருடைத்து' என்ற முன்னோர்மொழியின்படி, தமிழகத்திற் சீர்த்தி பெற்ற பெரியோர் பலரும் தோன்றியநாடு தொண்டை-மண்டலமே யாகும். தமிழ்நாட்டின் வடபகுதியிற் பெரும்பான்மை இம் மண்டலத்தைச் சார்ந்ததே. இத் தொண்டைநாட்டில் அவதரித்த அடியார்களும், சமயா-சாரியர்களும், புலவர்பெருமக்களும் எண்ணிறந்தவ ராவர். அவ்வையார், முதலாழ்வார்கள், சேக்கிழார், இராமாநுஜர் முதலிய பெரியோர்களைப் படைத்து உதவியது இந்நாடென்றால், இதன் பெருமையை விரித்து விளங்கக்கூறவும் வேண்டுமோ! இத்தன்மை வாய்ந்த சான்றோர்களுள் ஒருவரே நாம் கூறப் புகுந்த புலவர் என்பது, அவர்பெயராலும், நூல்களாலும், கர்ணபரம்பரையாலும் அறியக்கிடக்கும். அவர்தம் வரலாற்றைத் தொகுத்துச் சுருக்கமாக இங்கே கூறு-கின்றோம்:

பொய்யா மொழியார் என்பதற்கு, என்றும் மாறாத வாக்குடையவர் என்பது பொருள். இதனால், அவ-ருடைய சத்தியவசனம் பற்றி, அவர்க்கு இப்பெயர் வழங்கலாயிற்று என்பது விளங்கும். பொய்யாமொழி-யார் வாழ்ந்துவந்த இடம், தொண்டை மண்டலத்தின் உட்பிரிவுகளுள் ஒன்றான செங்காட்டுக் கோட்டத்தில் துறையூர் என்னும் பதியாம். சிறு பிராயத்திலே அவர் தெய்வானுக்கிரகம் பெற்ற கவியாக விளங்கினர். வயிர-புரம் என்னும் ஊரில், அவர் சிறுவயதில் வயலொன்-

---

[1] உரிமையாளரின் அனுமதி பெற்றுப் பதிப்பிக்கப்பட்டது.

றைக் காவல் புரிந்துவந்தபோது, காளிங்கன் என்பவனது குதிரை பயிரைமேய, அதைத்தடுக்க வேறுவகை காணது, அங்குள்ள காளிதேவியை நோக்கி,

> [1] 'வாய்த்த வயிரபுர மாகாளி யம்மையே
> ஆய்த்த வருகா ரணிவயலிற் — காய்த்த
> கதிரைமா ளத்தின்ற காளிங்க னேறுங்
> குதிரைமா ளக்கொண்டு போ'

என்று பாட, அக்குதிரை உடனே இறந்துவிழுந்ததென்று கூறுவர். பொய்யாமொழியார், கலைமகளின் அருள்பெற்றுப் பின்பு புலவர்சிகாமணியாய் வாழ்ந்திருந்தனர். அவ்வாறு நாட்டிற் பெரும்புலவராய் விளங்கிய காலத்தே, சங்கமிருந்து தமிழாராய்ச்சி செய்த மதுரைமாநகரில், பாண்டியன் அனுமதி பெற்று, பழைய சங்கத்தை மறுமுறை கூட்டித் தமிழை வளர்க்க அவர் எண்ணினர்; எண்ணி, மதுரையை நோக்கிப்புறப்பட்டு, இடையில் திருச்சிராப்பள்ளியை அடைந்து, அங்கே மலைமேல் கோயில் கொண்டுள்ள சிவபிரானை வணங்கி, அவரருள் பெற்றனர். பின்பு சிலநாட்களில் அவ்வூரை நீங்கிப் புறப்பட்டு, இடையிலிருந்த பாலைவனத்தைக் கடந்து சென்றபோது, புலவர் மிகவும் இளைப்புற்று வருந்தினர். அப்போது முருகக்கடவுள், ஒரு வேடுவ வுருக்கொண்டு, அவர் எதிரே வந்து, நீர் யாவிர்?' என்று கேட்டனர். பொய்யா மொழியார், 'யான் ஒரு புலவன்' என்று கூறவே, 'ஆயின், என்மீது ஒரு கவி பாடும்' என்று முருகவேடன் வேண்ட, அதற்கு இசைந்து, 'நன்று, உன் பெயர் யாது?' என்று புலவர் உசாவினர். 'முட்டை' என்று, ஏதோ தமது வாய்க்கு வந்ததொன்றைத் தம் பெயராக அவ்வேடமுருகர் கூறினர். அது கேட்டதும் பொய்யா மொழியார்,

---

[1] இக்கதையையே பிற்காலத்தார் கம்பர்க்கு ஏற்றிக்கூறுவ துண்டு. ஆனல், பழையவழக்கு அவ்வாறில்லை.

'பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
என்பேதை செல்லற் கிசைந்தனளே — மின்போலும்
மானவேன் முட்டைக்கு மாருய தெவ்வர்போங்
கானவேன் முட்டைக்குங் காடு'

என்று அவ் வேடன்பெயரை அமைத்துப் பாடினர். அதுகேட்ட அக்கடவுள் உள்ளம் மகிழ்ந்தனராயினும், கொடிய பாலைவனத்தைப் 'பொன்போலும்' என்று தொடங்கியதனுல் விருப்பில்லாதவர்போலக் கூறி, அப்புலவர் பாடிய அவ் வகப்பொருள் துறையிலேயே,

'விழுந்ததுளி அந்தரத்தே வேமென்றும் வீழ்ந்தால்
எழுந்த சுடர்சுடுமென் றேங்கிச் — செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்தே பெய்வளையும் போயினளே
பொய்யா மொழிப்பகைஞர் போல்'

என்று, பொய்யாமொழியாரின் பெயர்வரும்படி தாம் ஒரு வெண்பாப் பாடி, தம் உண்மை யுருவத்தை அவர்க்கு வெளிப்படுத்தி, அவர் இளைப்பை மாற்றியதோடு, தம் வேலாயுதத்தினுல் அப் புலவர்நாவில் எழுதி, அனுக்கிரகித்துச் சென்றனர். இதையே அருணகிரிநாதரும்,

'முற்றத்திரி வெற்றிக் குருபா
முற்பட்டமு ரட்டுப் புலவனை
முட்டைப்பெயர் செப்பிக் கவிபெறு — பெருமாளே'

என்று தம் திருப்புகழொன்றிற் பாடலாயினர். இவ்வாறு பாலைவனத்தைக் கடந்து, இடையிலுள்ள தலங்கள் பலவற்றைத் தரிசித்துக்கொண்டு, திருக்கானப்பேர் என்ற காளையார்கோயிலைப் புலவர் அடைந்தார்.

பின்பு, பொய்யாமொழியார் திருக்கானப்பேரைவிட்டு நீங்கி, அக்காலத்தில் பாண்டியன் மந்திரியும், புலவர்களை ஆதரித்துவந்தவனுமான மாறனுட்டுத் தஞ்சைவாணன் என்ற தலைவனிடம் சென்று, அவனுற் பெரிதும் உபசரிக்கப்பெற்ருர்; அந்நாளில், 'தஞ்சைவாணன் கோவை' என்ற பிரபந்தம் ஒன்றனை அவன்-

மேற் பாடினர். அக்கோவை சிறந்த தமிழ்நூல்களுள் ஒன்ருகும். அப் பிரபந்தம் பெற்ற தஞ்சைவாணன், புலவர்க்கு வேண்டிய வரிசைகளை யளித்துச் சிறப்பித்தனன்.

அக்காலத்தே, புலவர், மதுரைச் சங்கத்தைப் பாண்டியன் உதவிகொண்டு கூட்ட எண்ணியுள்ள தம்கருத்தை அவ் வாணனுக்கு எடுத்துரைத்து, அவனுதவியால் மதுரைநகரை யடைந்து, அரசனைக் காணவேண்டி அரமனை சென்று, அரசன் சுவாமிதரிசனஞ்செய்தற்காகத் திருவாலவாய்க்கோயிலுக்குப் போயிருப்பதை யறிந்து, நேரே அக்கோயிலை அடைந்தனர். அங்கே, பாண்டியன் சிவபெருமான்திருமுன் தண்டனிட்டு வணங்கிநின்ற நிலைமையைக் கண்டு, பாதி வசையும் பாதி நசையுமாக,

‘குழற்கா லரவிந்தங் கூம்பக் குமுதம் பொதியவிழ்ப்ப
நிழற்கால் மதியமன் ருேநின் றிருக்குலம் நீயவன்றன்
அழற்கா லொளிர்சடை மீதே யிருந்துமவ் வந்திவண்ணன்
கழற்கால் வணங்குதி யோவணங் காமுடிக் கைதவனே’

என்ற பாடலைக் கூறலாயினர். ‘சிவபிரானது திருமுடியை இருப்பிடமாகக் கொண்டு விளங்குஞ் சந்திரனது வமிசத்தில் நீ பிறந்தவனுயிருந்தும், அப்பெருமானது பாதத்தை வணங்குதல் என்ன பொருத்தம்?’ என்பது இப்பாடலின் கருத்து. இதனைக் கேட்ட அரசன், தரிசனம் முடிந்ததும் புலவர்பக்கம் திரும்பி, அவர்ஊர், பெயர் முதலியவற்றை விசாரித்து அறிந்து, கோயிலைப் பிரதட்சிணஞ் செய்துகொண்டே, புலவர், தம்மிடம் வந்த நோக்கத்தை உசாவுவானுயினன். பொய்யாமொழியாரும் மதுரையிற் பழைய சங்கத்தைக் கூட்டித் தமிழாராய்ச்சி செய்விக்க வேண்டும் என்பது தம் பேரவா என்றும், அதற்கு அரசன் உதவவேண்டும் என்பதுவே தம் கருத்து என்றும் வெளிப்படக் கூறினர். அதுகேட்ட அரசன், ‘தெய்வப்புலமை

வாய்ந்த அச்சங்கத்தைக் கூட்டச் சிற்றறிவினரான நம்மால் ஆவதோ!' என்று சிறிது இகழ்ச்சிக்குறிப்புத் தோன்றச் சொல்லும்போது, சங்கத்தார் சந்நிதி நெருங்கியது; அவ்வளவில் அரசன் புலவரை நோக்கி, 'இச்சங்கத்தாரது திருவுருவங்களெல்லாம் சிரக்கம்பஞ் செய்யும்படி ஒருபாடலை நீர் இயற்றவல்லீரேல், இறந்த சங்கத்தை நீவிர் எழுப்பக்கூடியவரே யாவீர்' என்று புன்முறுவலுடன் கூற, புலவரும், 'அங்ஙனமே' என்று, சங்கத்தாரை நோக்கி,

> 'உங்களிலே யானொருவன் ஒப்பேனோ ஒவ்வேனோ
> திங்கட் குலனறியச் செப்புங்கள் — சங்கத்துப்
> பாடுகின்ற முத்தமிழென் பன்னூலு மேற்குமோ
> எடவிழ்தார் எழெழுவீர் இன்று'

என்று பாடினார். அப்போது அத்தெய்வப் புலவர்களின் திருவுருவங்களெல்லாம் தத்தம் சிரங்களை அசைத்து மகிழ்ந்தன. அதுகண்ட பாண்டியன் அதிசயமடைந்து, மற்றும் புலவரைச் சோதித்தறிய எண்ணி, புலவருடன் உரையாடிக்கொண்டேபோய், பொற்றாமரைக்கரையை யடைந்து, 'புலவீர், இப் பொய்கையில் முன்பு இருந்ததெனச் சொல்லப்படுஞ் சங்கப்பலகை மேலேதோன்றி மிதக்கும்படி செய்து, உமது தெய்வப்புலமையைக் காட்டுவீரேல், எண்ணிய காரியத்தை இனிது நிறைவேற்றுவேன்' என்று கூறினன். நந்தம் புலவர்பெருமான் அதற்கு இயைந்து, 'தமிழைப் போற்றும் அரசர்கள் இக்காலத்தில் இல்லையேயன்றிப் புலவர் சிகாமணிகள் உலகத்தில் உளர் என்னும் உண்மையைப் பாண்டியன் நன்கறியும்படி, சங்கப் பலகையே, நீ எழுந்து மிதப்பாயாக' என்ற கருத்துப்பட,

> 'பூவேந்தர் முன்போற் புரப்பா ரிலையன்றிப்
> பாவேந்த ருண்டென்னும் பான்மைதான் — மாவேந்தன்
> மாறன் அறிய மதுரா புரித்தமிழோர்
> வீற்றணையே சற்றே மித'

எனப் பாடியதும், பொற்றாமரையுள் இருந்த சங்கப்பலகை மிதந்தெழுந்து, பின் தாழ்ந்தது என்பர். பாண்டியன், புலவர்பெருமானது தெய்வத்தன்மையை யறிந்து, வியப்பும் உவப்பும் அடைந்து, அவரிடம், தான் இழைத்த பிழைகளைப் பொறுக்குமாறு பெரிதும் வேண்டி, 'பொய்யாமொழியார் என்ற திருநாமம் உமக்கே தகும். நீர் ஒரு தெய்வப்புலவர்' என்று புகழ்ந்து கூறினன். அப்போது புலவர்,

'அறமுரைத் தானும் புலவன்முப் பாலின்
திறமுரைத் தானும் புலவன் — குறுமுனி
தானும் புலவன் தரணி பொறுக்குமோ
யானும் புலவன் எனின்'

என்று பாடி, 'தலைச்சங்கமிருந்த சிவபிரானும், திருவள்ளுவரும், அகத்தியனாரும்போன்ற தெய்வப்புலவர் வரிசையில் யானுஞ் சேர்ந்தவன் என்று, அரசே, நீ கூறுவதைத் தரணி பொறுக்காது' என்று தம்மைத் தாழக் கூறி, தம் பெருமையைக் காட்டினர். இவ்வாறு பழைய தமிழ்ச்சங்கத்தைப் புதுப்பிக்க விரும்பி, பாண்டியனிடம் முயன்றுவந்த புலவர்பெருமானது எண்ணம் நிறைவேறி, சிலநாள்வரையிலும் கைகூடி வந்ததென்றே சொல்லலாம். நம் புலவர் அரும்பாடு பட்டு மதுரைநகரில் நாட்டிய சங்கம், அவர்காலத்திலேயே அரசியல் மாறுபாட்டாலோ, பிறகாரணத்தினலோ கலைந்துவிட்டதென்று தோன்றுகிறது. அதனல், அவர் தம் முழுவாணளையும் மதுரைமா நகரிற் கழித்தனரில்லை. அவர், தம் வாழ்நாளின் பிற்பகுதியில், பாண்டியநாட்டைவிட்டுச் சோணட்டை அடைந்தனர். அந்நாட்டில் அரசூரைத் தலைநகராகக் கொண்ட நாட்டின் அதிபனும் தமிழருமை யறிந்த வள்ளலாய் விளங்கியவனுமான சீநக்கன் என்ற தலைவன் அவர்க்குப் பெருநட்பாளன் ஆயினன். அவனை முதன்முதற் காணச் சென்றபோது, புலவர் பசியால் வாட்டம்

அடைந்திருந்தனர். அஃதறிந்த சீநக்கன், முதலில் புலவர்பசிதீர்த்து, பின் அவருடன் அளவளாவக் கருதி, அவர்க்குப் பிரியமாயிருந்த புளியஞ்சோற்றை அளித்து உபசரித்தனன். புலவர் அதனை உண்டு பசி-யாறி, அச்சோற்றின் சுவைக்குப் பெரிதும் மகிழ்ந்து,

'அளிகொ ளுந்தொடை யானர சைக்குமன்
ஒளிகொள் சீநக்க னின்றுவந் திட்டசீர்ப்
புளியஞ் சோறுமென் புந்தியிற் செந்தமிழ்
தெளியும் போதெலாந் தித்தியா நிற்குமே'

என, 'செந்தமிழ்ச் சுவை தெளியும்போதெல்லாம் சீநக்கன் அளித்த புளியஞ்சோற்றின் சுவை அதற்-கேற்ப உவமானமாக ஞாபகத்துக்கு வரும்' என்ற கருத்துக்கொண்ட பாடலை அவன்முன்பு கூறினர். இதனையே சோழமண்டல சதக ஆசிரியரும்,

'பொய்யா மொழியார் பசிதீரப்
புளியஞ் சோறு புகழ்ந்தளித்த
செய்யா ரசூர்ச் சீநக்கன்
செய்த தெவருஞ் செய்தாரோ'

என்று பாடினர். பொய்யாமொழியாருடன் பழகப் பழக, அவரது அருமை பெருமைகள் தன்னை மிக்க வியப்படையச் செய்துவந்தமையால், சீநக்கன், அப் புலவரை ஒரு கணத்தும் விட்டுப்பிரிய ஆற்றாதவனாய், தன் ஆருயிர்த் துணைவராக அவரை மதித்து, வேற்று-மையின்றிக் கலந்து களித்துவந்தான். நம் சீநக்க-னைச் சோழன்மந்திரிகளுள் ஒருவன் என்பர். நம் புலவர், அவன்மூலம் சோழனைப்பார்க்க விரும்பிச் சென்று, தஞ்சையில் அரசாண்டுவந்த அவனைக் கண்டு,

'திறையின் முறைகொணர்ந்து தெவ்வேந்த ரீண்ட
இறையும் இறைகழிக்க ஒண்ணு — அறைகழற்காற்
போர்வேந்தர் போர்மாளப் போய்வா ளுறைகழித்த
தேர்வேந்தன் தஞ்சைத் தெரு'

என்று, தாம் அவன்நகரிற் கண்ட சிறப்பைப் புகழ்ந்து

கூறினர். அப்பாடலைக் கேட்டும், மற்றும் புலவரின் அருமைபெருமைகளை அறிந்தும் அவர்க்குச் சோழன் பெரிய வரிசைகளை அளித்துதவ, அவற்றுடன் அரசூர் சென்று, அங்கே சீநக்கனோடு முன்போலக் கலந்து வாழ்ந்துவந்தனர். நம்புலவரைச் சிறப்பித்த சோழன் இராஜேந்திரன் என்ற பெயர்கொண்டவன் என்பர் சோழமண்டல சதக ஆசிரியர்.

இவ்வாறு புலவர் அரசூரில் சீநக்கவள்ளலுடன் விளங்கிவரும் நாளில், அடுத்த கண்டியூரி விருந்த வண்ணாத்தி யொருத்தி, அவர்க்குப் பெருமகிழ்ச்சி தரும்படி, அவராடைகளை மாசு நீக்கித் தூய்மைசெய்து கொடுத்தாள். புலவர் அதற்கு உவந்து, அவள்மீது ஒரு செய்யுளைப் பாடிப் புகழ்ந்தனர். பின்னர் ஒருகால், குலோத்துங்க சாவகன் என்னும் புலையன் புலவர்க்குப் பெருங்கோபமுண்டாகக் கொடுமையொன்றை இழைக்க, அவர் அவனுடல் வெடிக்கும்படி பாடினர் என்று தமிழ்நாவலர்சரிதை கூறுகின்றது.

புலவர் சீநக்கனுடன் பெருநட்புப் பூண்டு வாழ்ந்துவரும் நாளில், ஒருநாள் இரவில் அவ்வள்ளல் சயனிக்குங் கட்டிலில் அவனும் புலவரும் அமர்ந்திருந்து நெடுநேரம் அளவளாவிக்கொண் டிருந்தனர். அப்போது நாழிகையானமையின் புலவர் சீநக்கனை உணவருந்தப் போகுமாறு விடுத்து, அயர்ச்சி மிகுதியால் அக்கட்டிலிற்றானே ஒரு புறமாக நித்திரைபோயினர். சீநக்கன் உணவருந்தி நிலாமணிமேடையிற் சென்று சிறிது உலாவி வந்தனன். வந்தவன் புலவரைச் சிறிது விழிக்கும்படி மெல்லத் தட்டி எழுப்ப, அவர் சிறுக விழித்தனர். அப்போது அப்பெருந்தகை, 'புலவீர், சிறிது விலகிக்கொள்வீராக; ஒருபுறம் யானும் படுப்பேன்' என்றான். புலவர் நித்திரைமயக்கந் தெளிந்து, 'இங்கே படுத்துறங்கினேமே!' என்று, சரேலென

விலகிநின்று, திப்பிரமை கொண்டவ ராயினர். சீநக்கன் புன்முறுவல்பூத்து, 'புலவரேறே, அஞ்சாதீர். குற்றம் ஒன்றும் நிகழ்ந்திலது' என்றனன்.

இவ்வாறு ஓர் உயிர் இருடற்கு என்னும்படி, அவ்விருவரும் நெடுநாள் வாழ்ந்துவருங் காலத்தில், அவ்விருவரது உணர்ச்சி யொத்த பேரன்பைச் சோதிப்பவன்போல, யமனனவன் சீநக்கனது ஆருயிர்க்கு இறுதி தேடுவானுயினன். அப்பெருந்தகை, சில நாட்களில், தன்பால் உழுவலன்புடைய புலவர்பெருமானை விட்டு, வானுலகை யடைந்தனன். சிறிதும் வேற்றுமையின்றி அபிமானித்துத் தம் ஆருயிர் நண்பனு யிருந்த வள்ளல் தம்மை விட்டுப் பிரிந்ததற்குப் புலவர் சிறிதும் ஆற்ருதவராய், தம் வெற்றுடலைக் கொண்டு இவ்வுலகில் வாழ இசையாது, சீநக்கனுக்கென்று மூட்டப்பட்ட பேரெரியில் அவனுடன் விழுந்து, உடல்துறப்பதே கருமம் என்று துணிந்தனர். முடிவில் அவ்வள்ளலின் உடல் பேரெரியில் வைக்கப்பட்டபோது புலவர் அதனைப் பொறுக்காதவராய், அவனை நோக்கி, 'என் ஆருயிர் அரசே, அன்று கட்டிலில் யான் அறியாது உறங்கியபோது, என்னை நோக்கி, "சிறிது நகர்க, ஒருபுறம் யானும் படுப்பேன்" என்ருயே. அத்தகைய நீ, இன்று இந்த இம எரியில் யானும் நின்னுடன் ஒருபுறம் படுக்கச் சிறிது இடங்கொடுத்து விலகுவாயாக; யானும் நின்னுடன் வருகின்றேன்' என்னுங் கருத்தில்,

'அன்றுநீ செல்லக் கிடவென்றாய் ஆருயிர்விட்
டின்றுநீ வானுலகம் எய்தினய் — நன்றுநன்று
வானக்க பூண்மடவார் மாரனே தென்னரசூர்ச்
சீநக்கா செல்லக் கிட'

என்ற அரியதோர் பாடலைக் கூறி, அவனுடன் தீப்பாய்ந்து உயிர்நீத்தனர். இவ்வரிய பெரிய செயலைக்

கண்டும் கேட்டும் நாடு முழுவதும் வியப்பும் இரக்கமும் அடைந்தது.

இவ்வளவே பொய்யாமொழிப்புலவர்வரலாருக இப்போது அறிய வந்துள்ளவை. இச் செய்திகளால், அவர் தெய்வப்புலமை வாய்ந்த பெரியாருள் ஒருவர் என்பதும், சிவபிரானுலும் முருகவேளாலும் ஆட்கொள்ளப்பெற்ற அடியவர் என்பதும், தமிழ்மொழியை வளர்த்தற்பொருட்டு அரும்பாடுபட்டவர் என்பதும், தம் நட்பினரின்பொருட்டு உயிரையும் நீத்த பேரன்புடையவர் என்பதும், மற்றும் அவரது உத்தமகுண விசேடங்களும் நன்கு விளங்கக் கூடும். சங்ககாளில் விளங்கிய கடையெழு வள்ளல்களுள் ஒருவனும், தம் நட்பினனுமாகிய வேள்பாரியின் பொருட்டு உயிர்நீத்த கபிலர் என்னும் புலவர்பெருமானைப்போல, பிற்காலத்தே உடனுயிர் நீங்கும் நட்புமுறையைக் கைக்கொண்ட பெரும்புலவர் நம் பொய்யாமொழிப்புலவர் ஒருவரே யாவர். 'பசைந்தாரிற் றீர்தலிற் றீப்புகுதல் நன்று' என்னும் முதுமொழியின்படி ஒழுகிய இவ்விருவரும் உத்தமசீலரே என்னத் தட்டில்லை.

பொய்யாமொழிப்புலவரைப்போன்ற பெரியோர் வரலாறுகளை நந்தம் தமிழகம் என்றும் மறவாது போற்றுவதாக.

4. சில ஷிகாரி

அல்லது

வேட்டுவப் பிராணிகள்[1]

[திரு. எம். ஏகாம்பரநாத ஐயரவர்கள்

எம். ஏ., எல். டி.]

ஆகாயமார்க்கமாகப் பறந்து செல்லும் பறவைகளை வேடர்கள் மரங்களில் வலை கட்டிக் கைப்பற்றுவதை நம்மில் பலர் பார்த்திருக்கலாம்; காடுகளில் பெரிய படுகுழிகள் தோண்டி, அவற்றினுள்ளே யானைகள் விழுதற்கு வேண்டிய உபாயங்கள் செய்து, அவற்றைப் பிடிப்பதைப்பற்றிப் பலர் கேட்டும், சிலர் பார்த்தும் இருக்கலாம்; தூண்டில் போட்டு நீரில் வாழும் மீன்களைப் பிடிப்பது எல்லாருக்கும் தெரிந்த செய்தியே. மனிதன் தாழ்ந்த பிராணிகளைக் கைப்பற்ற இவ்வுபாயங்களை அனுசரிப்பதுபோல், தாழ்ந்த பிராணிவர்க்கத்துள்ளும் சில, அவற்றிற்கு ஆகாரமாகும் வேறு பிராணிகளைக் கைப்பற்றுவதற்கு இம்மாதிரியான சில உபாயங்களை அனுசரிக்கின்றன.

வானத்திற் பறந்து செல்லுஞ் சிறிய பூச்சிகளை வலைகட்டிப் பிடிக்கும் வஞ்சக வேடனாகிய சிலந்திப்பூச்சியைப் பார்த்திராதவர் யார்? சிலந்தி வலையைக் கட்டி, அதில் ஒரு மூலையிற் பதுங்கியிருந்து, தனக்கு உணவாகும் பூச்சிகள் அவ்வலையில் அகப்பட்டுக்கொண்டவுடன் பற்றிக்கொள்ளுவதைக் கவனித்துப்பார்த்தால், அதன் வலைவீசுந் திறமையை நாம்

---

[1] 'கலைமகள்' பத்திராதிபரின் அனுமதி பெற்றுப் பதிப்பிக்கப்பட்டுளது.

வியவாமல் இருக்கமாட்டோம். வலை பின்னுதற்கு வேண்டிய சாதனங்கள் சிலந்தியின் தேகத்திலேயே இருக்கின்றன. அதற்கு வேண்டிய நூல் சிலந்தியின் தேகத்தில் ஒருவகைப் பிசினாக உண்டாகிறது. அது காற்றிற்பட்டதும் கெட்டியான நூலாகிறது. சிலந்தியின் வயிற்றின் அடிப்பாகத்தில் பின்புறமாகச் சிறிய அரும்புகள்போன்ற அமைப்புக்கள் இருக்கின்றன. அவற்றை **நூலரும்புகள்** (Spinnerets) என்பர். அந்நூலரும்புகளின் முனைகளில் வெகு நுட்பமான பல மெல்லிய குழாய்கள் இருக்கின்றன. அந் நாற்குழாய்களின் வழியாக வயிற்றினின்று வெளியே வரும் நூல்கள் பலவற்றைத் தனக்கு வேண்டியபடி ஒன்றுசேர்த்து முறுக்கிச் சிலந்தி தன் வலையைப் பின்னுகிறது.

சிலந்திப்பூச்சி வலை பின்னுவதைக் கவனித்துப் பார்த்தால், நாம் முதலில் வீடுகளுக்கு அஸ்திவாரம் பலமாகப் போடுவதுபோல், நாலுபக்கங்களிலும் **அஸ்திவார இரேகைகள்** (Foundation lines) என்று கூறத்தக்க அழுத்தமான நூல்களை மரங்களிலோ, சுவர்களிலோ, வேலிகளிலோ, மற்றவிடங்களிலோ கட்டுவது தெரியவரும். மரங்களிலோ, வேலிகளிலோ அது வலைகட்டும் போது, முதலில் ஓரிடத்தில் தன் நூலரும்பிலிருந்து உண்டாகும் பிசினை ஒட்டி, பக்கத்துக்கிளையின் மேலாவது முள்ளின்மேலாவது நடந்துகொண்டே சென்று, அந்நூலை இழுத்து மற்றொரு முனையை எதிர்ப்பக்கமாகச் சேர்க்கும். சில வேளைகளில், எளிதாக நடந்து செல்வதற்குக் கிளைகள்போன்ற சாதனம் கிடைக்காமல், நடுவில் பெரிய பள்ளங்கள் இருக்கலாம்; அச்சமயங்களில், சிலந்தியானது ஒரு முனையை முதலில் ஓரிடத்தில் இணைத்துவிட்டு, அங்கிருந்து பலமான ஒரு நூலில் ஆகாயத்தில் தொங்கிக்கொண்டிருக்கும்; அப்படித் தொங்கிக்கொண்டிருக்கும்போது, சௌகரிய-

மான காற்றினுல் அஃது எதிர்ப்பக்கம் அடித்துக்கொண்டு போகப்பட்டு, அங்கு நூலின் மற்றெரு முனையை இணைக்கும்.

இம்மாதிரியாக, சிலந்தி அஸ்திவார இரேகைகளைக் கட்டின பிறகு, ஓர் இரேகையின் நடுவிலிருந்து மற்றோர் இரேகையின் நடுவிடத்திற்குக் **குறுக்குநூ**லொன்றை நூற்றுக் கட்டும்; பிறகு அந்நூலின் நடுவிடத்தின் வழியாகப் பல குறுக்குநூல்களை நூற்று, வண்டிச் சக்கரத்தின் ஆர்கள் போன்ற பல ஆரரேகைகளை நூற்கும். அதன்பிறகு, சக்கரத்தின் குடத்திற்குச் சரியாக, ஆரரேகைகள் சந்திக்கும் இடமாகிய நடுவிடத்தைச் சுற்றிச் சில நூல்களை வட்டவடிவமாக நூற்கும். இச்சுழல்களை **முதற்சுழல்கள்** என்று சொல்லலாம். இவை ஆர்களுக்குச் சாரங்கள்போல் கெட்டியாக இருப்பதற்கு ஆதாரமாகின்றன. அதன்பின் சிலந்தி இம் முதற்சுழல்களுக்கு வெளியில், பிசினுள்ள நூல்களால் வெகு நெருக்கமாகச் சில நூல்களைக் கட்டுகின்றது; இச்சுழல்களை **இரண்டாஞ்சுழல்கள்** என்று கூறலாம். நெருக்கமாக நூற்கப்பட்ட இந்நூல்களே முக்கியமான வலையாகும். இந்நூல்கள் பிசினுள்ளனவாக இருப்பதனுல், ஈ, கொசு முதலான பிராணிகள் இவற்றில் எளிதின் ஒட்டிக்கொண்டு வலையில் மாட்டிக்கொள்ளுகின்றன.

சிலந்தியின் கால்கள் மெல்லிய நூல்களின்மேல் விரைவாக ஓடுவதற்கேற்றபடியும் நூல்களை வேண்டியபடி முறுக்கியோ, நறுக்கியோ அமைப்பதற்கேற்றபடியும் அமைந்திருக்கின்றன. சிலந்தி, வலையைக் கட்டினபிறகு, வலையின் அருகே தான் தங்குவதற்கு ஓரிடத்தை நிருமித்துக்கொள்கிறது. மழையிலும் வெயிலிலும் வலையில் வசிப்பது மிக்க அசௌகரியமானதல்லவா? அதனுல், வலையினருகிலேயே,

அது ஒரு மறைவில் தன் இருப்பிடத்தைக் கட்டிக்கொண்டு அவ்விருப்பிடத்துக்கும், வலைக்கும் ஒரு நூலிணைப்பைச் செய்துகொள்கிறது. வலையில் ஏதாவது ஒரு பூச்சி சிக்கிக்கொண்டால், அந்நூலிணைப்பினால் தனது இருப்பிடத்திலிருந்துகொண்டே அச்செய்தியை அது அறிந்துகொள்ளும். இனி, சிலந்திப்பூச்சி, வலையையும் தன் இருப்பிடத்தையும் கட்டி முடித்தபின்பு, தன் ஆகாரத்தை எவ்விதம் கைப்பற்றுகிறதென்பதைக் கவனிப்போம்:

காலைவேளைகளில் புஷ்பங்களுள்ள தோட்டங்களில் சிலந்தி தனது வலையில், எட்டுக்கால்களையும் எட்டு இலைகளுக்குச் சரியாக நீட்டிக்கொண்டு இறந்துபோனதுபோல் பதுங்கி வலையுடன் வலையாக இருப்பதை நீங்கள் பார்த்திருக்கலாம்; காலைவேளையில், மலர்ந்துள்ள புஷ்பங்களைத் தேடிக்கொண்டு தோட்டங்களுக்குச் சிறு பூச்சிகள் பறந்துவரும். அச்சமயங்களில், சிலந்தி தன் உணவை எதிர்பார்த்துக்கொண்டு இவ்விதம் வஞ்சகமாகத் தங்கியிருக்கும். சிலந்தியின் அதிர்ஷ்ட வசத்தால் ஏதாவது ஒரு பூச்சி, வலையில் அகப்பட்டுக்கொண்டால் அது சரேரென்று அப்பூச்சியிடம் சென்று நூல்களால் அதைச்சுற்றி, தன் விஷக்கருவியினால் அதைக் கொன்றுவிடும்; சிலந்திக்குப் பசியாகவிருந்தால் அது உடனே அப்பூச்சியின் சாரத்தை உறிஞ்சிச் சக்கையை எறிந்துவிடும். பசிக்குப் போதுமான அளவிற்குமேல் ஆகாரம் வந்து விழுந்தால், அது, அதனை நூல்களாற் கட்டித் தனது இருப்பிடத்திற்குக் கொண்டுபோய் ஜாக்கிரதையாக வைக்கும்; இவ்விதம் செய்தபிறகு, வலைக்கு நேரிட்ட கெடுதலை உடனே பழுதுபார்க்கும். சில சமயங்களில் வலையின் நடுவில் இராமல், தனது இருப்பிடத்தில் பதுங்கிக்கிடக்கும்; அப்போது வலை-

யில் ஏதாவது விழுந்து அகப்பட்டுக் கொண்டால், அதனை நாலிணைப்பினால் அறிந்து அதனிடம் செல்லும்.

காடுகளில் குழிகள் வெட்டி மனிதர்கள் யானைகளைப் பிடிப்பதுபோல், ஆன்ட் லையன் (Ant-Lion) என்று கூறப்படும் ஒருவகைப் பிராணி, தன் ஆகாரமாகும் எறும்புபோன்ற சிறிய ஊரும்பிராணிகளைக் குழி தோண்டிக் கைப்பற்றுகின்றது. இப்பிராணியைச் சாதாரணமாக 'எறும்புகளுக்குச் சிங்கம்' என்று பொருள்படும்படி, ஆங்கிலத்தில் 'ஆன்ட் லையன்' என்று கூறுகின்றனர். சிறுவர்கள் தளர்ந்த மெல்லிய மண்ணுள்ள இடங்களில் பொனல் (Funnel) போன்ற சிறு குழிகளைத் தோண்டுவதையும், அவற்றினுள்ளிருந்து குழிப்பன்றி என்னுஞ் சிறு பூச்சிகளை எடுத்து, "பன்னி, பன்னி, உச்சுக் கொட்டு" என்று சொல்லி விளையாடுவதையும் பலர்பார்த்திருக்கலாம். இந்தப் பூச்சி காலக்கிரமத்தில் தும்பி அல்லது தட்டாரப் பூச்சியைப் (Dragonfly) போன்ற ஒரு பிராணியாக மாறும். கம்பளிப்பூச்சி வளர்ந்து வண்ணாத்திப்பூச்சியாக மாறுவதுபோல் இக் குழிப்பன்றியும், இறகு முளைத்துப் பூச்சியாகும். இதன் தலைப்பாகம் மண்ணைப் பறிப்பதற்கேற்றபடி தட்டையான கரண்டிபோல் இருக்கிறது. இதன் கால்கள் பலமற்றனவாக விருப்பதனால், தன் உணவாகும் பிராணிகளைப் பின்தொடர்ந்து செல்லும் நிலைமையில் இஃது இல்லை; ஆகையால் ஆகாரத்தைக் கைப்பற்ற வேறு உபாயத்தை அனுசரிக்கிறது. குழிப்பன்றி பறக்கமுடியாமல் குழந்தைப் பருவத்திலிருக்கும்பொழுது, பூமியில் பொனல்போன்ற குழிதோண்டி அதனுள் வசிக்கும். முதலில் உடலின் பின்பாகத்தைப் பூமியில் அழுத்திக்கொண்டு, உடலைச் சுற்றிச் சுற்றிப் பொனல்போன்ற குழியைச் செய்துகொள்ளும்; பிறகு தட்டையான

தலையினாலும், கால்களினாலும் மண்ணைத்தோண்டும்; இவ்விதமாகக் குழிசெய்து அதனடியில் மண்ணினுள்ளே தலையை மேற்புறமாகவும் உடலை மண்ணில் உட்புறமாகவும் வைத்துக்கொண்டு மறைந்துகிடக்கும். எறும்புகள் சாதாரணமாக எங்குஞ் செல்வதனால், அவ்வழியாகச் செல்லும் ஏதேனும் ஓர் எறும்பு, அக்குழியைக் கண்டு தன் புற்றுக்கு வேண்டிய ஆகாரம் ஏதாவது கிடைக்காதா என்று எட்டிப் பார்க்கும்போது மண் தளர்தலின், குழியினுள்ளேவிழ நேரிடுகிறது அம்மாதிரி விழுந்த எறும்பு வெளியே தப்பித்துக்கொண்டுபோகத் தத்தளிக்கையில், குழியின் உள்ளேயிருந்த குழிப்பன்றி மண்ணைக் கிறுகிறுவென்று பறித்து, எறும்பை மேலேறவொட்டாமல், மண்ணினுள்ளே புதையும்படி செய்கிறது; உடனே தன் கூர்மையான தாடைகளால் அவ்வெறும்பைக் குத்திக் கொன்று அதன் சாரத்தை உறிஞ்சும்.

தூண்டில்கள் போட்டு மனிதர்கள் மீன்களைப் பிடிப்பதுபோல், ஒருவிதமான மீன் மற்றைச் சிறுமீன்களைத் தூண்டில் போட்டுப் பிடித்துத் தின்கின்றது. அதற்குத் தூண்டிலானது அதன் உடலிலேயே சேர்ந்து ஒரு சதையாக வளர்ந்திருக்கிறது. அம்மீனின் தலை மிகப் பருமனாகவும், வாய் வெகு அகலமாகவும் இருக்கும். அதன்தலையில் நீண்ட மெல்லிய நூல்கள்போன்ற அமைப்புக்கள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று மிகவும் நீண்டு, நுனியிற் சிறு குஞ்சத்துடன் கூடியிருக்கிறது. அக் குஞ்சமும் நூலமைப்பும் தண்ணீரில் மிதக்கும்போது ஒரு தூண்டிற்கயிற்றில் வைக்கப்பட்டிருக்கும் புழுவின் தோற்றத்தை ஒத்திருக்கும். அம்மீனானது சமுத்திரத்தில் தன் உடலை மணலிற் புதைத்துக்கொண்டு தூண்டில்போன்ற குஞ்சத்தை வெளியே நீட்டிக்கொண்டு பதுங்கியிருக்கும். அப்-

பொழுது மற்றச் சிறு மீன்கள் அக்குஞ்சத்தைக் கடலில் வாழும் புழுவென்று நினைத்துத் தின்பதற்கு ஆவலுடன் அருகே வரும். அச் சமயத்தில் அம்மீன், அச்சிறு மீன்களின்மேல் சரேரென்று பாய்ந்து அவற்றை விழுங்கிவிடும்; அவற்றை விழுங்குவதற்கேற்றபடி அம்மீனினுடைய வாய் மிகப் பெரிதாயிருக்கிறது. விழுங்கிய மீன்கள் வெளியே தப்பித்துக்கொண்டு போகாமல் இருக்கும்பொருட்டு அதன் கூரிய பல பற்கள் வாயினுள்ளே பின்புறமாக வளைந்து இருக்கின்றன. அன்றியும் அதன் வாயைச் சுற்றிலும் சதை வளர்ந்திருப்பதனுல், அது உடலை மண்ணினுள்ளே மறைத்துக்கொண்டிருக்கும்போது, கடலில் வளர்ந்திருக்கும் ஒருவகைக் கடற்பாசிபோல் தோன்றுமேயொழிய மீன் என்று தோன்ருது.

5. கோப்பெருஞ்சோழர்[1]

[திரு. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்]

கோப்பெருஞ்சோழர், பண்டொருகாலத்தில் ஒரு கோழியானது யானையொன்றைப் போரில்வென்ற இடமாதலின் 'கோழி' எனப் பெயர்பெற்றதும், தொன்றுதொட்டுச் சோழமன்னர்கள் வீற்றிருந்து அரசாளப்பெற்ற தலைநகரங்களுள்ளே மிக்க பழமை வாய்ந்ததும், அறங்கள் நிலைபெற்ற அவைக்களத்தைத் தன்னகத்தே கொண்டிருந்ததும், 'ஊரெனப்படுவ துறையூர்' என ஆன்றோர் பலராலும் சிறப்பித்தோதப் பெறுவதும் ஆகிய உறந்தையம்பதியில் இருந்தவர்; கல்விக் கடலின் எல்லை கண்டவர்; தீஞ்சுவை கெழுமிய செந்தமிழ்ப்பாக்கள் பாடுவதிற் சிறப்பு மிக்கவர்; அறத்தின் நுட்பங்களையெல்லாம் அறிந்து தாம் அவ்வாறொழுகுவதோடு, யாவரும் அறம்புரிந்து மேன்மையுற-வேண்டுமென்னும் பெருவிருப்பினர்; புலவர்பெருமக்களிடத்துத் தாம் வைத்துள்ள அன்பாலும் மதிப்-பாலும் அவர்களுடைய அன்பையெல்லாம் கொள்ளை-கொண்டவர்; அவ்வாற்றால், தோலா நல்லிசை மேலோ-ராகிய பிசிராந்தையார், பொத்தியார் என்னும் தண்-டமிழ்ப் புலவர்கள் தமக்கு ஆருயிர் நண்பர்களாக அமையப்பெற்றவர்.

பிசிராந்தையார் என்பவர் பாண்டி நாட்டில் பிசிர் என்னும் ஊரிலிருந்த ஒரு புலவர். அவரது பெயரிலிருந்து அவரை ஆதன் என்பானுக்குத் தந்தை-யார் என்றாவது, ஓர் ஆதன் றந்தையின் வழியில் வந்து அப்பெயரிடப்பெற்றவர் என்றாவது கொள்ளு-

[1] ஆசிரியரின் அனுமதி பெற்றுப் பதிப்பிக்கப்பட்டுளது.

தல் தரும். ஆதன்றந்தை ஆந்தையென மருவுமாறு தொல்காப்பியத்திற் கூறப்பட்டுளது. பிசிராந்தையார், தமது வாழ்நாளின் இறுதிக்கூற்றில் தமக்கு நரையில்லாததன் காரணத்தை வினவிய சான்றோர்க்குத் தாம் விடையிறுத்தலாகப் பாடியுள்ள பாட்டிலிருந்து அவரது களங்கமற்ற உயரிய வாழ்க்கைநிலை புலப்படும். அது,

"யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்
யான்கண் டனையரென் இளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் அதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே"

என்பது. தம் மனைவி மக்கள் அறிவிலும் குணத்திலும் மாட்சியுடையராதலும், ஏவலாளர் தாம் கருதியதைக் கருதியவாறே செய்துமுடித்தலும், தம் நாட்டரசன் முறைவழுவாது குடிகளைப் பாதுகாத்தலும், தம்மூரின்கண் சான்றோர்பலரிருத்தலும் தமக்கு ஆண்டு பல சென்றும் நரையில்லாதிருத்தற்குக் காரணம் எனக் கூறிய அவரது உயரிய மனநிலை நமது புகழ்ச்சிக்கண் எங்ஙனம் அடங்குவதாகும்? இப்பெற்றியராய பாண்டிநாட்டுப் பிசிராந்தையார்க்கும் சோழநாட்டுக் கோப்பெருஞ் சோழர்க்கும் செப்புதற்கரிய நட்பொன்றுளதாகி வளர்ந்து வருவதாயிற்று. ஆனல் அவர்கள் ஒருபொழுதும் ஒருவரை யொருவர் நேரிற் கண்டவரல்லர். ஒருவர் ஒருவருடைய குணங்களைக் கேள்வியுற்ற மாத்திரையானே அவர்கள்பால் அடங்கியிருந்த உழுவலன்பு வெளிப்பட்டு அவ்விருவரையும் ஒத்த வுணர்ச்சியுடைய நட்பினராக்கிவிட்டது. அவர்கள் ஒருவரொருவரைப்பற்றிப் பேசாத நாளும், நினையாத நாழிகையும் இருந்திருத்தல் சாலாது.

இவ்வாருகிய உத்தம நட்பினுல் விளையும் இன்பத்தைப் பார்க்கிலும் இவ்வுலகத்துச் சிறந்த வின்பம் யாதுளது? தலையாயார் தம்முட்செய்த நட்புக் கரும்பை நுனியிலிருந்து தின்ருற் போலவும், பேரறிவாளர்களியற்றிய நூல்களின் நயம் அவற்றிற் பயிலுந்தோறும் வெளிப்பட்டு இன்பம் விளைத்தல் போலவும் மேன்மேல் வளர்ந்து இன்பம் பயப்பதாமெனக் கூறுவர் ஆன்ருேர். துறக்க வின்பமும் இதற்கு நிகராகாதெனில் இதன் பெருமையை வேறு கூறுதல் என்? கோப்பெருஞ் சோழரும் பிசிராந்தையாரும் காண்டலின்றியும் இங்ஙனமாக இண்டிய நட்பின் பயன் துய்த்து வருங்காலத்தில் நிகழ்வதொரு செய்தி நெஞ்சினையுருக்குந் தன்மையது.

இவ்வரசர் பெருந்தகைக்கு இரண்டு மக்கள் உளராயினர்.

"மகனுரைக்கும் தந்தை நலத்தை"

என்றும்,

"தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்"

என்றும் ஆன்ருேர் கூறும் பொதுநீதிக்கு விலக்காக ஒரோவழித் தகவிலார்க்கு நன் மக்களும், தகவுடையார்க்குத் தீய மக்களும் உண்டாகின்றனர். கோப்பெருஞ் சோழரின் மக்களும் பாற்கடலிற்ருேன்றிய ஆலாலம்போலுங் கொடிய பண்பினராயிருந்தனர். அன்பிற்கே நிலைக்களமாகிய தம் அருமைத் தந்தையுடன் போர்செய்யவும் எழுந்தனரென்ருல் அன்னவரின் தீயபண்பை என்னென் றெடுத்துரைப்பது? கொடியவர்களான் மக்கள் போர்குறித்து வருதலைக் கோப்பெருஞ்சோழர் கண்டார்; சினங்கொண்டார்; தாமும் போர் செய்தற்கு அக் கொடியார்மேற் சென்ருர். அப்பொழுது அங்கிருந்து அந்நிகழ்ச்சியைப்

பார்த்துக்கொண்டிருந்த **புல்லாற்றூர் எயிற்றியனுர்** என்னும் புலவர்க்கு ஓர் நல்லெண்ணம் உண்டாயிற்று. அஃது அவருக்கு இயற்கையுமாகும். அருஞ்சீர்த்திப் பெருஞ் சோழரைப் போர் செய்யாது தடுக்கவேண்டுமென்பதே அவரது எண்ணம். அவர், பெருங்கோவைப் பார்த்துப் பின்வருமாறு கூறுவாராயினர்.

'அமரின்கட் பகைவரை அடுதல் செய்த வென்றியையும், வலிய முயற்சியையும், நிலமுழுதும் நிழல்செய்யும் வெண்கொற்றக் குடையினையும் உடைய வேந்தே, நின்னுடன் போர் செய்தற்கு வந்த இருவரையும் பார்க்குமிடத்து, அவர்கள் நின் பகைவேந்தர்கள் அல்லர்; நீயும் அவர்க்குப் பகைவன் அல்லை. தோன்றலே, நீ இவ்வுலகத்துப் பரந்த புகழை யெய்தித் தேவருலகத்தை யடைந்தபொழுது நின்னல் ஒழிக்கப்பட்ட அரசாட்சியுரிமை அவர்க்குரியது; அதனையும் நீயே அறிவை; புகழை விரும்புவோனே, நின்னுடன் போர்செய்தற் கெழுந்த சூழ்ச்சியற்ற அறிவினையுடைய நின் புதல்வர் தோற்பின், நின் பெரிய செல்வத்தை அவருக்கன்றி யாவர்க்குக் கொடுப்பாய்? நீ அவருக்குத் தோற்பின், நின்னை யிகழும் பகைவர் உவக்கும்படியாக இவ்வுலகத்தே பழியை நிறுத்துவாய்; ஆதலால் நினது மறன் ஒழிவதாக; விண்ணோர்கள் விருப்புடன் நின்னை விருந்தாக எதிர்கொள்ளுமாறு நல்வினை செய்தல் வேண்டும்; அதற்கு விரைந்து எழுக; நின் உள்ளம் வாழ்வதாக.'

இவ்வாறுக நல்லிசைப்புலவரால் தெருட்டப்பெற்றபின், பெருங்கோவின் உள்ளத்திற் பொங்கியெழுந்த சினம் 'இடுநீற்றாற் பையவிந்த நாகம்போல்' அடங்கிவிட்டது. எனினும், மானம் என்பது அரசர்க்கு உயிரினுஞ் சிறந்ததாதலின், அவர், பின் உயிர்வாழ ஒருப்பட்டிலர்.

"மான மழிந்தபின் வாழாமை முன்னினிதே"
"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்"

என்பன ஆன்றோரின் முதுமொழிகளல்லவா? தம் மக்களால் தமது குலத்திற்கும், தமக்கும் பழியுண்டாதலை யுன்னி உயிர் துறக்கத் துணிந்தார் பெருஞ் சோழர். தற்கொலைசெய்துகொள்வதில் பழியில்லாததொரு வழியை முற்காலத்தவர் கைக்கொண்டிருந்தனர். அதுதான் வடக்கிருத்தல் என்பது. வடக்கிருத்தல் என்றால், யாதேனும் இன்றியமையாக் காரணம்பற்றி உயிர்துறக்கத் துணிந்தவர், ஆற்றிடைக்குறைபோலும் தூயதொரு தனியிடத்தை யெய்தி, வடக்குநோக்கியிருந்து, உணவு முதலியன துறந்து, கடவுட் சிந்தையுடன் உயிர்விடுதலாம். பெருங்கோவும் அங்ஙனமே வடக்கிருத்தலை மேற்கொள்வாராயினர்.

* * * *

அப்பொழுது அங்கே குழுமியிருந்த சான்றோர்களைப்பார்த்து 'என் நண்பன் பிசிராந்தை இப்பொழுது வருவன்' என்று பெருஞ்சோழர் கூறினர். சான்றோர்கள் 'அவர் வாரார்' என்றனர். அதுகேட்டதும் பெருங்கோவானவர், 'என் உயிரைப் பாதுகாக்கும் நண்பன் பாண்டிநாட்டுள்ளும் சேய்மையி லுள்ளதாகிய பிசிர் என்னும் ஊரிடத்தான் என்று சொல்லுவர்; எனினும், யாம் செல்வம் உடைய காலத்து அவன் வாராதிருப்பினும், துன்புறுங்காலத்து வாராதிருப்பானல்லன்' என்றனர். சான்றோர்கட்கோ ஐயந்தீர்ந்தபாடில்லை. கோப்பெருஞ் சோழர் பின்னரும் கூறுகின்றார்: 'நிறைந்த அறிவினை யுடையீர், "அவன் நின்னைக் கேள்வியுற்றிருப்பதல்லது சிறிதுபொழுதும் கண்டதில்லை; பல ஆண்டுகள் தவறாது பழகிப்போந்த உரிமையுடையாராயினும் நீ கூறியவாறு வழுவுதலின்றி யொழுகுதல் அரிதேயாகும்" என்று கருதி ஐயுற்-

தொழிவீராக; அவன் என்றும் என்னைப் புறக்கணித்தவனல்லன்; இனிய குணங்களை யுடையன்; பிணித்த நட்பினை யுடையன்; புகழை யழிக்கும் பொய்ம்மையை விரும்பான்; தன் பெயரைப் பிறர்க்குச் சொல்லும்பொழுது "என்பெயர் கோப்பெருஞ்சோழன்" என்று என்பெயரையே தன்பெயராகச் சொல்லும் அன்பினன்; அதன்மேலும் இப்படி யான் துயரமுறுங்காலத்து ஆண்டு நில்லான்; இப்பொழுதே வருவன்; அவனுக்கு இடமொழித்து வைப்பீராக' என்றனர்.

இங்ஙனங் கூறிக்கோப்பெருஞ்சோழர் வடக்கிருக்கவே, பிசிராந்தையாரும் அவர் கூறியாங்கு அப்பொழுது அவண் வந்துசேர்ந்தனர். பெருங்கோவுக்கு ஆருயிர் நண்பரும், உறையூரிலிருந்தவரும் ஆகியபொத்தியார் என்னும் புலவர் அதனைக் கண்டார்; அளவிடமுடியாத வியப்பினையும், அடக்கவொண்ணாத துயரத்தினையும் உடையராயினர். அப்பொழுது அவர் கூறியதாவது:

'இவ்வரசன் எத்துணைப் பெரிய சிறப்புக்களுடன் கூடியும் அவற்றையெல்லாம் கைவிட்டு இவ்விடத்தே இப்படி வரத் துணிதல், நினைக்குமிடத்து வியப்பினையுடையது; வேற்றுவேந்தனது நாட்டின்கண் விளக்கமமைந்த சான்றோன், புகழ் மேம்பாடாக, நட்பே பற்றுக்கோடாக இன்னதோர் இன்னாக்காலத்து வழுவின்றி இவ்விடத்து வருதல் அதனினும் வியப்பையுடையது; இவ்வாறு வருவனென்று துணிந்து சொல்லிய வேந்தனது பெருமையும், அவன் சொல்லியசொற் பழுதின்றாக வந்தவனது அறிவும் வியக்குந்தோறும் வியக்குந்தோறும் வியப்பு எல்லைகடந்துளது; ஆதலால், தன் செங்கோல் செல்லாத தேயத்துறையும் சான்றோனது நெஞ்சைத் தன்னிடத்தே உரித்தாகப் பெற்ற பழைய புகழையுடைய அத்தன்மையுள்ள பெரியோனை யிழந்த இத்தேயம் என்ன துன்பமுறுங் கொல்லோ! இதுதான் இரங்கத்தக்கது!' என்பது.

இங்ஙனம் பொத்தியார் வியந்தும் கையற்றும் கூறுமாறு சென்ற பிசிராந்தையாரும் வடக்கிருந்தனர். மற்றும் வடக்கிருந்தார் பலராவர். என்னே அன்பின் தகைமை! அன்பென்பது பல உடம்பிலுள்ள உயிர்களை ஒன்றாகப் பிணிக்குந் தன்மையாற்றான் அதற்கு நார் என்று பெயர் உண்டாயிற்றாதல் வேண்டும். இங்ஙனம் பெருங்கோவுடன் ஒருங்கே வடக்கிருந்தார் பலராகவும், அவர்க்கு உயிர்நண்பராகிய பொத்தியார்மாத்திரம் உடன் வடக்கிருந்தாரல்லர். அதற்குக் காரணம், அவர்மனைவி கருவுற்றிருந்தமையால் கோப்பெருஞ்சோழர் அவரைத் தடுத்து 'நினக்கு மகன் பிறந்தபின் வருக' என்று கூறியமொழியை மறுக்காலாற்றாமையேயாகும். எனவே, அவர் உடனுயிர் துறவாமைக்கும் நண்பன்சொல்லை மறுக்கலாற்றாத அவரது நட்புரிமையே காரணமாயிற்றென்பது தெளிவு. பிசிராந்தையாரும், பெருங்கோவும் வடக்கிருந்தமை கண்டு முறையே கண்ணகனார், கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார் என்னும் புலவர்கள் இரங்கிப் பாடியுள்ளார்கள். கண்ணகனார் பாடியது,

“பொன்னுந் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினுந் தொடைபுணர்ந்
தருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங் கென்றுஞ் சான்றோர்
சான்றோர் பால ராப
சாலார் சாலார் பாலரா குபவே” (புறம்)

என்னும் அழகிய பாட்டாகும். 'பொன்னும், பவளமும், முத்தும், மணியும் நிலம், கடல், மலை என்பவற்றில் ஒன்றுக் கொன்று நெடிய சேய்மையிலிருப்பினும், அரிய விலையினையுடைய நல்ல அணிகலன்களைச் செய்யும்பொழுது அவை ஓரிடத்துத் தோன்றினாற்போல, எப்பொழுதும் சான்றோர் சான்றோர் பக்கத்தினராவர்' என்பது இதன்பொருளாம்.

பொத்தியார் என்னும் புலவர், தம் நண்பன் சொல்லை மறுது சென்று உறையூரைக் கண்டபொழுதும், பின்பொருகால் அரசனது நடுகல்லைக் கண்டபொழுதும் இரங்கிப்பாடிய பாட்டுக்கள் நெஞ்சினையுருக்கும் தன்மையன. 'செங்கோலினன், திண்ணிய அன்பினன், மகளிர்க்கு மெல்லியன், வீரர்க்கு வீரன், உயர்ந்தோர்க்குப் புகலிடம். அவனை அத்தன்மையனென்று கருதாது கூற்றம் உயிர்கொண்டுபோயிற்று; ஆதலால் வாய்மையுடைய புலவர்களே, நம் துன்புற்ற சுற்றத்தையும் சேர்த்துக்கொண்டு அக் கூற்றத்தை வைவோம் வாரீர்' என்று கூறுகின்றார்.

இவ்வாறு தம் ஆருயிர் நண்பனைப் பிரிந்து ஒருநாளும் பொறுத்திருக்கலாற்றாத பொத்தியாரும், தமக்கு மகன் பிறந்தபின்னரும்வாளா அமைந்திருப்பரோ?மகனும் பிறந்தான்; அவருஞ் சென்றார்; சென்று நடுகல்லைக் கண்டு அவர், '"நிழலைக்காட்டிலும் நின்னைப் பிரியாதுறையும் நின் விருப்பமுள்ள மனைவிவயிற்று மகன் பிறந்தபின் வா" எனச்சொல்லி என்னை இங்குநின்றும் போக்கிய அன்பிலாதவனே, நின்னோடுஎன்னிடையுள்ள நட்பினை நீ எண்ணாதிருப்பாயல்லை; புகழை விரும்புவோனே, எனக்கு நீ குறித்துள்ள இடம் யாது? சொல்வாயாக' என்றனர். கோப்பெருஞ்சோழரோ கல்லாகியும் அவர்க்கு இடங்கொடுத்தனர். அவரும் 'இன்னுயிர் விரும்புங் கிழமைத் தொன்னட்புடையோர் தம்முழைச் செலின், அவர் நடுகல் ஆகியக்கண்ணும் இடங்கொடுத்தளிப்பர்' என்று அதனை வியந்துகூறி, வடக்கிருப்பாராயினர். இவ்வரசரைப் பாடிய புலவர்கள் பிசிராந்தையார், எயிற்றியனார், பொத்தியார், பூதநாதனார் என்போர்.

6. சருவதேச சங்கம்[1]

[ஸ்ரீமதி. ரா. அரங்கநாயகி யம்மையாரவர்கள்]

சருவதேச சங்க ஏற்பாடு

அறங்கருதியும், மண்வேட்டும் அரசர் ஒருவர்மீது ஒருவர் படையெடுத்துப் போர்புரிதல் தொன்று-தொட்ட வழக்கமாகும். பகுத்தறிவும் நாகரிகமும் குடியாட்சிக் கொள்கையும் பெருகி விளங்குகின்ற இக்காலத்திலும், வல்லரசுகள் போர்புரிய முனைந்து-நிற்பதைக் கேட்கின்றோம். ஐந்தாண்டுகள் இடையீ-டின்றித் தொடர்ந்து நடைபெற்ற ஐரோப்பியப் பெரும்போருக்குப்பின்னர், இனி, உலகில் போர்-களே நிகழாதவாறு தடைசெய்ய ஏதேனும் ஒருவழி காணவேண்டும் என்ற உணர்ச்சி எங்கும் பரவுத-லாயிற்று. அதனால், 1920-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10-ஆம் நாளில், ஜெர்மனியும் நேசதேசங்களும் செய்து-கொண்ட **வர்ஸேல்ஸ்** சமாதான உடன்படிக்கையை நடைமுறையில் கொண்டுவந்தபோழ்து, பாரிஸ்நகரில் உலக அமைதியை நிலைநிறுத்தும் நோக்கத்துடன் 'சருவதேச சங்கம்' ஏற்படுத்தப்பட்டது. உலகிலுள்ள எல்லாநாடுகளிலும் பரஸ்பர ஒத்துழைப்பையும், அமைதியையும், பாதுகாப்பையும் நாடி வளர்த்தலே சருவதேச சங்கத்தின் அடிப்படையான நோக்கம். சருவதேச சங்கத்திற்கு உயிர்நாடியாக விளங்குவது அதன் விதிகள் அடங்கிய உடன்படிக்கைப்பத்திரமே (Covenant). அந்த உடன்படிக்கைப் பத்திரத்தில் கண்டுள்ள விதிகளெல்லாம் மிக உயர்ந்தவை என்று உலகில் பேரும் புகழும் பெற்றுள்ள மேதாவிகளால் மதிக்கப்பட்டிருக்கின்றன. சங்கத்தில் அங்கம் வகிக்க

---

[1]கட்டுரையாளரின் அனுமதி பெற்றுப் பதிப்பிக்கப்பட்டது.

விரும்பும் நாடுகள் அவ்விதிகளை மனமார ஒப்புக்கொள்ளல்வேண்டும்.

சங்கத்தில் உறுப்புக்களான நாடுகள்

தன்னாட்சி உரிமையுடைய எந்த நாடும் சருவதேச சங்கத்தில் அங்கம் பெறலாம். அதிலிருந்து பிரிந்துகொள்ள விரும்பினால், இரண்டாண்டு முன்னறிக்கை கொடுத்து, பின்பு பிரிந்துகொள்ளலாம். இப்பொழுது சருவதேச சங்கத்தில் ஐம்பத்தாறு நாடுகள் சேர்ந்திருக்கின்றன. பெரிய வல்லரசாகிய அமெரிக்கா இன்னும் சேரவில்லை. ஜப்பான், ஜெர்மனி போன்ற வல்லரசுகள் முதலிற் சேர்ந்து, பின்னர்ப் பிரிந்து விட்டன. இவற்றிற்கான அரசியற் காரணங்கள் பல. அவைகளை யெல்லாம் ஈண்டு விரிக்கிற் பெருகும்.

சங்கத்தில் பிரிட்டன் செல்வாக்கு

சருவதேச சங்கத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குட்பட்ட ஆஸ்திரேலியா, கானடா, இந்தியா, அயர்லாந்து, நியூஜிலந்து, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகள் தனித்தனி உரிமையுடன் உறுப்புக்களாய் இருக்கின்றன. அதனால் சங்கத்தில், பிரிட்டன் மிகுந்த செல்வாக்கும் வலிமையும் பெற்று விளங்குகின்றது.

சங்கத்தின் உண்மைநிலை

சருவதேச சங்கத்தில் சேர்ந்த நாடுகளிலுள்ள மக்கட்டொகை, உலக மக்கட்டொகையில் மூன்றில் ஒருபங்காகும். அமெரிக்கா முதலிய நாடுகள் சங்கத்தில் அங்கம் பெறாவிடினும், அவை, உலகநலத்தின்பொருட்டுச் சங்கம் மேற்கொண்டு நடத்திவரும் வேலைகளுக்கு ஆதரவு நல்கி, ஓரளவு ஒத்துழைத்துவருதல் குறிப்பிடத்தக்கதாகும். போர்க்கருவியொழிப்பு (Disarmament), பொருளாதார முன்னேற்றம், சமூகமுன்னேற்றம் முதலிய முயற்சிகளில் உலகிலுள்ள எல்லா-

நாடுகளும் கலந்துகொண்டிருக்கின்றன. சருவதேச-சங்கம் மேற்கொள்ளும் பிரச்சினைகளும் (Problems) வேலைகளும், ஒழுங்காகவும் திறமையாகவும் கவனிக்-கப்பட்டு நடைபெற்று வருவதனால், எந்த நாடும் அதனோடு சிறிதேனும் தொடர்பின்றி வாழ முடியாத தொரு நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இவ்வுண்-மையை ஒவ்வொரு நாடும் கண்கூடாக உணர்ந்து வருகின்றது என்பதிலும் ஐயமில்லை. சில குறிப்பிட்ட நாடுகள் சங்கத்திற் சேராமையால், சங்கத்தின் நிரு-வாகத்திலும் முடிபுகளிலும் சிற்சில குறைகள் நேர்தல் இயல்பே. அன்றியும், சருவதேச சங்கமானது சாதா-ரண அரசாங்கங்களைப் போன்றதன்று என்பதையும் உளங்கொள்ளவேண்டும். கட்டாயப்படுத்திச் சட்ட திட்டங்கட்கு உட்படுத்த அதிகாரஞ் செலுத்தும் முறையில் அஃது அமைக்கப்படவில்லை. உலக அமை-திக்கும் பாதுகாப்புக்கும் உரிய உயரிய கொள்கைகளை வகுத்து அறிவிக்கும் ஓர் தனிப்பெருங் கருவியாகவே அது நிலவுகின்றது.

ஒறுக்கும் முறைகள்

சருவதேச சங்கத்தில் சேர்ந்துள்ள நாடுகளெல்-லாம், விதிகளின்படி சமாதான முறைகள் பயனின்றிக் கழிந்தாலொழியப் போருக்கு முனைவதில்லை என்றும், சங்கத்தின் தீர்ப்புக்குக் கட்டுப்படுகின்றோமென்றும் ஒப்புக்கொண்டிருக்கின்றன. சங்கத்தீர்ப்புக்குக் கட்-டுப்பட்டு நடக்க விரும்பாத நாட்டை, பொருளா-தாரத்துறை—வர்த்தகத்துறைகளினின்றும் நீக்குதல், இன்றியமையாவிடத்துப் படைத்துணைகொண்டு அடக்க முயலுதல், சங்கத்தினின்றும் விலக்குதல் ஆகிய முறை-களால் ஒறுத்துத் துன்புறுத்தி நல்வழிப் படுத்தலாம் என்று நம்பப்படுகிறது. இச்சங்கம் இதுகாறும் மேற்-கொண்ட வேலைகளில் அடைந்திருக்கும் வெற்றிகளுள் சிலவற்றைச் சுருக்கமாகக் கூறுவோம்:

சருவதேச சங்கத்தின் வெற்றிகள்

சருவதேச சங்கம், தன் முதற்பெருநோக்கமாகிய போரொழிக்குந்திறத்தில் கண்ணுங் கருத்துமாயிருந்து முயன்றுவருகின்றது. பகைகொண்ட நாடுகள் தத்தம் வேற்றுமைகளைப் போக்கிக்கொள்ள உதவிபுரிவதன்-மூலம் சங்கமானது போர்கள் நிகழாவண்ணம் தடை செய்திருக்கின்றது. அதற்கு, கீழ்வருஞ் சில உதா-ரணங்கள் தக்க சான்றுகளாக விளங்குகின்றன.

(1) 1920 - ஆம் ஆண்டில் ஸ்வீடனுக்கும், பின்லந்-துக்கும் ஏற்பட்ட பிணக்குத் தீர்த்து வைக்கப்பட்டது.

(2) 1920 - ஆம் ஆண்டிலேயே போலந்துக்கும் லிதுயேனியாவுக்கும் ஏற்பட்ட பகைமை நீக்கப்பட்டது.

(3) 1921 - ஆம் ஆண்டில் யுகோஸ்லேவியாவுக்கும் அல்பீனியாவுக்கும் நேர்ந்த சண்டை நிறுத்தப்பட்டது.

(4) 1923 - ஆம் ஆண்டில் கிரீஸ், இத்தாலிகளுக்-கிடையே ஏற்பட்ட நெருக்கடி ஒழுங்குபடுத்தப்பட்டது.

(5) 1925 - ஆம் ஆண்டில் பிரிட்டனுக்கும் துருக்-கிக்கும் ஏற்பட்ட மோஸல் எல்லையுரிமைத்தகராறு தீர்த்துவைக்கப்பட்டது.

(6) 1925 - ஆம் ஆண்டிலேயே எல்லையுரிமை பற்றி, கிரீஸ், பல்கேரியாமீது போர் தொடுக்க அறைகூவிய-போது, ஐந்துநாளில் அமைதி நிலவுமாறு செய்யப்-பட்டது.

(7) 1928 - ஆம் ஆண்டில் பொலிவியா — பரா-குவே நாடுகள் கடும்போர் புரிந்துகொண்டிருந்தபோது, அவைகளுக்குள் சமாதானம் ஏற்படுத்தப்பட்டது.

(8) 1931 - ஆம் ஆண்டில் சைன — ஜப்பான் பகைமையைத் தீர்க்க, அமெரிக்க அரசாங்கத்துடன் சேர்ந்து முயற்சிசெய்யப்பட்டது.

இவ்விதம் எத்தனையோ சிக்கல்கள் சருவதேச சங்கத்தால் தீர்த்துவைக்கப்பட்டிருக்கின்றன. இத்தாலி—அபிஸீனியப் போர்நிறுத்தத்தின் பொருட்டுச் சங்கம் எடுத்துக்கொண்ட முயற்சிகளும் இண்டுக் குறிப்பிடத்தக்கவையாகும்.

போர்க்கருவி யொழிப்பு முயற்சி

'எந்த நாடும் தற்காப்புக்கு இன்றியமையாத போர்க்கருவிகளைமாத்திரம் வைத்துக்கொள்ளவேண்டும்; அளவுக்குமீறிப் போர்க்கருவிகளை உண்டாக்கி வைத்துக்கொள்ளுவதே போர் நிகழ்ச்சிகட்குத் தலையாய காரணமாகும்' என்ற கருத்தை எல்லாநாடுகளும் கொள்கையளவில் ஒப்புக்கொண்டிருக்கின்றன. ஆனல், இக்கொள்கையை நடைமுறையில் நிறைவேற்றி வைப்பதில் பல சங்கடங்கள் நேரிடுகின்றன. ஜினிவாவில், சருவதேச சங்கத்தின் ஆதரவில் 1932 - ஆம் ஆண்டில் நடைபெற்ற உலகப்போர்க்கருவியொழிப்பு மஹாநாடு எதிர்பார்த்த வெற்றியை அளிக்கவில்லை. பல்லாயிர ஆண்டுகளாக மாந்தர்சமூகத்தில் வேரூன்றிக்கிடக்கும் போருணர்ச்சியை நினைத்தமாத்திரத்தில் போக்கிவிடுதல் எளிதில் முடியக்கூடிய காரியம் அன்று. எனினும், போர்க்கருவியொழிப்புத்திறத்தில், சருவதேச சங்கம் விடாமுயற்சியுடன் உழைத்துவருகின்றது. அறிஞர்கள் அதற்குரிய வழிகளை அல்லும் பகலும் ஆராய்ந்துவருகின்றனர்.

பிற செயல்கள்

சருவதேசசங்கம், போர்முறைகளைத் தடைசெய்து, உலக அமைதிக்கு வழிகாண முயற்சி செய்வதுடன் மன்பதையின் இன்பவாழ்க்கைக்கு உரிய சமூகத்தொண்டிலும் கருத்தைச் செலுத்திவருதல் கவனிக்கத்தக்கதாகும். எந்த நாட்டினுலும் தனிப்பட மேற்கொள்ள முடியாத பல அறிவியல் — சமூகவியல் பற்றிய விஷ-

யங்களைச் சருவதேச சங்கம் மேற்கொண்டுமுடிபு காண முயன்றுவருகின்றது. அடிமைவியாபாரம், அபினி முதலிய அபாயகரமான மருந்துவியாபாரம், தொத்து-நோய் மலேரியாபோன்ற கொடியநோய்கள் முதலிய தீமைகளைத் தடைசெய்யச் சங்கம் கருத்தைச் செலுத்தி முயன்றுவருகின்றது.

பொருளாதார உதவிக்கு ஏற்பாடு

சருவதேச சங்கத்தைச் சேர்ந்த நாடுகளில் ஏதே-னும் ஒன்று பொருளாதாரத்துறையில் தாழ்வடைந்து வருந்தினால், அதற்குரிய உதவி புரியவும் அது முன்னிற்-கின்றது. சில ஆண்டுகட்குமுன் பொருள்முட்டுப்பாட்-டால் தத்தளித்த ஆஸ்திரியா, ஹங்கேரி நாடுகள் சங்கத்தின் உதவியால் இப்பொழுது நன்னிலைமையில் இருப்பதே இதற்குப் போதிய சான்றாகும்.

சட்டம், நீதிப்பிரிவு

சருவதேச சங்க நாடுகளுக்கிடையே ஏற்படுஞ் சட்ட சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கவும், சங்கத்திற்குச் சட்ட சம்பந்தமான ஆலோசனைகூறவும், ஒரு பெரிய நீதிமன்றம் நிறுவப்பட்டிருக்கிறது. அதற்-குச் 'சருவதேச சாசுவத நீதிமன்றம்' என்றுபெயர். அது சருவதேச சங்கத்தை ஒட்டிய ஒரு தனிஸ்தாபனம். அந் நீதிமன்றத்தில் 15 உயர்தர நீதிபதிகளும், 4 உதவி-நீதிபதிகளும் இருக்கின்றனர். அவர்கள்எல்லாரும் உலகப் புகழ்பெற்ற நீதிநிபுணர்களாவர். இதுகாறும் அந்நீதிமன்றம் பதினேழு தீர்ப்புக்களையும், பதினெட்டு ஆலோசனைகளையும் அளித்துளது.

உடன்படிக்கைப் பதிவு

சருவதேச சங்கத்திற் சேர்ந்துள்ள நாடுகள் ஒன்-றற்கொன்று ஏதேனும் உடன்படிக்கை செய்து-கொள்ள நேர்ந்தால் அதைச் சங்கத்தில் பதிவு செய்து-

கொள்ளவேண்டும்; அங்ஙனம் பதிவு செய்யப்படாத உடன்படிக்கை செல்லுபடியற்றதாகாக் கருதப்படும். இது சருவதேச சங்கத்தின் முக்கிய விதிகளுள் ஒன்று. இதுகாறும் இவ்விதிக்கிணங்கச் சுமார் இரண்டாயிரத்தைந்நூறு உடன்படிக்கைகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

தொழிலாளர் முன்னேற்றத் தொண்டு

சருவதேச சங்கம், தொழிலாளர் முன்னேற்றத்திலும் தீவிரமாகக் கருத்தைச் செலுத்திவருகிறது. அதற்கென இச்சங்கத்தில் ஒரு தனிஇலாகா உண்டு. உறுப்பாகவுள்ள ஒவ்வொரு நாடும், தொழிலாளர்களுக்குள் அமைதியில்லாவிட்டால் உலக அமைதி உண்டாகாது என்றுணர்ந்து, அவர்களுக்கு வேண்டிய நலங்களைச் செய்துகொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கின்றது. சங்கத்தில் சம்பந்தப்பட்ட எல்லாநாடுகளும் தொழிலாளருக்குரிய சம்பளம், வேலைநேரம் முதலியவைகளில் பல சௌகரியங்களைச் செய்திருக்கின்றன. சருவதேச சங்கத்தின் முயற்சியே, தொழிலாளருக்கு இத்தகைய சௌகரியங்கள் ஏற்பட்டு வருகின்றமைக்குக் காரணமாகும். 1919 - ஆம் ஆண்டில் வாஷிங்டன் நகரில் நடைபெற்ற உலகத்தொழிலாளர் மஹாநாடு ஒரு நாளில் 8 மணியும், ஒருவாரத்தில் 48 மணியும் தொழிலாளருக்குரிய வேலைநேரமாக இருக்கவேண்டும் என்று தீர்மானித்தது குறிப்பிடத்தக்கதாகும். வேலையில்லாமைக்குப் பரிகாரம்தேடுதல், பெண்தொழிலாளரின் பாதுகாப்பு, சிறுவர் பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம், குடியிருப்புவசதி முதலியவைபற்றி ஒவ்வொரு நாடும் சருவதேச சங்க முடிபிற் கிணங்கச் சட்டங்களை ஏற்படுத்தியிருக்கின்றது.

சருவதேச சங்க அமைப்பு

(1) மஹாசபை:—சருவதேச சங்கத்தின் மஹாசபை என்பது, அங்கம் வகிக்கும் நாடுகளைச் சேர்ந்த பிரதி-

நிதிகள் ஒவ்வோர் ஆண்டிலும் கூடும் கூட்டம். இது சாதாரணமாக ஆண்டுதோறும் செப்டெம்பர் மாதத்தில் ஜினிவாநகரில் கூடி ஒருமாதகாலம் நடைபெறும். ஒவ்வொருநாட்டிலிருந்தும் மூன்று பிரதிநிதிகள் செல்வார்கள். ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு வாக்குரிமை (Vote) உண்டு. இந்த மஹாசபை, கடந்த ஆண்டில், நிருவாக சபையும் காரிய சபையும் செய்த வேலைகளைப்பற்றி விவாதித்து முடிவுகட்டும்; எதிர்கால முன்னேற்றத்திற்கான முடிவுகளைச் செய்யும்; வரவு செலவுத் திட்டத்தை விவாதித்து வகுக்கும்.

(2) **ஆலோசனைச் சபை:**—இஃது ஓர் ஆண்டில்முறைப்படி மூன்று தடவை கூடும்; அன்றியும் அவசரமான எந்தச் சமயத்திலும் கூடும். இது, நிலையாக ஐந்து நாட்டினரையும் ஆண்டுதோறும் மஹாசபையால் தேர்ந்தெடுக்கப்படும் ஒன்பது பிறநாட்டினரையும் உறுப்பினராக உடையது. சருவதேச சங்க சம்பந்தமான எல்லா விவகாரங்களைப்பற்றியும் இச்சபை ஆலோசனை கூறும்.

(3) **காரிய நிருவாக சபை:**—இது சருவதேச சங்கத்தின் உத்தியோகஸ்தர் அடங்கிய நிலையான சபை. இதில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 600 உத்தியோகஸ்தர் இருக்கின்றனர். சருவதேச சங்கக் கூட்டங்களும், மஹாநாடுகளும் நடைபெற ஏற்பாடு செய்தல், தீர்மானங்களை நிறைவேற்றுதல் முதலியன காரியநிருவாக சபையின் வேலை. இங்கே உத்தியோகம் அளிக்குந்திறத்தில் ஆண், பெண் என்ற வேற்றுமை இல்லை.

(4) **நிபுணர் குழு:**—மஹாசபைக்கும், ஆலோசனைச் சபைக்கும், ஒவ்வொரு துறையிலும் வேண்டியயோசனைகளைக் கூற அவ்வப்போது நியமிக்கப்படும் அறிஞர் கூட்டம் பல உண்டு. அவை நிபுணர் குழு எனப்படும்.

(5) சருவதேச சாசுவத நீதிமன்றம்:—இது ஹாலந்தைச் சேர்ந்த ஹேக் நகரத்தில் இருக்கிறது. இதில் 15 உயர்தர நீதிபதிகளும், 4 உதவி நீதிபதிகளும் இருக்கின்றனர் என்பதும், உலகப்புகழ்பெற்ற நீதிநிபுணர்களே இந் நீதிமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்பதும் மெலே கூறப்பட்டிருக்கின்றன.

(6) சருவதேச சங்கத் தொழிலாளர் இலாகா:—சருவதேச சங்கத்தில் தொழிலாளர் விஷயமாகக் காரியாலயம் ஒன்று உளது. அது மஹாநாடுகளைக் கூட்டவும், தொழிலாளர் முன்னேற்றம்பற்றிய முக்கிய காரியங்களைக் கவனிக்கவும் ஏற்பாடு செய்யும். சருவதேச சங்கத் தொழிலாளர் மஹாநாடு ஆண்டில் ஒருமுறை ஜினிவாவில் கூடும். ஒவ்வொரு நாடும் இம் மஹாநாட்டிற்கு நான்கு பிரதிநிதிகளை அனுப்பும். அவர்களுள் அரசாங்கப் பிரதிநிதிகள் இருவர்; முதலாளிகள் பிரதிநிதி ஒருவர்; தொழிலாளர் பிரதிநிதி ஒருவர். ஒவ்வொருவருக்கும் தனித்தனியே வாக்குரிமை உண்டு.

மொழிகள்:—சருவதேச சங்கத்தில் ஆங்கிலம், பிரஞ்சு ஆகிய இரண்டு மொழிகளில் நிகழ்ச்சிகள் நடந்துவருகின்றன. வேறுமொழிகளில் நிகழ்த்தப்படும் சொற்பொழிவுகளை மொழிபெயர்க்கவும் சங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

உண்மையான அமைதியும், பாதுகாப்பும் உலகத்தில் நிலவவேண்டுமானல், சருவதேச சங்கம் மேற்கொண்டுள்ள முயற்சிகளில் எல்லாநாடுகளும் ஒத்துழைக்க வேண்டும். ஒவ்வோர் நாட்டிலும் சருவதேச சங்கத்தின் கிளைகள் நிறுவப்பட்டுப் பொதுமக்களின் கருத்து, சங்கத்தின்பால் திருப்பப்படவேண்டும்.

7. தமிழ்நாடு[1]

[திரு. வி. கலியாணசுந்தரமுதலியாரவர்கள்]

* * இதுபோழ்து, நாம் வதியுந் தமிழ்நாட்டின் எல்லை, பன்னிரண்டு ஜில்லாக்கள் அளவில் கட்டுப்பட்டுக் கிடக்கிறது. சில நூற்றாண்டுகளுக்குமுன்னரோ தமிழ்நாடு, சேரநாட்டையும் தெலுங்குநாட்டின் ஒரு பகுதியையும் உடன்பெற்றிருந்தது. சில ஆயிரம் ஆண்டுகளுக்குமுன்னர்த் தொல்காப்பியத்துக்குப் பாயிரம் கூறப்புகுந்த ஆசிரியர் பனம்பாரனர் "வடவேங்கடம் தென்குமரி, ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து" என்று தமிழ்நாட்டின் வரம்பு குறித்துப்போந்தார். அவர்காலத்துக்குமுன்னர்த் தமிழ்நாட்டின் வடகோடு, விந்தியம்வரை முட்டியிருந்த தென்றும் அவ்வரையினையும் கடந்துநின்றதென்றும் ஆராய்ச்சிக்காரர் கூறுப. தென்கோடாகக் குறிக்கப்பெற்ற குமரி என்பது, இக்காலத்தில் ஒரு முனைக்கு வழங்கப்படினும், பழந்தமிழ்நூல்களில் அஃதோர் ஆற்றிற்கு வழங்கப்பட்டுவந்தது. அவ்வாற்றிற்குத் தெற்கே பஃறுளி என்னும் மற்றுமோர் ஆறு ஓடியதாகவும் நூல்கள் அறிவிக்கின்றன. அவ்யாறுகளின் இருப்பு, "தெனஅ துருகெழு குமரியின் தெற்கும்", "நெடியோன் நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே" என வரூஉம் புறநானூற்றானும், அழிவு, "பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக், குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள" என வரூஉஞ் சிலப்பதிகாரத்தானும் அறியக் கிடக்கின்றன.

இவ் யாறுகள் வளஞ்செய்த செழிய நிலப்பரப்பே குமரிநாடென்று சொல்லப்படுவது. அந்நாடு, ஆயிரம்

---

[1] ஆசிரியரின் அனுமதி பெற்றுப் பதிப்பிக்கப்பட்டுளது.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்க் கடலால் கொள்ளப்-பட்டது. இப்பொழுதுள்ள இந்துமகா சமுத்திரம் என்-னும் பெருநீர்ப்பரப்பு, நிலப்பரப்பா யிருந்ததென்றும், ஆண்டே மக்கள்தோற்றம் முதன்முதல் உற்றதென்-றும், அந்நிலம் பின்னைக் கடலால் விழுங்கப்பட்டதென்-றும் ஆசிரியர் எர்னஸ்ட் ஹெக்கல், ஸ்காட் எலியட் உள்ளிட்ட அறிஞர் பலர் தமது ஆராய்ச்சியிற் கண்ட உண்மையை உலகுக்கு உணர்த்தியிருக்கின்றனர். இதனை அவ்வறிஞர்கள் எழுதியுள்ள "ஹிஸ்டோரி ஆப் கிரியேஷன்" (History of Creation - படைப்பு வரலாறு), "லாஸ்ட் லெமூரியா" (Lost Lemuria - மறைந்த லெமூ-ரியா) முதலிய நூல்களிற் காண்க. லெமூரியா என்னும் நிலப்பரப்பே தமிழ்நூல்கள் கூறுங் குமரிநாடு.

இத்தொன்னிலப் பரப்பின் அழிவு போக, எஞ்சி-நிற்பதே இதுபோழ்து நாம் வாழுந் தமிழ்த்தாயகம். இத் தமிழகத்தின் தொன்மையை எக்கால அளவு-கொண்டு கூறுவது? அது சரித்திர காலத்தையுங் கடந்துநிற்பது. 'இத்தொன்மை வாய்ந்த நாட்டிற் பிறந்தவர்கள் நாம்' என்று சொல்லும்போது, என்னை அறியாதே என்பால் இறுமாப்பெழுகின்றது.

* * * *

தமிழ்நாடு, வெப்பமும் தட்பமும் ஒப்ப வாய்க்-கப்பெற்றுண்மையான், அதன் இயற்கைவளன், உடல்-நலத்துக்கும் உயிர்நலத்துக்கும் உறுதுணை செய்யும் நிலையில் அமைந்திருக்கின்றது. குளிர் மிகுந்த நாடு, மக்கள் உடல்நலம் பேணத் துணைநின்று, உயிர்க்குரிய குணநலம் அரிதே வழங்கும். வெம்மைசெறிந்த நாடோ, உடல்நலத்துக்கும் ஊறு செய்வதாகும். இரண்டும் ஒப்ப வாய்ந்த இடமே மக்கள் வாழ்விற்கு உரியதாகும். அப்-பேற்றை நந்தமிழகம் பெற்றிருக்கின்றது. இவ்வியற்கை-நிலத்தைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்று

பாகுபடுத்தி, அதனதன் இயல்புக்கேற்ப வாழ்வு நடாத்தி, இயற்கையின்பந் துய்த்தவர்கள் நம் பண்டைத் தமிழ்மக்கள். அவ் வியற்கைவாழ்வே இதுபோழ்து வேண்டற்பாலது.

*   *   *   *

தமிழ்நாட்டின் மலைகளின் நிலையும், காடுகளின் செறிவும், ஆறுகளின் ஒழுக்கும், வயல்களின் செழுமையும், கடலின் ஓதையும் எழுத்தோவியர்க்குப் பெருவிருந்தாவன. வேங்கடத்தெழுங் கடவுள்மணமும் பொதிகையிலெழுந் தென்றற்காலும் ஒன்றி விராவி நீலம்முதற் கோடுகளில் தாக்குற்றுத் தேங்குமாறு கீழும் மேலும் இடையீடின்றித் தொடர்ந்தும் அடர்ந்தும் அரண்செய்யும் மலைக்கோவையின் கோலமும், அங்ஙனந் தேங்கும் இயற்கையமிழ்தைச் சேமித்து உயிர்கட்கு ஊட்ட நீட்டுமாபோல் அம்மலைக்கோவையினின்றும் கவடுங்கோடும் அரும்பிணலெனச் சுருள் சுருளாகவும் திரள்திரளாகவும் இவர்ந்தும் இழிந்தும் விட்டும் தொட்டும் கருவூலங்களை யொத்துநிற்கும் வரைக்குலங்களின் அமைவும், அவைகளின் துணைபெறு சிற்றில்களெனை ஆங்காங்கே சிதறிச் சிதறித் திகழுங் குன்றச்சூழல்களின் பொலிவும், கண்ணையும் மனத்தையும் கவர்வனவாம். இயற்கையோ டியைந்த இன்பவாழ்வளிக்கும் இயற்கைநிலையங்களாய * * நீலகிரி முதலிய பல மலைகள் உயிர்களை ஓம்பிவருகின்றன.

வாழ்வுக்கியைந்த காடுகளும் தமிழ்நாட்டில் அமைந்திருக்கின்றன. மலைகளொடு மிடைந்தும் தனியே சிறந்துஞ் செறியுங் காடுகள் வெயில் தகைந்து அளிக்குங் காரிருள் நீழலும், வண்டு துவைப்பத் தேன் பிலிற்றும் பூங்காவனங்களினின்றுங் கமழும் நறு நாற்றமும், வான் பரந்த பொழில்களின் நிரையும், கான் பரந்த தூறுகளின் துதைவும், பசுஞ்செடிகளின் இட்-

டமும், கொழுங் கொடிகளின் பின்னலும் உள்ளத்தைக் குளிர்விப்பன அல்லவோ? வான் முகடுகளினின்றும் முடுகி, இடியென எழுந்து வீழுஞ் சாரல்களின் விரைவும், பரலையும் அறலையும் அரித்தரித்துப் பளிங்குருகிப் பாயுமாபோல் இழிதரும் அருவிகளின் முழவும், பாட்டெனப் பரந்து செல்லும் ஆறுகளின் அணியும், வேறுபல நீர்நிலைகளின் பரவலும், உரைகடந்த அகச்செவிக்கு இன்பூட்டுவன அல்லவோ? பாலியும், பெண்ணையும், காவிரியும், கொள்ளிடமும், வைகையும், பொருநையும், அகில் தாங்கி மணிகொழித்து அதிர்ந்தோடும் அழகை எழுத்தால் எழுதல் முடியுமோ? இவ்வாறுகள் பாய்ந்து வளஞ் செய்யும் வயல்களின் செழுமையைச் செப்பவும் வேண்டுமோ? வயல்களின் பரந்த பசுமை, பசுங்கடல் நினைவையன்றோ ஊட்டுகிறது? மருதத்துக்கே உறையுளாய் நன்னிலங் கொண்ட தஞ்சையை நெற்களஞ்சியமாக வாய்க்கப்பெற்ற பெருமை நந் தமிழ்நாட்டுக்கு உண்டு. இத் தமிழ்நாட்டின் வரம்பில், மணி யுந்தித் தரங்கம் பாடும் பாட்டுக்கு என்றுதல் ஓய்வும் உண்டோ?

இசைமயமான இயற்கைநிலத்தில் வாழ்வு நடாத்தி, அவ் வியற்கைத்தமிழைச் சுவைத்தவர்கள் நம் முன்னோர்கள். 'தமிழ்' என்பதற்கு 'இனிமை' என்பது பொருள். "தமிழ் தழீஇய சாயலவர்" என்றும், "தமிழ்சேர் காஞ்சி" என்றும் புலவர்கள் 'இனிமை' என்னும் பொருள்படத் 'தமிழ்' என்னுஞ் சொல்லை ஆண்டிருத்தல் காண்க. பழமைமக்கள், இயற்கையி லூறுந் தமிழையே, பின்னைத் தாங்கள் அவ் வியற்கைப்பொருளுக்கிட்ட சொன்மொழிக்கும் வழங்கினர்கள்போலும்! இயற்கை இனிமையோடு — தமிழோடு — அம்மக்கள் கொண்ட வாழ்விலெழும் இன்பக்கிளர்ச்சியால், தாங்கள் மாந்த இனிமை — தமிழ் — உறையுளாம் இயற்-

கையைச் சொல்லோவியமாக எழுதுவது அவர்களது பெரு விளையாட்டு. அச் சொல்லோவியங்களைக் கொண்ட இன்பப் பெட்டகங்கள் கலித்தொகை, நெடுநல்வாடை, சிலப்பதிகாரம் முதலிய நூல்கள்.

* * * *

பழந் தமிழ்மக்கள் தங்கள் வாழ்வை இருகூறாகப் பிரித்து வாழ்ந்தார்கள். அவை அகவாழ்வு புறவாழ்வு என்பன. அகவாழ்வாவது-ஒத்த நலன், ஒத்த குணன், ஒத்த கல்வி முதலியனவுடைய ஒருவனும் ஒருத்தியும் கூடி நடாத்தும் இல்லற வாழ்வு. அவ்வாழ்வு, இன்பவாழ்வாக இயங்கவேண்டுமேல், அதற்குப் பொருள் இன்றியமையாது வேண்டற்பாலது. "பொருளில்லார்க்கு இவ்வுலகமில்" என்றார் பொய்யா மொழியாரும். அப் பொருள் எவ்வாறு கிடைக்கும்?

பொருட்பேற்றிற்குக் கல்வியும் தொழிலும் தேவை. கல்விப் பயிற்சியும் தொழிற் பயிற்சியும் பெறுதற்குச் சிறந்த அமைப்புக்கள் இன்றியமையாதன. அவ்வமைப்புக்கள் செவ்வனே இடையூறின்றி இயங்க, நாட்டில் அமைதி நிலவல் வேண்டும். மாற்றார் பகை கடிந்து, அமைதி காக்க நல்லரசு வேண்டும். நல்லரசில்லையேல், நாடு காடாகும். ஒழுங்குபட்ட அரசிருந்தாலன்றி, அகவாழ்வெனும் இல்லறம் ஒழுங்குபட நடைபெறல் அரிது. இவ்வரசு, கல்வி, பொருள் முதலியவற்றைக் கொண்டதே புறவாழ்வென்பது. இதனால் அகவாழ்விற்கும் புறவாழ்விற்கும் உள்ள தொடர்பு நோக்கற்பாலது. அவையிரண்டும் உடல்உயிர் போன்றன. அகவாழ்வு அவ்வந்நாட்டு இயல்புக் கேற்றவாறு அமைந்துகிடப்பது. அவ்வாழ்விற்கு அரணமாறு அவ்வந்நாட்டு இயல்புக்கேற்றவண்ணம் புறவாழ்வும் அமைதல்வேண்டும். அகமும் புறமும் ஒன்றுபட்ட வாழ்வே இயற்கைவாழ்வாகும். பழந்தமிழ்மக்கள்

கோலிய முறைவழி, எங்கணும் வாழ்வு நடைபெற்று வரின் உலகில் போர் ஏது? அடக்குமுறை ஏது?

* * * *

பண்டைத் தமிழ்நாட்டில் பிறப்பால் சாதிப்பாகு-பாடு இருந்ததாகத் தெரியவில்லை. நிலப்பாகுபாடு ஒன்றே அந்நாட்டில் நிலவியிருந்தது. "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா — செய்தொழில் வேற்றுமை யான்" என்றார் நந் தமிழ்ப்பெரியாரும்.

* * * *

பழந்தமிழ்நாட்டில் பெண்மக்கள்நிலை எவ்வா-றிருந்தது என்பதும் ஆராயற்பாலதே. * * 'தலைவனுந் தலைவியும் ஒத்த கல்வியுடையராயிருந்தார்' என்னுங் குறிப்பும், 'பெண்மகள் தனக்கினிய ஒருவனைத் தனக்-குரிய தலைவனாகத் தானே தெரிந்தெடுக்கும் உரிமை பெற்றிருந்தாள்' என்னுங் குறிப்பும், இன்ன பிறவும் பழந்தமிழ்நாட்டுப் பெண்மக்கள்நிலையைப் புலப்படுத்-தும். விரிவு களவியலிற் பார்க்க.

"பெண்ணை வெறுத்தல் பேரின்பம்" என்னும் பாழுங்கொள்கை இடைக்காலத்தில் தோன்றியதாகும். பெண்ணழகில் அன்புக்கடவுளுண்மை யுணரும் பெருமைவாழ்வு பெற்றிருந்தார்கள் நம் பண்டைத் தமிழ்மக்கள். இறந்துபடாது இன்றும் உள்ள பழந்-தமிழ்நூல்கள் அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றையே அறிவுறுத்துதல் காணலாம்.

* * * *

"பழந்தமிழர்கள் கடவுளுண்மையில் உறுதி இல்-லாத மாக்களா" என்று சிலர் கடாவலாம். அவர்கள், கடவுள்உண்மையில் உறுதியுடையவர்களே. ஆனால், அவர்கள் கொண்ட கடவுள் எது? அவர்கள், கடவுளைக் 'கந்தழி' என்னும் பெயரால் வழுத்தினர்கள். கட்டற்ற ஒன்று 'கந்தழி' என்பது. அழுக்காறு, அவா, வெகுளி

முதலிய கட்டுக்கள் கடந்து விளங்கும் இன்ப அன்பே அக் 'கந்தழி' என்னுங் கடவுள். "இறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே என்னுடை அன்பே" என்று பின்வந்த தமிழ்நாட்டன்பர் — மணிவாசகனார் — அருளியிருத்தலை நோக்குக. அவர், கடவுளை 'இன்பமே' என்றும், 'அன்பே' என்றும் விளித்திருத்தலை யோர்க. அவ்வன்புக்கடவுள் யாண்டில்லை? இயற்கையெல்லாம் அவ்வன்புக்கடவுள் வடிவல்லவோ?

* * * *

இயற்கையைவிடுத்து, இறைவனை எவ்வாறு காண்டல் முடியும்? இதுபோழ்து உலகம் போற்றும் கவியரசர் ரவீந்திரநாத் தாகூரது கொள்கை, பெரிதும் பழந்தமிழர்கொள்கைக்கு அரண்செய்வதெனச் சுருங்கச்சொல்கிறேன்.

"பெண்ணுக்கு உரிமை நல்கிய என்னருமைத் தமிழ்நாடே! இதுபோழ்து யாண்டுளாய்" என்று அலமருகிறேன். அவ்வுரிமை, நாட்டை மீண்டுங் காண எவர் முயலல் வேண்டும்? தமிழகத்திற் பிறந்த நாமல்லவோ முயலல் வேண்டும்? என்னுடன் பிறந்த அருமைத் தமிழ்மக்களே! அந்நாட்டைக் காண வீறுகொண்டு எழுங்கள்! எழுங்கள்!

இனித் தமிழ்நாட்டின் கல்வி, இசை, ஓவியம், மருத்துவம், வானாராய்ச்சி, தொழில், வாணிபம், அரசியல், வீரம் முதலியவற்றின்மீது சிறிது கருத்துச் செலுத்துவோம். தமிழ், இயல் இசை நாடகம் என்னும் மூன்று வழியிலும் வளர்ந்துவந்தது. தமிழ்க் கல்வித் திறனை யுணர்த்தப் பழைய சங்கமருவிய நூல்களும், பெரியபுராணம்,கம்பராமாயணம், தேவார திருவாசகம், நாலாயிரப் பிரபந்தம் முதலிய நூல்களும் கருவிகளாகத் துணைபுரிகின்றன.

* * * *

தமிழ்நாட்டுக்கெனச் சிறப்பாக இசை யுண்டு. இதனை வலியுறுத்தச் சிலப்பதிகார அரங்கேற்று காதை ஒன்றே சாலும். தமிழ்நாட்டின் இசைச்சிறப்பைக் காலஞ்சென்ற தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் இயற்றிய "கருணாமிர்த சாகரம்" என்னும் விரிந்த நூலில் பரக்கக் காணலாம். தமிழ்நாட்டின் மருத்துவ மாண்பைச் சித்த நூல்கள் தெரிவிக்கின்றன. நாடி பார்த்து நோய் இயல்பு உணர்தலும், பாடாணங்களில் மருந்து செய்வதும் தமிழ்மருத்துவத்தின் தனிச்சிறப்பாகும்.

தமிழ்மக்கள் வான ஆராய்ச்சியில் வல்லுநராயிருந்தார்கள் என்பதற்கு,

"செஞ்ஞாயிற்றுச் செலவுமஞ் ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்
வளிதிரிதரு திசையும்
வறிதுநிலைஇய காயமும் என்றிவை
சென்றளந் தறிந்தோர் போல என்றும்
இனைத்தென் போரும் உளரே * *"

எனவரூஉம் ஒரு புறப்பாட்டை எடுத்துக்காட்டுவதோடு நின்று விடுகிறேன். இது குறித்து, அணித்தே இவ்வுலகு நீத்த அறிஞர் சாமிகண்ணுபிள்ளை செய்த ஆராய்ச்சியைத் தொடர்ந்து பெருக்கவேண்டுவது நந் தமிழறிஞர் கடமை.

தமிழ்மக்களின் ஓவியப் பெற்றியை விரித்துக் கூறவேண்டுவதில்லை. பழைய சோழர்கட்டிடங்களும், பழைய கோயில்களும், அமராவதி மாவலிபுரம் முதலிய விடங்களிலுள்ள சிற்ப நுட்பங்களும், பழந்தமிழ்மக்களின் அணிகலன்களும், அவர்கள்பாட்டுக்களும் தமிழ்ஓவியத்தின் உயர்விற்கு நிலைக்களன்களா யிருக்கின்றன. தாகூர் முதலிய கவிவாணரும் தமிழர் ஓவியத்தைப் போற்றியிருத்தல் கருதத்தக்கது. "நெடுநிலை மாடத் திடைநிலத் திருந்துழி" என்றும், "நிரைநிலைமாடத் தரமிய மேறி" என்றும், "வேயா மாடமும்"

என்றும், "மான்கண் கால்அதர் மாளிகை இடங்களும்" என்றும் இளங்கோஅடிகள் தமிழ்மக்கள் கட்டிடங்களைச் சிறப்பித்திருக்கிறார்கள்.

தமிழ்மக்களது தொழின்முறைகள், சிலப்பதிகாரம்-இந்திரவிழவூரெடுத்த காதையிலும், மணிமேகலை-கச்சிமாநகர் புக்க காதையிலும் கடல்மடை திறந்தாலெனப் பொழியப்பட்டிருக்கின்றன. "பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும், கட்டு நுண்வினை" கண்டவர்கள் நந் தமிழ்மக்கள்; "கிழியினுங் கிடையினுங் தொழில் பல பெருக்கிய" வர்கள் நந் தமிழ்மக்கள்; "பாலாவியன்ன" மிக மெல்லிய ஆடை நெய்தவர்கள் நந் தமிழ்மக்கள். இயற்கை இன்ப வாழ்விற்கு இன்றியமையாத தொழில் பல தமிழ்நாட்டில் இருந்தன.

தமிழ்நாட்டார் பண்டைநாளில் பிறநாட்டாரோடு செய்து வந்த வாணிபப் பெருக்கை நோக்குழித் தமிழ் நாட்டின் வளனும், தொழின்முறைகளும் நன்கு புலனாகும். அந்நாளில் தமிழ்மக்கள், காலிற் பிரிவதோடு, கலத்திற் பிரிந்தும் கடல்கடந்து வாணிபம் செய்தார்கள். 'காலிற் பிரிதல்' 'கலத்திற் பிரிதல்' எனவரூஉம் பழந்தமிழ் நூல்களின் வழக்கும், "திரைகடல் ஓடியும் திரவியந் தேடு" என்னும் பழமொழியும் தமிழ்மக்கள் கடல் கடந்து செய்த வாணிகப் பெருக்கைக் குறித்தல் காண்க. பண்டைத் தமிழ்நாடு, கிறிஸ்து பிறப்பதற்குப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரே, பாபிலோன், எகிப்து, ரோம், கிரீஸ், சிரியா முதலிய நாடுகளோடு வாணிகஞ் செய்ததைத் தற்காலச் சரித்திரக்காரர்கள் நன்கு ஆராய்ந்து பல நூல்கள் எழுதியுள்ளார்கள். அந்நாடுகளுக்குத் தேக்கு, சந்தனம், தந்தம், தோகை, மிளகு, ஏலம் முதலியன தமிழ்நாட்டினின்றும் அனுப்பப்பட்டன என்பதற்குப் பல அகச்சான்றுகள் இருக்கின்றன.

யவனர்க்கும் தமிழ்மன்னர்க்கும் இருந்த உறவும், அங்கும் இங்கும் ஒற்றர்களும் மெய்காப்பாளர்களும் தங்கியிருந்ததும் தமிழ் நூல்களில் வெள்ளிடை மலைபோல் அறியக்கிடக்கின்றன. யவனர் முதலியசொற்கள் தமிழ்நூல்களில் நுழைந்ததும், தோகை முதலிய தமிழ்ச் சொற்கள், துகி முதலிய சொற்களாக மருவி ஹீப்ரு முதலிய மொழிகளில் நுழைந்ததும் ஆராயத்தக்கன. இவ்வுண்மைகளைத் திரட்டிச் சரித்திர வடிவாக உலகுக்கீந்த கனகசபைப் பிள்ளை, சவரிராய பிள்ளை, நல்லசாமி பிள்ளை, சூரியநாராயண சாஸ்திரியார், சீநிவாச பிள்ளை முதலிய தமிழ்மக்களது நன்றி என்றும் மறக்கற்பாலதன்று.

இவ்வுலகியற் றுறைகள் யாவும் நேர்பட இயங்குதற்கு அந்நாளில் நிலைக்களனாக நின்றது அரசியலேயாகும். நல்லரசியல் இல்லா நாட்டில் அமைப்பேது? வாழ்வேது? அற ஒழுக்கம் ஏது? ஒரு நாட்டின் நாகரிகமோ அநாகரிகமோ அந்நாட்டின் அரசியலையன்றோ பொறுத்துநிற்கும்? அரசியல் என்பது, உலகிடை மறவினை மலியாது, அறவினை மலியுமாறு செய்தற்கு ஏற்பட்ட ஓர் அமைப்பு. அது குடியாட்சியோ கோனாட்சியோ குடிக்கோனாட்சியோ எவ்வாட்சியோ பற்றி இயங்கினும் இயங்குக. அதனால் குடிமக்கட்குக் கேடு விளைதலாகாது என்பதொன்றே கவனிக்கற்பாற்று.

* * * *

பழந் தமிழ்நாட்டில் வளர்ந்த அரசியல் பெரிதும் அறத்தையும், அன்பையும், அருளையும் அடிப்படையாகக்கொண்டு நிலவியது என்பதற்குச் சான்றுகள் பலவுள.

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்"

என்று புறநானூறு, உலகத்துக்கு உயிர் அரசு என்-

பதைத் தெரித்தல் காண்க. உயிரனைய அரசு, கோல் கோடி, மறவினை பெருக்கின், நாட்டுநிலை என்னும்? அந்நாட்டினும் கடும்புலி வாழுங் காடே நன்று. ஒரு நாட்டார் தமது நிறை காக்கவேண்டுமேல், முதலாவது அவர் நல்லரசு கோலிக்கொள்ளுதல் வேண்டும். தமிழ்மக்கள், அரசின் பெற்றி யுணர்ந்த முதியவர்களாகலான், அவர்கள் அரசை உயிரெனக் கொண்டார்கள். அம்மக்கள் நிலைக்கேற்ற முறையில், அரசு அந்நாள் அமைந்திருந்தது. பழந்தமிழ் அரசின் நடுநிலையையும், அருட்டன்மையையும் இண்டு விரிக்கிற் பெருகும்.

"அறநெறி முதற்றே அரசின் கொற்றம்
அதனால், நமரெனக் கோல்கோடாது
பிறரெனக் குணங்கொல்லாது
ஞாயிற் றன்ன வெந்திறல் ஆண்மையும்
திங்க ளன்ன தண்பெருஞ் சாயலும்
வானத் தன்ன வண்மையும் மூன்றும்
உடையை யாகி * * "

என்றும்,

"சோறுபடுக்குந் தீயொடு
செஞ்ஞா யிற்றுத் தெறல்அல்லது
பிறிதுதெறல் அறியார் நின்னிழல்வாழ் வோரே
திருவில் அல்லது கொலைவில் அறியார்
நாஞ்சில் அல்லது படையும் அறியார்"

என்றும் வரும் புறப்பாக்களை யோர்க.

* * * *

பழந்தமிழரசின் அமைப்புமுறைகளை விரித்தற்கு அஞ்சுகிறேன். "படைகுடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும் உடையான் அரசருள் ஏறு" என்னுந் திருக்குறளான் அரச அங்கமும், "குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன் — அடிதழீஇ நிற்கும் உலகு" என்னுந் திருக்குறளான் அரசியல்பும் விளங்கப் பெறுகிறோம். 'ஐம்பெருங்குழு' வொடு 'எண்பேராய'

மும் கொண்டது நந் தமிழரசு என்று சுருங்கச்சொல்கிறேன். தமிழ் அரசின் போர் முறைகளைத் தொல்காப்பியம் முதலிய விரிந்த நூல்களிற் பார்க்க. அக்காலக் கடற்போர் முதலியவற்றைப் பதிற்றுப்பத்து முதலிய நூல்களிற் காண்க.

'இருபதாம் நூற்றாண்டு நாகரிகத்தில் முதிர்ந்தது' என்று சொல்லப்படுகிறது. இந்'நாகரிக நூற்றாண்'டில் ஐரோப்பாவில் நடைபெற்ற பெரும்போரில், ஜெர்மானியர் பெல்ஜியத்தில் நிகழ்த்திய கொடுமைக்கோர் அளவும் உண்டோ? * * கிறிஸ்துவ நூற்றாண்டு தொடங்குதற்கு முன்னரே, நந் தமிழ்மக்கள் போர்முறைகளை ஒழுங்குபடக் கோலியிருந்தார்கள். அம்முறைகள் தமிழ்மக்கள் நாகரிகத்தைப் புலப்படுத்துகின்றன. மாற்றார்மீது அறப்போர் துவங்குதற்குமுன், தமிழ்வீரர்கள் ஆன், ஆன் அனைய அந்தணர், குழந்தை, பெண் முதலியோரைப் போர்நிலத்தினின்றும் விலகுமாறு அறிவுறுத்தி, அன்னார் அவணிருந்து விலகிய பின்னர், அம்பு சொரிவார்கள். இதனை,

"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்அம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மின்என
அறத்தாறு நுவலும் பூட்கை * * "

என வரூஉம் புறப்பாட்டான் உணர்க. போரினும் அறநெறி காத்த அருள்நாடு நந் தமிழ்நாடு.

* * * *

முன்னை நாளில் இசைபட வாழ்ந்த தமிழ்மக்களின் குணநலன்கள் பலப்பல. அவைகளுள் ஒன்றைச் சிறப்பாக இண்டுக் குறிக்கிறேன்; அதாவது விருந்தோம்பல். விருந்தோம்பலில் தமிழ்மக்கள் பேர்பெற்றவர்கள்

என்பது எவரும் அறிந்ததொன்று. வாழ்க்கையே விருந்தோம்பலுக்கென்று திருவள்ளுவனர் கூறியுள்ளார்.

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என வருஉந் திருக்குறளை நோக்குக. பாரதப்போருக்கு அழைக்கப்பட்ட தமிழ்மன்னன், போரிற் கலவாது, போரில் தலைப்பட்டவர்க்குச் சோறூட்டும் அறத்தொண்டேற்றது இங்கு நினைவிற்கு வருகிறது.

"அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
இரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்"

என வருஉம் முடிநாகராயர் பாட்டைப் பார்க்க.

இவ் விருந்தோம்பும் நீர்மை இக்காலத் தமிழ்நாட்டில் அருகி வருதலைக் காணக் கண்ணீர் பெருகுகிறது. காரணம் என்னை? வறுமையா? அன்று; அன்று. தற்கால நாகரிகக் கல்வியால் ஏற்பட்டுள்ள ஆன்ம நேய ஒருமைப்பாட்டழிவேயாகும். மீண்டும் அந் நேயம் பெற நாம் பழந்தமிழ் நாட்டைப் புதுமுறையில் காண்டல் வேண்டும்.

* * * *

"இத் தமிழ்நாட்டவராகிய நாம், பலப்பலசாதியினராய்ப் பலப்பல சமயத்தவராய்ப் பிரிந்து பிளவுபட்டுக் கிடக்கிறோம்; ஒருமைப்பாட்டுக்கு வழியும் உண்டோ" என்று சிலர் வினவலாம்; சிலர் கருதலாம். சாதி சமய வேறுபாடுகளைக் கடந்துநின்று நம்மனைவரையும் ஒருமைப்படுத்திநிற்பது ஒன்றுளது. அதன்மீது நாம் கவலை செலுத்துவமேல், அது வேறுபாடுகளை வீழ்த்தி, ஒருமைப்பாட்டை உண்டுபண்ணும். அஃது எது? அதுவே நமது அருமைத்தமிழ்.

தமிழ்நாட்டிற் பிறந்து, தமிழ்நாட்டில் வளர்ந்து, தமிழ்நாட்டைத் தாய்நாடாகக் கொண்ட எல்லாரும் பெரிதும் தமிழே பேசுகின்றனர். பிறநாட்டினின்றுந் தமிழ்நாட்டிற் குடிபுகுந்தோர் சிலரே. அவரும் தமிழகத்தைத் தாயகமாகக் கொண்டிருத்தல் கண்கூடு. அச் சிலரது வழக்க ஒழுக்கங்களையும், வழிபாடு முதலியவைகளையுங் கொண்ட பலரும் தமிழரே யாவர். பழமையில் பற்றுடைய மற்றவர் தமிழரென்பதை விளக்க-வேண்டுவதில்லை. இவ்வனைவரும் 'தமிழ்' என்னும் அமிழ்தை நாடோறும் வாழ்விற் பருகுஞ் சகோதரரே யாவர். இவர்கள் தங்களுக்குள் ஒருமை காட்டுந் தமிழ்மொழியிற் பற்றுக்கொண்டு உழைப்பார்களாயின், தமிழ்நாட்டில் ஒருமைப்பாடு நிகழும் என்பது திண்ணம்.

சமய வேற்றுமை, கடைச் சங்கப் புலவர்கள் காலத்திலேயே தலைகாட்டிற்று. அன்னார் சமயவழிபாட்டில் பன்மைப்பட்டு நின்றும், தமிழை வளர்ப்பதில் ஒருமைப்பட்டு நின்றமையான், இவ்வொருமை அப்-பன்மையை விழுங்கி, நாட்டை ஓம்பியதை ஆராய்ந்து, உண்மை கண்டு ஒருமைப்படுவோமாக. ஆதலால், நம்மை ஒருமைப்படுத்தவல்ல தமிழை வளர்க்க முயல்வோமாக.

* * * *

8. உணவு நஞ்சாவது ஏன்?[1]

[பி. என். அப்புஸ்வாமி ஐயரவர்கள்,
பி. ஏ., பி. எல்]

பசி உலகை ஆட்டுவிக்கின்றது : உலகத்தில் உள்ள உயிர்கள் யாவும் பிராணதாரப் போராட்டம் என்று சொல்லப்படும் வாழ்க்கைப்போரில் இடுபட்டிருக்கின்றன என்று உயிர்நூல் விற்பன்னர்கள் கூறுகிறார்கள். இப் போருக்கு அடிப்படையான முக்கிய காரணமாய் இருப்பது உணவுதேடும் முயற்சியே என்று கூறலாம். உணவு காரணமாகவே இவ்வுலகம் இயங்குகின்றது என்றும், பசியென்னும் கொடுங்கோல் மன்னனுடைய ஆட்சிக்கு உட்பட்டு மன்பதைகள் அனைத்தும் வாடி வருந்துகின்றன என்றும் அறிவாளர் கூறுகின்றனர். நமது நாட்டிலும்,

'சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும் — போவிப்பம்
பாழி னுடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி யரிசிக்கே நாம்'

என்ற நல்வழிச் செய்யுள் இச்செய்தியையே எடுத்துக் கூறுகின்றது. ஆதித் தொழில்களாகிய வேட்டையும் உழவும் உணவுநிமித்தமானவை. உலகத்தில் நடக்கின்ற போர்களும், அரசரின் ஆரவாரங்களும் வீழ்ச்சிகளும், மக்களின் கலகங்களும், உயர்ச்சிகளும் பெரும்பாலும் உணவையும் வாழ்க்கைச்சௌகரியங்களையும் கருதியே நிகழ்கின்றன என்று சரித்திரநூல் விற்பன்னர் கூறுகின்றனர். ஆகவே, பொதுவாக, உணவு-

[1] ஆசிரியரின் அனுமதி பெற்றுப் பதிப்பிக்கப்பட்டது.

விஷயமானது, உலகத்தின்மேல் செலுத்திவந்த அதிகாரம் அளவுகடந்தது. இனி, ஒவ்வொருவன்மீதும் அது எத்தகைய வன்மையுடையதாய் இருக்கிறது என்பதைப் பார்ப்போம் :

ஒருவன் உட்கொள்ளுகின்ற உணவு சரியாக ஜீரணித்துப் பயன்தரவேண்டுமானல், அது அவனுக்கு ஏற்றதாக இருத்தல்வேண்டும். அது அவனுடைய உடலையும், அதன் அமைப்பையும், உணவையும், அதன் குணுகுணங்களையும் ஒட்டியதாகும். ஆதலால் இவற்றையெல்லாம் ஒரு சிறிதளவாவது தெரிந்துகொள்ளுதல் அவசியம்.

உணவின் அளவு: முதலாவது, உணவின் அளவைப்பற்றி ஆராய்வோம். ஒவ்வொருவனும் தனக்கு வேண்டிய அளவு உணவை உட்கொள்ளவேண்டும். அந்த அளவுக்கு மிஞ்சி அதிகமாக உட்கொள்ளவும் கூடாது; குறைவாக உட்கொள்ளவும் கூடாது. அந்த அளவானது அம்மனிதனைப் பொறுத்திருக்கிறது. அஃதாவது அவனுடைய உடல் நிலையையும், அவன் செய்யும் வேலையையும், அவன் இருக்கும் இடத்தையும் அதன் வயதையும், ஆரோக்கிய அனாரோக்கிய நிலைமைகளையும் ஒட்டியிருக்கிறது. பெரிய-உடம்பினன் சிறிய உடம்பினனைவிட அதிகமாக உண்பதுதான் சாதாரண நிகழ்ச்சி. பாண்டவர்கள் பிக்ஷை யெடுத்துக்கொண்டு வந்த உணவில் பீமசேனனுக்குச் சரிபாதியும் மற்றவர்கள்எல்லாருக்கும் மற்றொரு பாதியுமாகப் பங்கிட்டுக்கொண்டார்கள் என்று சொல்லுங் கதையை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இதனல் சிறிய உடம்பினையுடைய மனிதர்களெல்லாரும் பெரியஉடம்பு உள்ளவர்களைக்காட்டிலும் குறைவாகவே சாப்பிடுகிறூர்கள் என்றுசொல்ல நான் முன்வரவில்லை. குறைவாகச் சாப்பிடுகின்ற பேருடம்பின்-

ரையும், ஆச்சரியப்படும்படி உண்ணுகின்ற சிற்றுடம்பினரையும் நாம் பார்த்திருக்கின்றோம். உட்கொள்ளும் ஆகாரத்தின் அளவைப் பாதிக்கின்ற விஷயங்களுள் இது ஒன்று என்றுதான் நான் சொல்லுகிறேன். இம்மாதிரியே, ஒருவன் குழந்தைப்பருவத்தில் குறைவாகவும், யௌவனதசையை அடைய அடைய அதிகமாகவும், பிறகு யௌவனதசை மாறி முதுமைப்பருவத்தைப் பெறப்பெற மீண்டும் குறைவாகவும் சாப்பிடுவதை நாம் அறிவோம். அவ்வாறே, ஒருவன், நோயுற்றபோது குறைவாகவும், நோயற்ற நன்னிலையில் இருக்கும்போது மிகுதியாகவும் உண்பது இயல்பு. அசாதாரணமான பசியை உண்டாக்கும் நீரிழிவு, யானைத்தீ என்பவற்றைப்போன்ற சிற்சில நோய்களைப்பற்றி நான் இங்கே கூறவில்லை. உடல்வேலை செய்யும் ஒருவன் அதிகமாகவும், உடல்வேலை செய்யாமல் சும்மா இருப்பவன் குறைவாகவும் சாப்பிடுவதுதான் வழக்கம். சீதோஷ்ண நிலைமையினால் உணவின் அளவு மாறுபடுதல் இயல்பு. உதகமண்டலம், கோடைக்கானல், குற்றாலம் முதலிய இடங்களில் இருக்கும்பொழுது, அங்கே நமக்குப் பசி அதிகமாக உண்டாவதையும், நாம் வழக்கமாக உண்பதைவிட அவ்விடங்களிலே அதிகமாக உண்பதையும் நாம் காண்கிறோம். சிற்சில ஆகாரவகைகளாலுங் அளவு மாறுபடும். நாம் அரிசிச்சோறு உண்கின்ற அளவு கோதுமைச்சாதம் சாப்பிடுவதில்லை. உப்புமாவைச் சாப்பிடுகிற அளவு அல்வாவைச் சாப்பிடுவதில்லை; சாப்பிடவும் முடியாது.

உணவின் மிகுதி: ஆகவே, நாம் உட்கொள்ளும் உணவுக்கு ஓர் அளவு இருக்கிறது என்பதும், அது பல விஷயங்களைப் பொறுத்ததாயிருக்கிறது என்பதும் தெரியவருகின்றன. அளவுக்கு மிஞ்சி உண்டால் அதனால் நேரும் தொந்தரவுகளுக்குக் கணக்கில்லை.

இதை யறிந்தே நமது நாட்டில் 'அளவுக்கு மிஞ்சினல் அமுதமும் நஞ்சாம்' என்னும் பழமொழி வழங்கி-வருகிறது. அளவுக்கு அதிகமாக உட்கொள்ளப்பட்ட உணவு அளவுக்கேற்றபடி நன்மையை விளைக்காது; தீங்கையே விளைக்கும் என்பதைத்தான் இப்பழமொழி வற்புறுத்திக் கூறுகிறது. அளவுக்கு மிகுதியாக உட்-கொள்ளுவது உணவை நஞ்சாக்குவதற்கான ஒரு வழி-யாகும்.

உணவின் குறைவு : மிகவும் அதிகமாக ஆகாரத்தை உண்பதனல் விளையுங் கேடுகளைப் போலவே மிகக் குறைவாக ஆகாரம் உண்பதனலும் பட்டினிகிடப்-பதனலும் உண்டாகும் வியாதிகளும் அநேகம். இவ்-வேளைகளில் உடலுறுப்புக்கள் தமக்கு வேண்டாதன-வற்றை வெளியே தள்ளுவதில்லை. பசியால் பிராணன் போகிறவன் தனக்குக் கிடைத்தது எந்தப் பொருளாயி-னும் அதை ஆகாரமாகக்கொள்ள முயலுவான். கோட்-டைக்குள் அடைக்கப்பட்டவர் குதிரைகளைத் தின்றபின் அவற்றின் சேணங்களையும் தம்முடைய செருப்புக்கள் ஜோடுகள் முதலியவற்றையும் தின்றதாகப் பல கதைகள் உண்டு. குறைவாக ஆகாரம் உட்கொண்ட உடலானது தீங்கு செய்யும் வேண்டாப்பொருளையும் வெளியே தள்ளாமல் உள்ளே ஏற்றுக்கொள்ளத் தொடங்குகிறது; அதனல் நஞ்சுற்று வருந்துகிறது. ஆகையால் உண-வானது அளவின்குறைவாலும் நஞ்சாகிவிடுதல் கூடும். இவ்வாறு உண்டாகும் நஞ்சுகளை '**டாக்ஸின்கள்**' என்று கூறுகின்றனர். இவற்ருல் உடல் நஞ்சுறுவதை '**ஆடோ இன்டாக்ஸிகேஷன்**' என்கின்றனர்.

உணவுப் பொருளின் குணகுணங்கள், செழுமை : உண-வைப்பற்றிய விஷயம் வேறென்றைக் கவனிப்போம்: அதாவது உணவுப்பொருளின் குணகுணம். இரசா-யன முறைகளால் உணவுப்பொருள்களை ஆராய்ந்து

பார்த்தால் அவற்றில் பலவகையான இரசாயனப் பொருள்கள் காணப்படும். உணவுப்பொருள்களை நீர், இனர்கானிக் உப்புக்கள், புரோடீன்கள், கார்போஹைட்ரேட்டுக்கள், கொழுப்புக்கள், வைடமின்கள் என்று ஆறுவகைகளாக வகுத்திருக்கின்றனர். இப்பொருள்களால் உணவுகளின் குணங்கள், பலவகையாக மாறுபட்டிருக்கின்றன; அதனால் நம்மைப் பலவிதமாகப் பாதிக்கின்றன. இந்த இரசாயனப்பொருள்கள் நாம் உண்ணும் உணவில் அளவுக்கு மிஞ்சியவையாய் இருக்குமானால் நமது உடல் அவையனைத்தையும் ஏற்றுக்கொள்ளாது; தனக்குவேண்டிய அளவைமட்டுமே ஏற்றுக்கொண்டு அதிகமானதை வெளியே தள்ள முயலும். இம்முயற்சி வீணாக அதன்மேல் சுமத்தப்பட்டதேயாகும். பெரும்பாலும் இது சரியாக நடந்தேறிவரும். எனினும், ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு வேளையிலும் நாம் அனுவசியமாக உட்கொள்ளும் பொருளில் ஏதோ ஒரு சிறு அளவில் கழிபொருள் அகற்றப்படாது தங்கிவிடுதல் கூடும். அப்படி, உடலிலும் ஏற்றுக்கொள்ளப்படாது, வெளியிலும் தள்ளப்படாது தங்கிநிற்கும் பொருள்களெல்லாம் நஞ்சாகிவிடுகின்றன. அவை நமக்குப் பலவிதமான இடையூறுகளையும் நோய்களையும் விளைவிக்க ஏதுவாகின்றன. பித்தம், வாதம் என்று சொல்லப்படும் இவையும், இரத்த அழுத்தம் என்று சொல்லப்படுகிற உடல்நிலையும் இதனால் வருவனவாகும். இரத்த அழுத்தமானது நெஞ்சுவியாதிகளுக்கும், படபடப்புக்கும், பக்கவாதம் என்னும் நோய்க்கும், அளவுகடந்த காரணமில்லாக் கோபத்துக்கும் காரணமாகின்றது.

செழிப்பின்மை: மேற்கூறியவாறு மிகவும் செழிப்பான ஆகாரத்தை உட்கொள்வதனால் உடலுக்குக் கெடுதல் உண்டாவதுபோலவே, செழிப்பில்லாத ஆகா-

ரத்தை உட்கொள்ளுவதனுலும் உடல் நோயுறுவதுண்டு. 'பெரிபெரி', சிற்சிலவகைச் சொறிசிரங்குகள், எலும்பும் பல்லும் சீராக வளராதிருத்தல் முதலிய சிற்சில நோய்கள் நாம் உட்கொள்ளும் ஆகாரத்தின் செழுமைக்குறைவால் உண்டாகின்றன. ஆகலின், ஆகாரமானது செழுமைக்குறைவினுலும் நோயை விளைக்கும் நஞ்சாகின்றது என்பது அறியப்படும்.

அஜீரணப் பொருள்கள்: இவற்றைத் தவிர, சிற்சில ஆகாரங்கள் எளிதில் ஜீரணமாகாதன. அத்தகைய ஆகாரங்களும் நமக்கு நஞ்சாவனவே. நெருப்புக்-கோழி விழுங்குவதுபோல் நாம் எந்த ஆகாரத்தையும் விழுங்குவதற்கில்லை. நமது வயிற்றைக் குப்பைத்-தொட்டி என்று எண்ணுபவரைப்போல் சிலர், கண்ட ஆகாரங்களையெல்லாம் அதற்குள்ளே போட்டுவருகி-ருர்கள். அதற்குள்ள தண்டனையை அவர்கள் அன்றே பெறுவார்கள், அல்லது மறுநாட் பெறுவார்கள், அல்லது சிலகாலம் கழித்துப் பெறுவார்கள். ஆனல், பெருமற் போகார்.

ஒவ்வொரு வேளையிலும் நாம் உட்கொள்ளும் ஆகாரம் ஜீரணிக்கப் போதுமான நேரம் வேண்டும். அதற்கிடையில் நமது ஜீரணக்கருவிகளைத் தொந்த-ரவு படுத்துவது தவறு. ஒருவேளை ஆகாரத்துக்கும் மற்றொருவேளை ஆகாரத்துக்கும் குறைந்தது மூன்று-மணி நேரமாவது இடையீடு இருப்பது அவசியம். அப்படிக்கின்றி இடையீடில்லாமல் நமது வயிற்றில் ஆகாரங்களைப் போட்டுக்கொண்டேயிருந்தால், நாம் புதிதாய்ப் போட்ட ஆகாரம்மட்டுமன்றி, நாம் முன்னே உட்கொண்ட ஆகாரமும் நஞ்சாக மாறி, நம்மை எத்தனையோ விதமான நோய்களுக்கும் தொந்தரவுக-ளுக்கும் உட்படுத்தும். 'மாடு அசைபோடுவவைப்போல எப்பொழுதும் அசைபோட்டுக்கொண்டே யிருந்தால்

ஏன் வியாதி வாராது?' என்று சிலர் சொல்லுவதைக் கேட்கிறோமன்றோ? ஆதலால், வேளை கெட்ட வேளையில் உட்கொள்ளுவதனாலும் ஆகாரம் நஞ்சாகும் என்பது அறியப்படும்.

மேற்கூறியவைஎல்லாம் உணவுப்பொருள்களையே பெரும்பான்மையும் பொறுத்துள்ளன. இனி, நமது உடலைப்பொறுத்துள்ள சில விஷயங்களையும் கவனிப்போம் :

நமது உடல் ஒரு விசித்திரமான இயந்திரம் : நமது உடலானது மிகவும் ஆச்சரியமான இயந்திரம். அதை அரசாங்கத்துக்கும், இயந்திரசாலைக்கும், இன்னும் எத்தனையோ விஷயங்களுக்கும் ஒப்பிட்டுக்கூறுவ துண்டு. அதில் காணப்படும் உறுப்புக்களெல்லாம் தம்முள் ஒன்றற்கொன்று எவ்வளவோ மாறுபட்டுத் தோன்றினும், உண்மையில் ஒன்றோடொன்று மிகவும் விந்தையாய்ப் பிணைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். பார்வைக்கு உடனே புலனாகாதுபோனாலும் இவ்வகையான நெருங்கிய பிணைப்புஒன்று இருக்கிறது என்பது மறக்கவொண்ணாத விஷயம்.

உடலில் மனமும், சதையும், புத்தியும், உணவும், உணர்ச்சியும் மிக நெருங்கிப் பின்னியனவாகக் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்றை யொன்று பாதிக்கின்ற முறையையும் அளவையும், ஒன்றுலொன்று மாறுபடுகின்ற தன்மையையும் பார்த்தால், அவற்றுள் வலிமிக்கது எது, வலி குறைந்தது எது என்று சொல்லுவது இயலாது.

உணர்ச்சியும் இரசாயனமும் : பசி, உறக்கம் முதலிய உணர்ச்சிகளுக்குக் காரணம் தசையிலும் உதிரத்திலும் உண்டாக்கப்படும் சிற்சில இரசாயனப்பொருள்களே என்பது இப்பொழுது நன்றாக அறியப்பட்டிருக்

கிறது. ஆகலின், உடலில் உண்டாகும் சிற்சில இரசாயன மாறுபாடுகளால்தான் பசி முதலிய உணர்ச்சிகள் உண்டாகின்றன என்பது ஓர் உண்மை. கடுங்கோபம், பெருவியப்பு, பேரச்சம் முதலிய சிற்சில உணர்ச்சிகளால் நமது இரத்தத்திலும் நமது உடலிலும் சிற்சில இரசாயன மாறுபாடுகளும் அவயவமாறுபாடுகளும் நரம்புத்தளர்ச்சி நரம்புக்கிளர்ச்சிகளும் உண்டாகின்றன என்பது மற்றோருண்மையாம். ஆகவே, உணர்ச்சிகளால் உடலும், உடலால் உணர்ச்சிகளும் ஒரு பெரிய அளவில் பாதிக்கப்படுகின்றன என்பது தெளிவாகிறது.

தந்தியும் தபாலும் : முற்காலத்தில் இவ்விஷயங்களைப்பற்றிப் போதிய அறிவு நமக்கு இல்லாதிருந்தது. அப்பொழுது இம்மாறுபாடுகளுக்குக் காரணம் நமது உடலின் தந்திக்கம்பிகளாகிய நரம்புகள்தாம் என்று எண்ணியிருந்தனர். அதுவும் நன்றாக விளங்கவில்லை. அஃதாவது, நமக்கு ஏதாவது ஓர் உணர்ச்சி ஏற்பட்டால் அதை நம்முடைய நரம்புகள் மூளையென்னும் மேலதிகாரிக்கு உடனே தந்திகொடுத்துவிடுகின்றன. பிறகு அந்த அதிகாரி தந்திமூலம் கொடுக்கின்ற உத்தரவுகளுக்கிணங்க அவயவங்கள் நடந்துகொள்கின்றன என்றுமட்டும் எண்ணியிருந்தனர். இப்பொழுது அதைத் தவிர மற்றொரு விஷயமும் நமக்குத் தெரியவந்திருக்கிறது. அஃதாவது, இந்தத் தந்தி ஆபீஸைத் தவிர உடலிலே தபால் ஆபீஸ் போன்ற வேறோர் ஏற்பாடும் இருக்கிறது என்பது. இந்த ஏற்பாட்டில் சம்பந்தப்பட்டவை உடலிலுள்ள சிற்சில கிரந்திகள் (கிலாண்டுகள்). அவை, 'ஹார்மோன்கள்' என்னும் ஒரு வகையான இரசாயனப்பொருளை உண்டாக்குகின்றன. அந்த இரசாயனப்பொருள்கள் இரத்தக் குழாய்களின் வழியே உடலெங்கும் பாய்ந்தோடும் இரத்த வெள்ளத்-

தில் இறங்கி, உடலில் எங்கும் சென்று அங்கங்கே விஷயங்களைத் தெரிவிக்கின்றன; உடலின் நடுவில் உள்ள கல்லீரலுக்கும், உடலின் வெளிஓரங்களில் உள்ள கைகால்தசைகளுக்கும், எல்லாவற்றையும் மேற்பார்த்து நடத்தும் மூளைக்கும் சென்று செய்திகளைத் தெரிவிக்கின்றன.

இது மிகவும் மெதுவாக நடக்கின்ற காரியம் என்று எண்ணலாகாது. ஓரிடத்தில் இரத்தத்தில் கலந்த பொருளானது உடலெங்கும் பரவ வெகுநேரம் ஆகும் என்று எண்ணக்கூடாது. இதயத்திலிருந்து புறப்பட்ட இரத்தமானது ஏறக்குறைய மூக்கால்நிமிஷத்தில் உடல்முழுதும் ஓடிவிட்டு மீண்டும் இதயத்திற்கு வந்து விடக்கூடும். ஆகலின், இரத்தக் குழாய்களின் வழியாக அனுப்பப்படுஞ் செய்திகள் மந்தமாக அறிவிக்கப்படுகின்றன அல்ல.

அறிவிக்கும் முறை: நாம் சாப்பிடும்போது உட்கொள்ளும் உணவுகளில் சில — எளிதாகக் கரைந்துபோகக் கூடியவையாயும் சுவை மிக்கனவாயும் இருப்பன — வாயில் ஜீர்ணமாகி, வாயிலுள்ள இரத்தக்குழாய்களின் வழியாக இதயத்திற்குச் சென்று, உடலில் எங்கும் பரவுகின்றன. வாயிற் போட்ட சில விநாடிகளுக்குள் அவை உடலின் சிறு பகுதிகளான செல்களையும் உடலிலுள்ள கிரந்திகளையும், 'பான்கிரியாஸ்', குடல் முதலிய உறுப்புக்களையும் எட்டிவிடுகின்றன. அங்கே சென்று, இன்னவகையான உணவுப்பொருள்கள் பின்னால் வந்துகொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவிக்குந் தூதர்களாகின்றன; வரப்போகும் ஆகாரத்தின் மாதிரியையும் அவ் வுறுப்புக்களுக்கு அறிவித்து அத்தகைய ஆகாரத்தை ஜீர்ணிப்பதற்கு உரிய திராவகங்களை (நீர்களை)த் தயார் செய்துகொள்ளும்படி அந்த உறுப்புக்களைத் தூண்டுகின்றன. அவ் வுறுப்புக்களும் இச்-

சாரணர்களின்மூலம் தாம் தெரிந்துகொண்ட விஷயங்களுக்கு ஏற்ப நடந்துகொள்ளுகின்றன. இவ்வாறு சுவை உணர்ச்சிக்கு ஒத்து, அதனோடு இடுபட்டு உடலிலுள்ள பிற ஜீர்ண அவயவங்களும் நடந்துகொள்ளுகின்றன என்பது கவனிக்கத்தகுந்தது.

சுவாச ஏற்பாடு: இம்மாதிரியே வேறு நிகழ்ச்சிகளும் உடலில் நிகழ்வதைக் காணலாம். நாம் பிறந்ததுமுதல் சாகும்வரை இடைவிடாது, விழித்திருக்கும் வேளைகளிற்போலவே உறங்கும் வேளைகளிலும் செய்துவருந் தொழில் என்னவென்றால் மூச்சு விடுவதுதான். தாயின் வயிற்றினுள்ளே அவளுடைய உதிரத்திலிருந்து தனக்கு வேண்டும் உணவையும் பிராணவாயுவையும் பெற்று வந்த கருவானது, பிறந்ததும் 'குவா' என்று கத்திக்கொண்டு மூச்சுவிட ஆரம்பிக்கின்றது; ஆயுசு முழுவதும் இடைவிடாமல் மூச்சு விட்டுக்கொண்டே இருக்கிறது. அது வயது முதிர்ந்து சாகும்போது, 'மூச்சு நின்று விட்டது' என்று சொல்லுகிறோம்.

ஆனால் ஒன்று: நாம் உயிருள்ளவரை மூச்சுவிட்டுக்கொண்டேயிருக்கிறோமாயினும், நம்முடைய ஆயுள்முழுவதிலும் எப்போதும் ஒரே அளவாக மூச்சு விடுவதில்லை. சாதாரணமாக ஒருமனிதன் ஒரு நிமிஷத்துக்குப் பதினெட்டு அல்லது பத்தொன்பது தரம் மூச்சு விடுகிறான். ஓடும்போதும் மும்முரமாய் வேலை செய்யும்போதும் காய்ச்சல்வாய்ப்பட்டபோதும் அவன் அதைக்காட்டிலும் வேகமாக மூச்சுவிடுவதை நாம் பார்க்கிறோம். இது ஏன்?

கரியமில வாயுவின் தொழில்: நம்முடைய மூச்சின் அளவையும் — அதாவது சாதாரண மூச்சா, பெரு மூச்சா என்பதையும் — அதன் வேகத்தையும் அடக்கியோ ஓட்டியோ வருவது 'கார்பன் டை ஆக்ஸைட்,'

'கார்பானிக் ஆசிட்' என்று சொல்லப்படுங் கரியமில வாயு- இது நமது உடலில், உடற் கூறுகளின்— செல்லுகளின்—சிதைவினுல் உண்டாக்கப்பட்டு ஒரு கழிவுப் பொருளாகத் தள்ளப்படுகிறது; நம்முடைய உடலிலிருந்து ஒரு பெரிய அளவில் கழிக்கப்படும் பொருளாக இருந்துவருகிறது. நமது உடற்கூறுகளில், செல் சிதைவுகளினுல் உண்டாகிய இது இரத்தத்தில் தள்ளப்படுகிறது. இதைத் தாங்கியுள்ள இரத்தமானது, அசுத்த இரத்தக் குழாய்களாகிய நரம்புகளின் வழியா யோடி இருதயத்திற்சென்று விழுகிறது; அங்கிருந்து நுரையீரலுக்குக் கொண்டுபோகப்படுகிறது; அங்கே, நாம் சுவாசிக்கும்பொழுது உள்ளிழுக்கும் நல்ல காற்ருேடு கலந்து நல்ல காற்றைத் தான் ஏற்றுக்கொண்டு, அதற்குப் பதிலாகக் கரியமிலவாயுவைக் கொடுத்துவிடுகிறது. நாம் மூச்சை வெளிவிடும்போது அந்தக் கரியமில வாயுவை வெளியேதள்ளி விடுகிருேம். இதுதான் சுவாச முறையும், அதனுடைய மர்மமும். ஆகவே சுவாசிப்பது, நமது இரத்தத்தில் உள்ள அசுத்தங்களுள் முக்கியமான கரியமில வாயுவை வெளியே தள்ளுவதற்காக ஏற்படுத்திய ஏற்பாடுதான் என்பது அறியப்படும்.

நமது இரத்தத்தில் கலக்கின்ற கரியமில வாயுவானது ஓரளவுக்கு மேற்பட்டுவிட்டால் அது நுரையீரலின் வழியே செல்லும்போது அதிலுள்ள நரம்புகளை ஒருவகையாகத் தூண்டுகின்றது. அத் தூண்டுதலானது மூளைக்குத் தந்தியாகப் போகிறது. அங்கே ஒருவகை உபத்திரவமாகத் தோன்றுகிறது. மூளையின் கீழ்ப்பாகத்தில் மூச்சுநிலை என்று ஒன்று இருக்கிறது. அங்கே இந்தச் சமாசாரம் போய்ச்சேர்ந்தவுடன் அது மார்புக்கூட்டிலுள்ள தசைகளுக்கு 'வேகமாய் வேலை செய்யுங்கள்' என்று அவசரத் தந்தி கொடுக்கிறது.

அப்பொழுது மூச்சானது தீர்க்கமாகவும் துரிதமாகவும் விடப்படுகிறது. இதனல் அந்தக் கரியமில வாயு முன்னிலும் வேகமாக அதிகமான அளவில் உடலினின்று வெளியே தள்ளப்படுகிறது.

இவ்வாறு வேகமாய் விடும் மூச்சினல் அளவுக்கு அதிகமாய் உடலில் சேர்ந்துள்ள கரியமிலவாயுவெளியே தள்ளப்படும்வரைக்கும், துரிதமான சுவாச ஏற்பாடு நடந்துவரும். ஏனென்றல், இடைவிடாது கரியமிலவாயுவின் மிகுதியைக் குறித்த தந்திகள் அசுத்த இரத்தத்தினல் மூச்சுநிலைக்கு அனுப்பப்பட்டுக்கொண்டேயிருக்கின்றன. அங்கிருந்தும், இடைவிடாது மார்புக்கூட்டின் தசைகளுக்கு உத்தரவு வந்துகொண்டே இருக்கிறது. இவ்வாறன முயற்சிகளால், அதிகமாயுள்ள கரியமிலவாயுவெல்லாம் அகற்றப்பட்டு, இரத்தமானது மீண்டும் தன் சுயநிலையை அடைந்தவுடன், இத்தகைய தந்தி சமாசாரங்களை அனுப்புவது நின்றுவிடும். அது நின்றுவிடவே மறுபடியும் சுவாசமானது முன்போலச் சாதாரண நிலையை அடையும். இந்த ஏற்பாடு மிகவும் நுட்பமாகச் செய்யப்பட்ட ஏற்பாடு. இரத்தத்தில் அதிகப்பட்டுக் காணும் கரியமில வாயுவின் அளவு மிகச் சிறு அளவாக இருந்தாலுங்கூட உடனே மார்புக்கூடு துருத்தியைப்போல் மும்முரமாக வேலை செய்யத் தொடங்கிவிடும்.

நிகழ்ச்சிகளும் உடலும்: திடீரென்று ஏதாவது ஒரு நிகழ்ச்சியானது நமது கண்முன் நடக்கும்போது நமது உடலில் என்ன நடக்கிறதென்பதைக் கவனிப்போம்: ஒருவன்மீது வண்டியொன்று ஏறிவிடுகிறதை நாம் பார்க்கிறேம்; அல்லது படீரென்று ஒரு சத்தம் நமது காதில் படுகிறது; அல்லது நாம் ஏறிச்செல்லும் வண்டி கவிழ்ந்து விடும்போல் சாய்கிறது என்று வைத்துக்கொள்ளுவோம். நாம் உள்ளே போகும்போது ஒரு

குழந்தை வேடிக்கையாகக் கதவுக்குப் பின்னுல் ஒளிந்துநின்றுகொண்டு 'டப்' என்று சொன்னுலும்-போதும். அப்பொழுது நமது உடலில் ஏற்படுகிற நிகழ்ச்சிகள் என்ன என்று பார்ப்போம். உடம்பு திடுக்கிடுகிறது; அல்லது நமது கண்ணும் வாயும் ஆச்-சரியத்தால் திறந்தபடியே நின்றுவிடுகின்றன. அந்தச் சமயத்தில் நாம் மூச்சுவிடுவதை மறந்துவிடுகிறேம். ஒரு க்ஷணநேரம் மூச்சு நின்றுபோகிறது. 'மூச்சுப் போய் வந்தது' என்று சொல்லுகிறேமன்றே? உடனே உடலுள் இரத்தத்தில் 'கார்பானிக் ஆசிட்' குவிந்து விடுகிறது. வெகு சீக்கிரமாக அது மூச்சுநிலையைப் போய்த் தாக்கி அதைத் தூண்டுகிறது. உடனே நாம் பெருமூச்செறிகிறேம்; அதிகமாக வந்து குவிந்த கரியமிலவாயுவை வெளித்தள்ளும்பொருட்டுத் துரித மாகவும் ஆழமாகவும் மூச்சுவிடத் தொடங்குகிறேம். அதனுல் இரத்தத்தோடு நல்ல காற்று அதிகமாகக் கலக்கத் தொடங்குகிறது.

உணர்ச்சியின் வன்மை : இது கேவலம் ஆச்சரிய உணர்ச்சியால்மட்டிலும் நடைபெறும் நிகழ்ச்சி. அவ்-வகை உணர்ச்சியோடு நாம் வேறுவகையான உணர்ச்சிகளையும் பெறுவோமானுல் இவற்றைத் தவிர வேறு சில விஷயங்களும் உடலுள் நிகழும். நம்-மைத் திடுக்குறச் செய்த விஷயமானது நமக்கு அருவருப்பைத் தருவதாயிருக்குமானுலும், நமக்கு விருப்பமில்லாத ஒருவனுல் தூண்டப்பட்டதாயிருக்கு மானுலும், மேற்கூறிய தந்தியைத் தவிர வேறெரு தந்தியும் மூச்சுநிலைக்கு அனுப்பப்படும். அதாவது, 'ஏதோ விசேஷ சம்பவம் நடந்தாலும் நடக்கலாம்; அதற்குத் தயாராயிருக்கவேண்டும். ஆகையால் மறு-தந்தி வருகிறவரை, விசேஷ நிகழ்ச்சிக்குச் சன்னத்த-மாயிருக்கும்பொருட்டு விரைவாகவும் ஆழமாகவும்

மூச்சுவிட்டுக்கொண் டிருக்கும்படி உத்தரவு செய்' என்பது. அதுவும் அவ்வாறு செய்கிறது. ஆதலால் கோபமூண்டு சண்டைக்குத் தயாராகும் மனிதர், உடல் துடிதுடிக்க மடமடவென்று மூச்சுவிடுவதை நாம் பார்க்கலாம். பயந்து கலேந்த மாடு சீறும்போது இது நன்ருகத் தெரியும்.

ஆகவே கோபத்தையோ, அருவருப்பையோ, அச்சத்தையோபோன்ற உணர்ச்சிகளே நாம் அடையும்போதெல்லாம் நம்முடைய உடலின் அமைதியும் சமத்துவ நிலேயும் மாறிவிடுகின்றன. உடலின் இரசாயன நிலேயானது சீர்கெட்டு, ஒழுங்கில்லாத, நல்லதல்லாத நிலேயாக மாறிவிடுகிறது. ஆதலால், இப்படி அடிக்கடி உண்டாகும் நிலேமாறுபாடுகளினுல் உடம்பு மிகவும் கெட்டுப்போகிறது. மேலும், இந்நிகழ்ச்சிகள் யாவும் ஜீர்ணத்தொழிலேயும் சரிவர நடக்க ஒட்டாது கெடுத்துவிடுகின்றன என்பதும் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய மற்ருெரு விஷயம். நாம் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது திடீரென்று ஒரு துக்க சமாசாரத்தையோ அல்லது சந்தோஷச் செய்தியையோ கேட்டால், நமக்கு உண்ண முடியாது போய்விடுகிறது என்பதையும் நாம் அறிவோம். ஒருவர் மிகவும் வருத்தமான சமாசாரத்தைக்கேட்டாலும் சரி, அல்லது அது வருமென்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தாலும் சரி, "வயிற்றில் என்னவோ செய்கிறதே" என்று சொல்லுவதைக் கேட்கிருேம். சாப்பிட்டவுடனே கோபமாய்ச் சண்டையிட்டாலும் இம்மாதிரியே ஜீர்ணத்தொழிலுக்கு இடையூறு உண்டாவதை நாம் அறிவோம். சிற்சிலருக்கு வாந்தியும் வயிற்றுவலியுங்கூட வருதல் உண்டு.

இது உண்மைதானென்று நமக்கு வெகுகாலமாகத் தெரியும். 'சாப்பிடும்போது அமைதியுடன் சாப்பிடவேண்டும்; அழுதுகொண்டு சாப்பிட்டால் உடம்பில்

ஒட்டாது' என்று சொல்லுவதைக் கேட்டிருக்கிறோம். ஆனால், ஏன் இவை நடக்கின்றன என்பது தெரியாமலிருந்தது.

எக்ஸ் ரே செய்த உதவி: 'எக்ஸ்ரே' என்னும் விந்தையான கிரணங்களை நாம் உபயோகிக்கத் தொடங்கிய பிறகு வயிற்றுக்குள் நடக்கிற விஷயத்தைக்கூட உள்ளங்கை நெல்லிக்கனிபோல் பார்க்கும் திறமையைப் பெற்றுவிட்டோம். அதன் துணையைக்கொண்டு, சாப்பிடும்போது வயிறு சாதாரணமாக என்ன செய்துகொண்டிருக்கிறது, இவ்வகைக் குழப்பங்கள் உண்டாகும்போது அது எவ்வாறு மாறுபடுகிறது என்பவற்றை ஆராய இயன்றது. அந்தச் சோதனை வருமாறு:

ஒரு பூனையின் வயிற்றின்வழி எக்ஸ்ரேயைச் சாதாரணமாகப் புகவிட்டால் அது முழுவதும் ஊடுருவிப் போய்விடும்; நிழல் ஒன்றும் விழாது. அதனால் வயிற்றுக்குள் நடப்பதொன்றையும் நாம் அறியமுடியாது. அதற்காக, அது உண்ணும் ஆகாரத்தோடு 'பிஸ்மத்து' அல்லது 'டால்கம்' பொடிகளைக் கலந்துவிடுவார்கள். அந்தப் பொடிகளுக்கு மணமும் கிடையாது; சுவையும் கிடையாது. ஆதலால் பூனை, ஆகாரத்தோடு ஆகாரமாக அவற்றையும் உட்கொண்டுவிடும். அவை தடித்த வஸ்துக்களாகையால், அப்பொழுது வயிற்றின்வழி எக்ஸ்ரே கிரணங்களைப் புகவிட்டால் அப்பொருள்கள் அவற்றைச் சிறிது மறைக்கும்; அதனால் நிழல் விழும். அந்த நிழலைச் சோதித்துப் பார்த்தால் வயிற்றில் புகுந்த உணவானது என்ன என்ன பாடெல்லாம் படுகிறது என்பது நமது கண்ணுக்குத் தெரியவரும். சாதாரணமாக வயிறானது தனக்குள் விழுந்த ஆகாரத்தைப் பிசைந்து கடைந்துகொண்டேயிருக்கும். சிறிது சிறிதாகச் சிறுகுடலில் ஆகாரம் இறங்கும். எக்ஸ்ரே நிழலில் இது நன்றாகத் தெரியும். பிறகு திடீரென்று

பூனை இருக்கும் அறையில் ஒரு நாயைக் கொண்டுவந்து-விட்டால்—நாயும் கிட்ட வந்து உறுமிக் குலைக்கத் தொடங்கிவிட்டால்—உடனே பூனையினது வயிற்றின் சலனம் அப்படியே நின்று போவதைக் காணலாம். சிற்சில வேளைகளில் அது எதிர்முகமாகவும் நிகழத் தொடங்கிவிடும். அதாவது குடலுள் இறங்கிக் கொண்-டிருந்த உணவானது எதிர்த்து மீண்டும் வயிற்றுக்குள் வரும். சிற்சிலவேளைகளில் வயிற்றிலிருக்கும் உணவும் அன்னக் குழாயின்வழி மேலேறி வாந்தி யெடுக்கும். ஆதலால் மனநிலையால் உணவு ஒழுங்காக ஜீர்ண மாதல் தடைப்பட்டுப்போதலே யன்றி அது அழுகவும் தொடங்குகிறது; ஆகவே நல்லுணவானது யதார்த்த-மாகவே நஞ்சாக மாறிவிடுகிறது.

இதே மாதிரியான நிகழ்ச்சிகள்தாம் நமது உடலி-லும் நிகழ்கின்றன. பொறாமை, கோபம், வெறுப்பு, அச்சம் முதலிய உணர்ச்சிகளை நாம் உண்ணும் தறு-வாயில் அடைவோமானால், நமது ஜீர்ணம் தடைப்படும்; அதனால் அஜீர்ணம் ஏற்படும். உண்ணும் உணவு நன்-மையை அளிக்காமல் நஞ்சாகித் தீங்கைவிளைக்கும்.

இவ்வாறு, அடிக்கடி நிகழுமானால் ஒவ்வொரு தட-வையும் நஞ்சுற்று நஞ்சுற்று, நமது உடலில் தங்கும் நஞ்சுத்தொகுதி அதிகமாகிக்கொண்டே வரும். உடலி-லிருந்து எவ்வளவு அசுத்தம் வெளியே அகற்றப்பட்ட போதிலும், எஞ்சிய ஓர் அளவு தங்கிநின்று நம்மைத் துன்பத்துக்குள்ளாக்குகிறது. பித்தம் முதலியநோய்கள் அப்பொழுது தலையெடுத்து நம்மை வாட்டுகின்றன.

மெய்யான மன அமைதி வேண்டும்: கோபம் முதலிய உணர்ச்சிகள் தலையை வெளிக்காட்டாது உள்ளே கறுமுறுவென்று இருந்தாலுங்கூட இத்தகைய நிகழ்ச்சி-கள் நடந்தே தீரும். அப்பொழுது ஒருகால் அவை

பெரிய அளவில் நிகழாதிருக்கலாம். ஆயினும் அவை, சிறிது சிறிதாக விஷத்தை நமது உடலில் சேர்த்துக்கொண்டே வரும். ஆகையால் ஆரோக்கிய நிலையை நாடும் ஒவ்வொருவனும் பரிபூரணமான மன அமைதியை உடையவனாக இருக்கவேண்டும்; கோபம் முதலிய தீய குணங்களுக்குச் சிறிதும் மனத்தில் இடங்கொடுக்கக் கூடாது.

சுருங்கக்கூறின், உணவின் அளவின்மிகுதியாலும், குறைவாலும், அதன் குணகுணங்களாலும், உண்ணுவோனது மன நிகழ்ச்சியாலும் உணவு நஞ்சாகக் கூடும். இவற்றையெல்லாம் ஆராய்ந்து, ஏற்ற உணவை அமைதியுடன் உண்பதுதான் நல்ல ஜீர்ண முறையாகும். அதுவேதான் ஆரோக்கிய வழி.

9. டால்ஸ்டாய் மகான்[1]

[திரு. தே. வீரராகவ ஐயங்காரவர்கள்]

பிறப்பு வளர்ப்பு — சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றிய மக்களுள் தலைசிறந்தவரும், பிறர் நலத்தையே தம்நலமாகக் கொண்ட பெருமக்களுள் ஒருவரும், ருஷியா மக்களின் அறிவு, கல்வி, பொருள் இவைகளின் பெருக்குக்குக் காரணரா யிருந்தவருமான **கவுண்ட் லியோ டால்ஸ்டாய்,** 1828-ஆம் ஆண்டு ஸெப்டம்பர் மாதம் 9-ஆம் தேதி இரவு 12-30 மணிக்கு, மத்திய ருஷ்யாவில் மாஸ்கோ என்னும் பட்டணத்திற்கு 120 மைல் தெற்கிலுள்ள தூலா (Tula) என்னும ஊருக்கருகிலிருக்கும் 'யாஸ்னுயா போல்' என்ற ஒரு சிறு கிராமத்திற் பிறந்தார். இவருடைய அன்னையார், ருஷியா அரசவமிசத்தைச் சேர்ந்தவர். அவர்பெயர் **மார் யாவர் கோன்ஸிகி** என்பது. அவர் கல்வியறிவு நிரம்பியவர்; பலமொழிகளில் தேர்ந்த அறிவுடையவர்; வீரம், வியப்பு, நகைப்பு முதலிய சுவைகளைக் கேட்போர் மனத்திடையே உண்டாக்கக் கூடிய கதைகளைத் தாமே புனைந்து சொல்லக்கூடிய ஆற்றல் வாய்ந்தவர்; அன்றியும், மனத்தை உருக்கக்கூடிய கீதங்களை இனிய பண்ணுடன் பாடுவதில் மிக்க வல்லமையுடையவர். எப்பொழுதும் அவர்முகத்தில் புன்னகை தவழ்ந்துகொண்டிருக்கும். தமக்கு எத்தகைய தீங்கு நேரினும் அவர் பிறரைப் பழிகூறார்; உண்மைநெறியினின்றும் வழுவார். இத்தகைய அரிய குணங்களெல்லாம் வாய்ந்த அம்மையைத் தமக்கு அன்னையாகப் பெற்றதனால், டால்ஸ்டாய் உலகிற் சிறந்த உத்தமராக விளங்கினர்.

---

[1] 'கலைமகள்' பத்திராதிபரின் அனுமதி பெற்றுப் பதிப்பிக்கப்பட்டது.

டால்ஸ்டாயின் தந்தையார் பெயர் **நிகோலஸ் டால்ஸ்டாய்** என்பது. அவர் அக்காலத்தில் பெருமை பெற்றுத் திகழ்ந்த உயர்தரக்குடும்பத்தில் பிறந்தவர். அவருக்கும் மார்யாவர் கோன்ஸிகிக்கும் ஐந்து குழந்தைகள் பிறந்தன. குழந்தைகள் ஐந்தனுள் நான்காமவர் நம் டால்ஸ்டாய். டால்ஸ்டாயின் மூன்ருவது வயதில் அவர் அன்னையாரும், ஆருவது வயதில் தகப்பனரும் விண்ணுலகெய்தினர். மிகச் சிறுவயதிலேயே தம் பெற்ருேர்களை இழக்கும்படி நேரிட்டதனல் அவரது பிள்ளைப்பருவம் பெரிதும் துன்பம் வாய்ந்திருந்ததுடன் தனிமைப்பட்டதாயும் இருந்ததென்றே சொல்லலாம். அக்காலத்தில், அவர்மனத்தில் எப்பொழுதும் நிலைத்துநின்று அவரைத் துன்பப்படுத்திவந்த ஓர் எண்ணம் மரணத்தைப்பற்றியதாகும். தம்முடைய தாய் தந்தையரைத் தனக்கிரையாக்கிக் கொண்ட இறப்பானது, தம்முன் ஒரு பெரிய கரிய உருவத்துடனின்று, தம்மைப் பயமுறுத்திவந்ததாக இளம்பிராயத்தில் அவர் அடிக்கடி சொல்லிவருவாராம். அவரது பிள்ளைப் பிராயமானது இவ்வாறு இறப்பைப்பற்றி நினைந்து வருந்துவதனற் கழிந்துவருகையில், ஒருநாள் அவர்மனத்தில் ஓர் எண்ணம் உதித்தது. அதன் பயனுக, இறப்பைப்பற்றியும் வாழ்க்கையைப்பற்றியும் பயந்துகொண்டிருத்தலை நீத்து, புத்தகங்களைஎல்லாம் எடுத்து ஒருபுறம் எறிந்துவிட்டு, கடைக்குச் சென்று இனிய தின்பண்டங்களையும், சிறிய கதைப்புத்தகங்களையும் வாங்கிக்கொண்டு, வீடுவந்து சேர்ந்து, தின்பண்டங்களைத் தின்றுவிட்டுப் படுக்கையை விரித்துப்போட்டுக்கொண்டு கதைகளைப் படித்துக்கொண்டே துயின்ருராம். அன்றுமுதல் வாழ்க்கையின் இன்பங்களை நுகரத் தீர்மானங்கொண்டார். இளமையிலேயே பெற்ருேர்களை இழந்துவிட்டமையால், அவரும் அவர் சகோதரர்களும் தங்கள் கிளைஞரது ஆதரவில் வளர்ந்து-

வந்தனர். அதிர்ஷ்டவசமாக, அக்கிளைஞரது ஊழியக்காரர்கள் தாய்தந்தையரற்ற டால்ஸ்டாயிடமும் அவருடைய சகோதரர்களிடமும் மிகுந்த அன்புடையராய் இருந்தனர். அவ்வூழியர்களிடம் டால்ஸ்டாயும் அன்புடையவராகவே இருந்தார். டால்ஸ்டாய் பெரியவரானபின்னரும், தம்மைச் சிறுவயதில் அன்புடன் வளர்த்துவந்த ஏழைஊழியர்களைப்பற்றி அடிக்கடி குறிப்பிடுவாராம்.

கல்வி — டால்ஸ்டாய் தமது பன்னிரண்டாவது வயதில் கல்வி கற்க மாஸ்கோவிற்குச் சென்றார். அங்கே சிலவருடங்கள் படித்தபிறகு பதினைந்தாம் வயதில் 'காலன் பல்கலைக் கழக'த்திற் சேர்ந்து உயர்தரக்கல்வி படிக்கத் தொடங்கினர். அப் பல்கலைக் கழகத்தில் செல்வர்களுடைய மக்களே நிறைந்திருந்தனர். அவர்கள் தங்கள் பணத்தையும் காலத்தையும் பயனற்ற வழிகளிற் செலவு செய்துவந்தனர். டால்ஸ்டாயும் அவர்களது வலையிற் சிக்குண்டார். அதன்பயனாக, ஆடல் பாடல் குடி முதலிய கெட்ட விஷயங்களில் தமது மனத்தைச் செலுத்தி, விரைவில் கடன்காரரானர்; கோயிலுக்குச் சென்று கடவுளைத் தொழுவதையும் விட்டுவிட்டார். இவ்விதமாக ஒருவித லட்சியமு மின்றித் தமது வாணாட்களைக் கழித்துவரும்பொழுது, டால்ஸ்டாய் திடீரென்று தமது வாழ்க்கையைப்பற்றி ஆராயத் தொடங்கினர். அவ்வாராய்ச்சியின் பயனாகத் தமது காலத்தை வீணாகச் செலவிடக்கூடாதெனத் தீர்மானங்கொண்டுஒழுங்காகப் படிக்கத் தொடங்கினர். அவரது பண்டைய நண்பினர்கள் அவரைப் படிக்க விடுவதில்லை. தமது முயற்சிகள் பலிக்காமற் போகவே டால்ஸ்டாய், பல்கலைக் கழகத்தைவிட்டுநீங்கித் தமது சொந்த ஊரை அடைந்தார். அங்கே, தமது நிலங்களையும், அந்நிலங்களில் வேலைசெய்யும் ஏழைக் குடியானவர்களின் நிலைமையையும்

திருத்தம் செய்யவேண்டுமென அவர் உறுதிகொண்டார்; தமது வாழ்க்கையையும் எளியதாகச் செய்துகொண்டு, ஓர் எளிய குடியானவனுடன் தம்மையும் ஒன்றுபடுத்திக்கொண்டார்.

போர்வீரர்—குடியானவர்கள் டால்ஸ்டாயின் கருத்துக்களையும் நன்முயற்சிகளையும் அறிந்துகொள்ளவில்லை; ஆகையால் அவர்களுக்காக அவர் செய்துவந்த முயற்சிகள் சற்றும் பயனிலவாயின. தமது முயற்சிகள் அங்கும் பயனற்றுப்போகவே, குடியானவர் வாழ்க்கையில் வெறுப்படைந்து, சேனையில் ஒரு போர்வீரராகச்சேர்ந்தார். அவர் போர்வீரராகச் சேர்ந்ததற்கு இரண்டு காரணங்கள் உள. 1. அவருடைய மூத்த சகோதரரும் மாமனும் சேனையில் பெரிய உத்தியோகத்திலிருந்தார்கள்; அவர்களைப்போன்று தாமும் ஒரு பெரிய உத்தியோகஸ்தராக வரவேண்டுமென்ற எண்ணம். 2. தமது தேசத்திற்கு உழைக்கவேண்டுமென்று அவருக்கு வெகுகாலமாக இருந்த பேரவா. அவருக்கு வயது 24 ஆகும் பொழுது கிரிமியா என்னுமிடத்தில் சண்டை ஏற்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தை இழக்காது, அவர் அப்போரில் ஒரு போர்வீரராகச் சேர்ந்து போர்புரிந்தார்; இடையே ஓய்வேற்பட்ட வேளைகளில் நூல்கள் எழுதி வெளியிட்டார். கிரிமியாப்போரிற்றான் அவரது போர்த்திறமையும் தைரியமும் மக்களுக்குத் தெரியவந்தன. கேவலம் சண்டை செய்வதுடனில்லாது, மற்றைப் போர்வீரர்களிருக்கும் இடங்களுக்குச் சென்று அவர்களுக்கு ரசமான கதைகளைச் சொல்லி அவர்களை உற்சாகப்படுத்தியும் வந்தார். அச்சமயத்தில்தான் அவர் "செபஸ்டபூல் கதைகள்" என்னும் நூலை எழுதினர். அந்நூல்தான் அவரது பெருமையை முதன்முதலில் ருஷியர்களுக்கு எடுத்துக்காட்டியது. அவரது போர்த்திறமையையும் நூலெழுதும்

வன்மையையும் கண்ட ருஷியஅரசன், 'இத்தகைய நுண்ணறிவு படைத்த ஒருவர் போரிற் சென்று வறிதே இறந்துபட்டொழிதல் தேசத்திற்கே பெரு நஷ்டமாகும்' என்று அறிந்து, அவரைச் சேனையி-னின்றும் விலகிக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டான். தமக்கு அவ்வாறு செய்ய இஷ்டமில்லாதிருந்தும் டால்ஸ்டாய், அரசன் கட்டளையை மீறமுடியாதவராய்ச் சேனையை விட்டு விலகி, பீட்டர்ஸ்பர்க் என்னும் இடத்தை அடைந்தார். அங்குள்ள பெரியோர்களும் தேசத் தலைவர்களும் அவரை அன்புடன் வரவேற்று உபசரித்தனர். அவர் அங்குச் சில காலம் வாழ்ந்து வந்தார். ஆயினும், போரினின்றும் அறிந்துகொண்ட அனுபவங்கள், அவரிடம் முன்பு எழுந்து அடங்கிய ஆசையை மறுபடியும் தூண்டிவிட்டன. அதுமுதல் அவர், தமது செல்வம், உடல்வன்மை, நூலெழுதுந் திறமை இவை யாவற்றையும் ஏழைக்குடியானவர்களுக்-குத் தொண்டு செய்வதன் பொருட்டுச் செலவிடத் தீர்மானங் கொண்டார்; இத்தொழிலில் வல்லுநராதற்-பொருட்டு அக்காலத்தில் மேனுடுகளில் வசித்த பெரி-யோர்களைக் காண்பதற்காக ஜெர்மனி, இத்தலி, இங்-கிலாந்து, பிரான்சு முதலிய தேசங்களில் பிரயாணம் செய்துவந்தார்.

1861 - ஆம் வருடத்தில் ருஷிய அரசாங்கம் தன்-நாட்டிலுள்ள குடியானவர்களுக்கு உரிமை கொடுக்கச் சட்டம் ஏற்படுத்துதற்குமுன்பே டால்ஸ்டாய், தம்கீழி-ருந்த குடியானவர்களுக்குப் பூரண உரிமை கொடுத்து-விட்டார். பின்னும்,குடியானவர்கள துநிலையை உயர்த்த எண்ணங்கொண்டவராய்த் தமது சொந்தவூரிலுள்ள ஏழைக்குடியானவர்களின் குழந்தைகளுக்காக ஒரு கல்-விச்சாலை ஏற்படுத்தினர். அச்சாலைக்குக் குழந்தைகள் தாங்கள் இஷ்டப்பட்டபோது வரலாமெனவும், தங்க-

ளுக்குப் பிரியமான பாடங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாமெனவும், பள்ளிக்கூடத்தில் தண்டனை விதிக்கப்படமாட்டாதெனவும் சட்டங்களை ஏற்படுத்தி-னர்; அப்பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளிடம் காணப்-படுங் குறைபாடுகளுக்கு உபாத்தியாயர்களைக் காரண-ராக்கினர். தாமும் அப்பள்ளிக்கூடத்திலேயே ஓர் ஆசி-ரியராக இருந்துவந்தார். பிள்ளைகளுக்குஅவர்போதித்து வந்த பாடங்கள் விவிலிய நூல் (பைபிள்), சரித்திரம், பாட்டு முதலியன. அவர், தாம் ஒரு பள்ளிக்கூடத்தை ஆரம்பித்ததே யன்றி, தம்மூரிலுள்ள பல செல்வர்-களையும் ஏழைமக்களுக்காகக் கல்விச்சாலைகளை நிறு-வும்படி தூண்டினர். அவரது வேண்டுகோளுக் கிணங்-கிச் சிலர், சில பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தினர். ஆயி-னும், இறுதியில் அப்பள்ளிக்கூடங்கள் பயனிலவாயின. அதற்குக் காரணம் அதிகாரிகள் டால்ஸ்டாயுடன் ஒத்துழைக்க முன்வாராததும், பிள்ளைகளுக்கு விசேஷ சுதந்திரம் கொடுக்கப்பட்டதுமேயாம்.

* * * *

குடியானவர்—இதற்கிடையே டால்ஸ்டாய் அநேக சிறந்த நூல்களை எழுதி வெளியிட்டுவந்தார். அவை ஜனங்களால் மிகவும் மதித்துப் போற்றப்பட்டன. அவ-ரது புறவாழ்க்கை தினமும் விருத்தியடைந்து வந்தது-போல் அகவாழ்க்கையும் விருத்தியடைந்து வந்தது. அவர் 1880 - ஆம் ஆண்டில் உயர்தர வாழ்க்கையை நீத்து ஓர் எளிய குடியானவன் வாழ்க்கையை மேற்-கொண்டார்; தினமும் ஆதவனுதயத்திற்கு முன்பே படுக்கையை விட்டெழுந்து வயலுக்குச் சென்று ஏர் உழுதல், களைபறித்தல், நீர்பாய்ச்சுதல் முதலிய வேலைகளை மிகவும் உற்சாகத்துடன் செய்வார்; ஏழை-கள், மெய் தளர்ந்தோர், உறுப்புக்குறைந்தோர், சிறு-வர்கள் முதலியோர் நிலங்களில் வேலைசெய்துவந்தால் அவர்களுக்கு உதவி செய்வார். அக்காலத்திற்றான்

அவர் செருப்புத் தைக்குந் தொழிலைக் கற்றுக்கொண்டார். அத்தொழிலில் அவர் வெகு விரைவில் கைதேர்ந்தவ ராய்விட்டதனல், மக்கள் யாவரும் அவரது கைத்தொழில் திறத்தைப்பற்றிப் போற்றத் தலைப்பட்டனர். அவர் இரவில் வெகுநேரம்வரை விழித்துக்கொண்டு ஏதேனும் உபயோகமானதொரு வேலை செய்வார். ஆயினும் அதிகாலையிலெழுந்து வயலுக்குச் செல்லத் தவறுவதில்லை.

தூய உணவு—நாளாக நாளாக டால்ஸ்டாய் முன்னர் உட்கொண்டுவந்த உயர்தர உணவையும் மதுபான வகைகளையும் இன்பப் போக்குக்களையும் குறைத்துக்கொண்டார்; ஊன்உணவு கொள்வதைத் தவிர்த்துச் 'சைவ உணவு' கொள்ளத் தலைப்பட்டார்; வேட்டையாடுவதை விட்டார். எளியவர்களால் உபயோகப்படுத்தப்பட்டுவந்த புகையிலையையும் அனுவசியமானதென்று நீத்தார். இவ்வாறு அவர் எவ்வளவு முயன்றும் தம்மை எளிய குடியானவர்களுடன் ஒன்றுபடுத்திக்கொள்ள முடியாதவரானர். அவர் பிறந்து வளர்ந்த குடும்பத்தின் பழக்க வழக்கங்களே அவரது இரத்தத்தில் ஊறியிருந்தன. ஆகையால் அப் பழக்கங்கள் அவருக்கு இடர்கொடுத்துவந்தன. மேலும், அன்பு மிகுந்த மனைவியினது கூட்டுறவும், அடக்கமும் அன்பும் ஒழுக்கமும் வாய்ந்த மக்களது சங்கமும் தனிவாழ்க்கையைச் செலுத்தவிடாது அவரைத் தடுத்துவந்தன. தாம் ஓர் எளிய குடியானவனது வாழ்க்கையைச் சற்றும் ஏற்றக்குறைவின்றி மேற்கொள்ளவேண்டுமானல், தமது மனைவி மக்களையும் சொத்துக்களையும் விட்டு விலகிநிற்கவேண்டுமென்று உறுதிகொண்டார்.

குடும்பத்திலிருந்து துறவு:—அவ் வுறுதிப்படியே 1888-ஆம் ஆண்டில் தமக்கும் தம் சொத்துக்களுக்கும் யாதொருதொடர்பும் இல்லையென்றும், தம் மனைவியே

அவைகளுக்கு உரியவளென்றும் விடுதலைச்சீட்டு எழுதி மனைவியிடம் கொடுத்துவிட்டார். அதுமுதல் சொத்துக்களைப் பரிபாலிக்கும் விஷயத்தில் தலையிடாது ஒரு துறவிபோலிருந்துவந்தார்.

பஞ்சத்தில் உதவி — இவ்வாறு அவர் வாழ்ந்துவருகையில் 1891, 92 - ஆம் ஆண்டில் ருஷியாவில் கொடியதொரு பஞ்சம் உண்டாயிற்று. அப் பஞ்சத்துன்பத்திலிருந்து ஏழைக்குடியானவர்களைப் பாதுகாப்பதற்காக டால்ஸ்டாயும் அவரது குடும்பத்தார்களும் தங்கள் உடல், பொருள், ஆவி மூன்றையும் பெரிதும் உவந்துதவினர். தாம் நேரிற் கண்ட பஞ்சக்காட்சிகளையெல்லாம் டால்ஸ்டாய் சிறு கதைகளாக எழுதி வெளியிட்டார்.

இவ்விதமாகத் தம் வாழ்நாளை ஏழைக்குடியானவர்களின்பொருட்டுச் செலவுசெய்துவந்த ருஷிய ஞானியும் உலகப்பெரியாருள் ஒருவருமான லியோ-டால்ஸ்டாய் 1910 - ஆம் வருஷம் நவம்பர் மாதம் இவ்வுலகவாழ்வை நீத்துத் துறக்கம் அடைந்தார்.

*　　*　　*　　*

குறிப்புரை

I

கடவுள் வாழ்த்து

கடவுள்வாழ்த்து என்பது கடவுளது வாழ்த்து என்னும் பொருளது. அஃதாவது, கடவுள் சம்பந்தமான வாழ்த்து என்பதாம்.

1. தாயுமான சுவாமிகள்

தாயுமான சுவாமிகள், சோழநாட்டில் திருமறைக் காட்டில் வாழ்ந்திருந்த கேடிலியப்ப பிள்ளை என்பவருக்குத் தவப்புதல்வராய்ப் பிறந்தவர். கேடிலியப்பபிள்ளை, திருச்சிராப்பள்ளியில் அரசு செலுத்திய விஜய ரகுநாத சொக்கலிங்க நாயகர் சம்ஸ்தானத்தில் கணக்கர்தொழிலில் அமர்ந்திருந்தார். அவர், தம் புதல்வர் சிவசிதம்பரம் என்பவரைத் தம் தமையனுர்க்குச் சுவீகாரபுத்திரராகக் கொடுத்துவிட்டதனுல் தமக்குப் புதல்வரின்மையின் மனம் வருந்தி, திருச்சிராப்பள்ளியில் எழுந்தருளியுள்ள தாயுமானுரை வணங்கி வந்தார். அவரருளால் ஓர் ஆண்மகவு பிறந்தது. அதற்கு அவர்பெயரையே (தாயுமானுர் என்பது) இட்டு, அதனை வளர்த்து வந்தனர்.

தாயுமானுர் இளமைப்பருவ மடைந்தபோது அவர் தந்தையார் துறக்கஞ் சென்ருர். பின்னர் அவர், தம் தந்தையார் புரிந்த தொழிலை மேற்கொண்டு காலங் கழித்துவந்தார். ஆயினும், அவருக்கு ஞானசாரியரை யடைந்து உபதேசம் பெறவேண்டும் என்னும் எண்ணம் மிக்கிருந்தது.

அக்காலத்தில், திருமூலர்மரபில் தோன்றிய மௌனகுரு என்பவர் அங்கு எழுந்தருளினுர். தாயுமானுர் அவரை யடைந்து ஞானுேபதேசம் பெற்று, அவ்வழியில் ஒழுகிவந்தார். அவ்வாறிருக்கையில் நாயக அரசர் காலஞ்சென்ருர். பின்னர்த் தாயுமானுர், தந்தொழிலை விடுத்து, தம் மாணக்கர் அருளையர் என்பவருடன் இராமநாதபுரஞ் சென்ருர். அதனைக் கேள்வியுற்ற சிவசிதம்பரம்

பிள்ளை ஆங்குச் சென்று தாயுமானுரை இல்லறம் மேற்கொள்ளு மாறு வேண்டினர். அவரும் அவ்வுரைக்கு ஒருவாறு உடன் பட்டுத் திருமறைக்காடு சென்று, அங்கு, 'மட்டுவார் குழலி' என்னும் அம்மையாரை மணந்து இல்வாழ்க்கை நடத்தினர். அந்நாளில் அவருக்கு ஓர் ஆண்மகவு பிறந்தது. அதற்குக் கனக சபாபதி என்று பெயரிட்டு, அதனை வளர்த்துவந்தார். சில காலத் துள் அவர்தம் தேவியார் சிவலோகம் அடைந்தார்.

அதன்பின்னர்த் தாயுமானர் துறவுகொண்டு பல தலங் களுக்குச் சென்று இறைவனை வணங்கி ஞானயோகத்தில் நின்று இறுதியில் முத்திபெற்ருர். முத்திபெற்ற காலம், சாலிவாகன சகாப்தம் 1581 (கி. பி. 1659)-ல் தை மாதம் திங்கட்கிழமை பௌர்ணமி யாகும். இது, 'துகளறு....நற்றினமே' என்னுஞ் செய்யுளால் தெரிகின்றது.

தாயுமானர் அருளிச்செய்த செய்யுட்கள் கடவுளின் இயல் பினை நன்கு விளக்குவனவும், பக்தியை யுண்டாக்குவனவுமாய் அமைந்துள்ளன. அவற்றைத் தமிழ்நாட்டில் பலரும் படித்து மனனஞ் செய்கின்றனர். செய்யுட்களில் வடசொற்கள் அதிக மாகப் பயின்றுள்ளன. செய்யுளின் நடை எளியது.

தாயுமானவர் பாடல்

1. அகிலம் - உலகம். ஆணை - ஆக்கினை. அளகேசன் (அளகா + ஈசன்) - குபேரன். ரசவாத வித்தை - இரும்பு முதலிய இழிந்த உலோகங்களைப் பொன்னுக்கும் வித்தை. காய கற்பம் - உடல் நெடுங்காலம் அழியாதிருக்கச் செய்யத்தக்க மருந்து. பாசம் - ஆசை. மனது அற்ற - எண்ணுதல் அற்ற; நினைப்பற்ற.

2. சருவ சன செபம்

சருவ சன செபம் என்பது, சருவ சனங்களும் செபிக்கத்தக்க செபம் எனப் பொருள்படும். இதனை இயற்றியவர், திரு. வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள். இவர்கள் தொண்டைமண்டல முதலியார்வகுப்பினைச் சேர்ந்தவர்கள்; திருநெல்வேலி ஜில்லாவி லுள்ள வெள்ளக்கால் என்னும் ஊரில் பழநியப்ப முதலியாரவர் களுக்குத் தவப்புதல்வராகப் பிறந்தவர்கள். இவர்கள் பிறந்தது கொல்லமாண்டு 1032 (கி. பி. 1857)ல் எனத்தெரிதலின், இப்பொ-ழுது இவர்கட்கு 79-ஆம் வயது நடைபெறுகின்றது. இவர்கள் வெற்றர்னெரி டிப்யூடி சூபரின்டென்டென்டாயிருந்து இப்போது உபகாரச் சம்பளம் பெற்று வருகிறுர்கள். சில யாண்டுகள் திரு-நெல்வேலித் தாலூகாபோர்டு பிரசிடெண்டாயிருந்து பல நன்மை புரிந்துவந்தார்கள். அதனல் அரசாங்கத்தார் பாராட்டி இவர்கட்கு ராவ்ஸாஹிப் என்னும் பட்டம் அளித்துள்ளனர். இவர்கள் எந்நா-ளும் தமிழ்க்காவியங்களைப் படித்து இன்புறுதலும், செய்யுட்களை இயற்றித் தமிழ்மக்கட்கு இன்பமூட்டுதலும், தமிழ்நூல்களை ஆராய்தலுமே பொழுதுபோக்காக மேற்கொண்டுள்ளார்கள். இவர்கள் இயற்றியுள்ள வேறு நூல்கள் - கோம்பி விருத்தம், அகலிகை வெண்பா, நெல்லைச் சிலேடை வெண்பா, கல்வி விளக்கம் என்னும் நூல்களும், கால்நடைகளைப்பற்றிய சில நூல்களுமாம். கம்பராமாயணத்தினின்று சிறந்த செய்யுட்களைத் தொகுத்து உரையுடன் 'செந்தமி' ழில் வெளியிட்டுவருகிறுர்கள்.

3. நவில்வார் - சொல்பவர்.
4. நண்ணல் - அடைதல்.
5. உன்னுவார் - நினைப்பார்.
7. அகத்துள் - மனத்துள். அதனை என்றது கடவுளை.
10. திறம்பி - மாறுபட்டு.
11. வழீஇ - வழுவி.
12. இன்பு - இன்பம்.
22. இரவேன் - யாசகஞ் செய்யேன்.
23. அவாவேன் - ஆசைப்படமாட்டேன்.

24. அழுக்கறேன் - பொறுமைப்படமாட்டேன். அழுக்கறு, பகுதி.

26. முன்பு - அவருக்கு எதிரேயும். பின்பு - அவர் இல்லாத விடத்திலும்.

29. மறை - இரகசியம்.

30. இன்னா - துன்பந்தருஞ் சொற்கள்.

31. ஊறு - இடையூறு, துன்பம்.

32. அவர் கேடு - அவருக்குக் கேடு; அவரது கேட்டை எனவுமாம். சூழ்தல் - எண்ணுதல், ஆராய்தல்.

36. ஒறுத்தவர் - தண்டித்தவர்.

37. பண்பினேன் - குணத்தையுடையேன்.

40. இறுமாந்திடேன் - செருக்குக்கொள்ளேன்.

46. இடையறாது - இடைவிடாமல்.

48. நிறைவு - திருப்தி.

51. துன்னாது - நெருங்காமல், சேராமல்.

58. நற்பேறு - நற்பயன்.

II

திருக்குறள்

திருக்குறள் பதினெண்கீழ்க்கணக்கினுள் ஒன்று. திருக்குறளோ டொருங்குவைத் தெண்ணப்படுவது நாலடியார் என்னும் நூல். திருக்குறளை அருளிச்செய்தவர் திருவள்ளுவர்.

திருவள்ளுவர்

திருவள்ளுவர்பிறப்பினையும் அவர்தம் வாழ்க்கையினையும் அவர் திருக்குறளை அரங்கேற்றிய செய்தியையுங் குறித்துக் கதைகள் பல வழங்குகின்றன. அவையெல்லாம் உண்மை எனக் கொள்ளத் தக்கனவல்ல. திருவள்ளுவர் மதுரையிற் றோன்றி வாழ்ந்தவர் என்பது, 'உப்பக்க நோக்கி....செந்நாப், போதார் புனற்கூடற் கச்சு' என்னுந் திருவள்ளுவமாலைச்செய்யுளால் அறியலாகும்.

திருவள்ளுவர் என்னும் பெயர் குலம்பற்றி வந்ததென்பது கதை ; பழைய உரையாசிரியர்சிலர் அஃது இயற்பெயர் எனக் கொண்டனர். வள்ளுவர் என்பது தொழில்பற்றி வந்த பெயர் என்றும், வள்ளுவர் அரசர்க்குரிய கருமத்தலைவர் என்றும் திரு. எஸ். சோமசுந்தரபாரதியாரவர்கள் ஆராய்ச்சி செய்து எழுதியுள் ளார்கள். திருவள்ளுவர் கடைச்சங்க காலத்தை அடுத்திருந்தவர் என்பது திருவள்ளுவமாலையால் அறியப்படுஞ் செய்தி. மணிமேகலையின் ஆசிரியர், 'பொய்யில் புலவன்' என்று திருவள்ளுவரைச் சிறப்பித்துக் கூறியிருத்தலின், அவருக்கு முற்பட்டவர் திருவள்ளுவர் என்பது துணியப்படும்.

திருக்குறள்

குறள் என்பது எழுசீரான் அமைந்த ஈரடி வெண்பாவிற்குப் பெயர். அத்தகைய குறட்பாவினால் ஆகிய நூலைக் குறள் என்பது ஆகுபெயர். திருக்குறள் - அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால் என்னும் மூன்று பெரும்பகுதிகளையும், அவற்றின் உட்பிரிவாகிய 133 அதிகாரங்களையும் உடையது. அதிகாரம் ஒவ்வொன்றும் பப்பத்துச் செய்யுட்களால் ஆகியது. ஆகலின், திருக்குறள் 1330 செய்யுட்களைக் கொண்டதாதல் அறியப்படும். திருக்குறள் மிகச்சிறந்ததொரு பெருநூல். இதன் சிறப்பினை யறிந்து பிறமொழியாளரும் இதனைத் தத்தம் மொழிகளில் மொழி பெயர்த்துள்ளனர். இஃதொன்றே இதன்பெருமையை அறிவித்தற்குச் சாலும்.

திருக்குறளுக்குப் பதின்மர் உரைசெய்தனர் எனத் தெரி கின்றது. அவ்வுரைகளுட் பரிமேலழகருரையே வழங்குகின்றது. ஏனைய உரைகளுள் மணக்குடவருரையொன்றே அச்சில் வந்துளது. பல உரைகள் இக்காலத்தில் கிடைத்தில.

ஈண்டுப் பாடமாகக் குறிக்கப்பட்டுள்ள செய்யுட்கள் பொருட் பாலில் ஒழிபியலினுள்ளவை.

குடிமை — உயர்ந்த குடியின்கண் பிறந்தாரது தன்மை.

1. வாய்மை - உண்மை. இழுக்கார் - வழுவமாட்டார்.

2. வகை - கூறு. வாய்மைக்குடி - எல்லாக்காலத்தும் திரிபில் லாத குடியிற் பிறந்தவர்.

3. வழங்குவது - கொடுக்கும் பொருள். உள்வீழ்ந்தக்கண்ணும் - சுருங்கியவிடத்தும். பழங்குடி - தொன்றுதொட்டு வரு

கின்ற குடியிற் பிறந்தவர். பண்பின் தலைப்பிரிதல் இன்று - தம் பண்பினின்று நீங்குதல் இலர்.

மானம் — எஞ்ஞான்றும் தம் நிலையிற் றாழாமையும், தாழ்வு வந்தவிடத்து உயிர்வாழாமையுமாம்.

4. பெருக்கத்து - நிறைந்த செல்வமுள்ள காலத்து. சிறிய சுருக்கத்து - குறைந்த வறுமை உண்டான காலத்து. உயர்வு - பணியாமை.

5. ஒட்டார் - தன்னை இகழ்வார். அந்நிலையே கெட்டான் - (அது செய்யாது) முன்னைநிலையில்நின்று இறந்தான்.

6. ஊன் ஓம்பும் - (பயனில்லாத) உடம்பைக் காக்கும். மருந்தோ - (பின்னும் இறவாமைக்கு) மருந்தாமோ. பெருந்தகைமை - உயர்குடிப்பிறப்பு. பீடு - தன் வலியாகிய மானம்.

7. மயிர் நீப்பின் - தன் மயிர்த்திரளின் ஒரு மயிர் நீங்கினும். வாழா-உயிர் வாழாத. மானம் வரின் -(உயிர் நீக்கத் தான்) மானம் எய்தும் எல்லை வரின்.

பெருமை — நற்குணங்களால் பெரியாரது தன்மை.

8. சிறப்பு - சிறப்பியல்புகள்.

9. ஆம், அசைநிலை. பெருமை-பெருமையுடையவர். சிறுமை-சிறுமையுடையவர். அணிதல் - தமக்கு மேன்மையை ஏற்றிக் கொள்ளுதல்.

சான்றாண்மை — பல குணங்களாலும் நிறைந்து அவற்றை ஆளுந்தன்மை.

10. ஒப்புரவு - உலகநடையினை அறிந்து செய்தல். கண்ணோட்டம் - தாட்சிணியம். சால்பு ஊன்றிய தூண் ஐந்து என மாறுக. ஊன்றிய - தாங்கிய.

11. நோன்மை - தவம்.

12. ஆற்றல்-வல்லமை. பணிதல் -(தம் கருமத்திற்குத் துணையாவாரைத்)தாழ்ந்து கூட்டிக்கொள்ளுதல். மாற்றாரை - பகைவரை. மாற்றும் - பகைமை நீக்குகின்ற.

பண்புடைமை — எல்லாரியல்புகளையும் அறிந்து ஒழுகுதல்.

13. ஆன்றகுடி-(உலகத்தோடு) அமைந்த குடி ; அமைதல் - ஒத்து வருதல். வழக்கு - நன்னெறி.

14. ஆற்ருராகி - செய்யாமல். நயமில - அன்பில்லாதவற்றை; பகைமையை. பண்பு ஆற்ருராதல் - பண்புடையவராய் ஒழுகா திருத்தல்.

15. நன்பால் - நல்ல பசுவின்பால். கலம் தீமையால் - கலத்தின் குற்றத்தால். திரிந்தற்று - கெட்டதுபோலும்.

கலந்தீமை என்பது கலத்தீமை என்பதன் விகாரம்.

நாணுடைமை — உயர்ந்தோர், தமக்கு ஒவ்வாத செயலில் நாணுதல் உடையராந் தன்மை.

16. உறைபதி - உறைவிடம்.

17. அறம் நாணத் தக்கது - அறம் விட்டுநீங்கத் தக்க குற்றத்தை.

குடிசெயல்வகை—தான் பிறந்த குடியை உயரச்செய்தலின் திறம்.

18. குடிசெய்வல் - (என் குடியினை) உயரச் செய்வேன். தெய்வம் - ஊழ். மடி - ஆடை. தற்று - இறுக உடுத்துக்கொண்டு.

முன் நடப்பவரின்செயல் ஊழ்மேல் ஏற்றப்பட்டது.

19. இல் - குடியினை. ஆண்மை - ஆளுந் தன்மையை. ஆக்கிக் கொளல் - தனக்கு உளதாக்கிக்கொள்ளுதல். குடியினை ஆளுந் தன்மையாவது, குடியில் உள்ளாரை உயரச்செய்து தன்வழிப் படுத்துதல்.

20. அமரகத்து - போர்க்களத்தில். வன்கண்ணர் போல - (போர் தாங்குதல்) வன்கண்ணர்மேலது ஆனற்போல. தமரகத்தும்-குடியின்கண் பிறந்த சுற்றத்தாருள்ளும். ஆற்றுவார்மேற்று- பொறுக்கவல்லவர்மேலது. பொறை - குடியின் பாரத்தைப் பொறுத்தல்; குடியைத் தாங்குதல்.

போர்க்களத்துச் சென்றவர் பலராயினும், போர்தாங்குவார் வன்கண்ணரான சிலரே யாதல்போல, ஒரு குடியிற்பிறந்தவர் பலராயினும் அதனைத் தாங்கும் ஆற்றல் உள்ளவர் சிலரேயாவர் என்பது கருத்து.

III

1. சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரம் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று. காப்பியங்கள் ஐந்தாவன : சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி. (இவற்றுள் பின்னைய இரண்டு காப்பியங்கள் இக்காலத்தில் கிடைக்கவில்லை). இவற்றுள் சிலப்பதிகாரத்தை இயற்றியவர் இளங்கோவடிகள்.

இளங்கோவடிகள்

இளங்கோவடிகள், சேரலாதன் என்னும் அரசனுக்குப் புதல்வர்; செங்குட்டுவனுக்குத் தம்பி. இவர் இளமையிலேயே துறவு பூண்டவர்; அதனால் இளங்கோ அடிகள் எனப்பட்டார். இவர் ஜைன சமயத்தைச் சார்ந்தவர் (சைவரென்பாரும் உளர்). ஆயினும், பிறமதங்களையும் உயர்த்திக்கூறும் இயல்பினர். இவர் இக்கதையின் முற்பகுதியைச் சாத்தனார் என்னும் புலவரால் அறிந்தும், பிற்பகுதியைத் தாமே நேரிற் கண்டும் இந்நூலை இயற்றினார் எனத் தெரிகின்றது. இந்நூல் செய்த காலம் கி. பி. 2-ஆம் நூற்றாண்டென்றும், 5-ஆம் நூற்றாண்டென்றும், 6-ஆம் நூற்றாண்டென்றும் கூறுவர். இளங்கோவடிகள் முத்தமிழ்க்கலையும் உணர்ந்த வித்தகர். ஆயினும், நாடகக்கலையில் மிக்க பயிற்சியுடையவர் என்பது இந்நூலால் நன்கறியப்படும். இவர்செய்யுட்கள் தெளிவும் இனிமையும் உடையன. இந்நூலின் சுவையைக் குறித்து " நெஞ்சை யள்ளுஞ் சிலப்பதி காரமென் றோர்மணி யாரம் " என்று பாரதியார் கூறியிருப்பது மிக்க அமைவுடையதே.

சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரம் (சிலம்பு + அதிகாரம்), சிலம்பினால் அதிகரித்த சரிதத்தைக் கூறுவது. அஃதாவது, கண்ணகியின் சிலம்பினால் விளைந்த கதையை முக்கியமாகவுடையது என்பதாம். இந்நூலில், அரசியல் பிழைத்த அரசர் கெடுவர் என்பதும், பத்தினிப் பெண்டிரை உயர்ந்தோரும் ஏத்துவர் என்பதும், ஊழ்வினைவிடாது உருத்தும் என்பதும் நன்கு தெளிவிக்கப்பட்டுள்ளன.

1. சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரம் மூன்று காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுளது. (1) புகார்க்காண்டம். (2) மதுரைக்காண்டம். (3) வஞ்சிக் காண்டம். இந்நூலின் உட்பிரிவு முப்பது. அவற்றுட் பெரும்பாலனவற்றிற்குக் காதை என்று பெயர். 'காதா' என்னும் வடசொல்லுக்குப் 'பாட்டு' என்பது பொருள்.

இந்நூல் முழுவதற்கும் பழையவுரை ஒன்றுளது. அஃது அரும்பதவுரை. அடியார்க்கு நல்லார் என்பவர் விரிவானவுரை எழுதியுள்ளார். அவ்வுரையினால் பண்டைத்தமிழின் இசை நாடகப் பகுதிகள் சில அறியப்படுகின்றன. அவ்வுரை நூல்முழுவதற்கும் இல்லாமை வருந்தத்தக்கது.

மதுரைக்காண்டத்தின் ஒரு பகுதி இங்குப் பாடமாகக் கொள்ளப்பட்டுளது.

கதைச்சுருக்கம்

சோழவளநாட்டில் காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்துவந்த மாசாத்துவான் என்னும் பெருங்குடி வாணிகனுக்கு மகனாகிய கோவலன் என்பான், கண்ணகி என்னும் நல்லாளோடு இல்வாழ்க்கை நடத்திவருங்காலத்தில், அவ்வூரில் ஆடல் பாடல்களாற் சிறப்புற்று விளங்கிய மாதவி என்னும் நாடக மகளை விரும்பி அவளோடுகூடி வாழ்ந்துவந்தான். அக்காலத்தில் ஒருகால் நிகழ்ந்த இந்திரவிழாவின் பொருட்டுக் கோவலனும் மாதவியும் கடற்கரைக்குச் சென்றனர். அங்கு மாதவி யாழ்வாசித்தபோது உண்டாகிய மனவேறுபாட்டால், கோவலன் அவளைவிடுத்துத் தனியே தன்மனை புகுந்தான். புகுந்தவன், தன் அரும்பொருளெல்லாம் இழந்தமையின் அவ்வூரில் வாழ மனமின்றித் தான் மதுரைக்குச்செல்ல எண்ணங்கொண்டதனைக் கண்ணகியிடங் கூறி, வைகறையாமத்தில் அவளையும் உடன்கொண்டு மதுரை நோக்கிச் செல்வானாயினன். வழியில், கவுந்தி என்னும் ஜைனமதத்தவமுதியாளைக் கண்டு அவளைத் துணைக்கொண்டு நடந்து மதுரையின் புறஞ்சேரியை அடைந்தான். அப்பொழுது அங்கு வந்த மாதரி என்னும் ஆயமகளைக் கவுந்தியடிகள் கண்டு, கோவலனையும் கண்ணகியையும் அவள்பால் அடைக்கலமாகத் தந்து பாதுகாத்து வரும்படி விடுத்தாள். அவளும் அவர்களை யுடன்கொண்டு தன்மனை புக்கு, அவர்களுணவிற்கு வேண்டும் பொருள்களைக் கொடுத்து உபசரித்தாள். அவர்களும் அடிசில்

சமைத்து அருந்தினர். பின்னர், கோவலன் கண்ணகியிடஞ் சிலம் பொன்று வாங்கி அதனை விற்றுவர வெளியே சென்றான். வழியில் சிறப்புடன் சென்ற பொற்கொல்லனைக் கண்டு, கோவலன் தன் சிலம்பினைக் காட்டி 'விலைக்குக் கொள்ளுதியோ?' என, அவனும் 'கொள்வல்' என்று கூறி, அவனை அங்கே நிறுத்தி, அரசன் பாற் சென்று, 'தேவியின் சிலம்பினைக் களவுசெய்த கள்வன் வந் துளான்' என்று கோவலன்மேற் குற்றமேற்றினன். அரசன், 'அஃதுண்மையாயின் அவனைக் கொன்று சிலம்பினைக் கொணர்க' என்று ஏவலருக்குக் கட்டளையிட, பொற்கொல்லன் ஏவலரை யுடன்கொண்டு சென்று கோவலனைக் காட்டிக் கூறினான். ஏவலருள் ஒருவன், பொற்கொல்லன் சொல்லை நம்பி, கோவலனை வெட்டி வீழ்த்தினான்.

அச்செய்தியை யறிந்த கண்ணகி அழுது, நகர்த்தெருவிற் புலம்பிக்கொண்டு சென்று அரசன்கோயிலைக் குறுகித், தன் வழக் கினை யுரைக்க எண்ணி, வாயிற்காவலனை நோக்கிக் கூறுவாள்.

சிலப்பதிகாரம்
வழக்குரைகாதை

வரி

1. வாயிலோயே — வாயிற்காவலனே.

2. அறை போகிய - அற்றுப்போன. பொறி அறு - புண்ணிய மற்ற.

3. இறைமுறை - அரசநீதி. பிழைத்தோன் - தவறினவன்.

4. இணை - இரண்டாகிய. இணைச்சிலம்பினுள் ஒன்றுஏந்திய கையள். அரி - உள்ளிடுபரல்.

5. கடையகத்தாள் - வாயிலினிடத்து இருக்கின்றாள்.

8. தென்னம்பொருப்பு - பொதியில்மலை.

9. செழிய - பாண்டிய.

10. படரா - செல்லாத. பஞ்சவ - பாண்டிய.

11. அடர்த்து - மேற்பட்டு. குருதி - இரத்தம். துணி - துண் டம்.

12. பிடர்த்தலைப் பீடம் - பிடர்த்தலையாகிய பீடம்; பிடர்த் தலை என்றது மயிடாசுரன்தலையை. மடக்கொடியாகிய கொற்றவை (13) என்க.

13. தடக்கை - நீண்டகை.

14. அறுவர்க்கு இளைய நங்கை - சத்தமாதர்களுக்குள் இளையவள்; பிடாரி. இறைவனை - சிவபெருமானை.

15. அணங்கு - பத்திரகாளி. சூர் - அச்சம்.

16. தாருகன் - தாருகாசுரன்.

17. உரம் - மார்பு.

13—17. இங்குச் சிறப்புவகையாற் கூறப்பட்ட பெயர்களெல்லாம் பொதுவாகக் காளியைக் குறிக்கும் என்ப.

18. செற்றனள் - முகக்கோட்டம் (விகாரம்) உடையள்; செயிர்த்தனள் - மனத்தில் கோபம் உடையள்.

19. பொன் தொழில் சிலம்பு - பொன்னாலானதும் தொழிற் சிறப்புள்ளதுமான சிலம்பு.

22. அவள் தருக - அவளை அழைத்து வருக.

23. வாயில் - வாசலில்; வாயிலோன் எனவுமாம்.

24. கோயில் - அரண்மனை. குறுகினள் - குறுகி, அணுகி; முற்றெச்சம். சென்றுழி - சென்றவிடத்து.

25. கண்ணை - கண்ணையுடையாய்.

26. யாரை, ஐ முன்னிலையை விளக்கியது.

27. தேரா - தெளியாத.

28. எள்ளறு - இகழ்தலில்லாத.

29. புள் - பறவை; புறா. புன்கண் - துன்பம். தீர்த்தோன், சிபி. சிபிச்சக்கரவர்த்தி தன்னையடைந்த புறவிற்காகத் தன் தசையை அரிந்து கொடுத்து அதன் துன்பத்தைத் தீர்த்தான் என்பது கதை.

30. வாயில் - அரண்மனைவாசல். மணி - ஆராய்ச்சிமணி. நடுங்க - ஒலிக்க.

31. கடைமணி, மணிக்கடை என மாற்றுக. மணிக்கடை - கண்மணியின் கடை. உகுநீர் - சிந்தியநீர்.

32. அரும்பெறற் புதல்வனை - பெறுதற்கரிய புதல்வனை. ஆழி - தேர்உருளை. மடித்தோன், மனுநீதிச் சோழன்.

33. பெயர் - புகழ்.

34. ஏசா - நிந்தனையில்லாத.

35. மகனை, ஐ அசை.

36. துரப்ப - செலுத்த.

38. பகர்தல் - விற்றல்.

41. கோறல் - கொல்லுதல்.

42. வெள்வேற்கொற்றம் - அரசநீதி. ஒள் இழை - ஒளி பொருந்திய ஆபரணத்தையுடைய கண்ணகி; அன்மொழித்தொகை

43. நற்றிறம் படரா - நன்னெறியில் செல்லாத.

44. மணி - மாணிக்கம்.

45. தேமொழி - தேன்போலும் இனிய மொழியினை யுடையாள்; உவமத்தொகையன்மொழி.

47. தருகென - கொண்டு வருக என.

48. மணி - மணியாகிய பரலையுடைய.

49. வாய்முதல் - வாயில்.

53. மன்பதை - குடிகள். தென்புலம் - பாண்டியநாடு.

54. என்முதல் - என்னைத்தொடங்கி.

56. குலைந்தனள் - குலைந்து; மனமலைந்து.

57. காட்டுவது - (கணவன் முறைசொல்லிப்)பிறரைக் காட்டுவது.

'கணவனை........இல்' என்பது, தந்தை தாய் முதலியோரை இழந்தார்க்கு அம்முறை சொல்லிப் பிறரைக் காட்டலாம். கணவனை இழந்தார்க்கு அவ்வாறு காட்டுதல் இயலாது என்னும் பொருளதாம்.

58. இணையடி - கண்ணகியின் இரண்டு பாதங்களை. மடமொழி, கோப்பெருந்தேவி; அன்மொழித் தொகை.

2. கம்பராமாயணம்

கம்பராமாயணம் என்பது கம்பரது ராமாயணம் என விரியும். இஃது ஆறும் வேற்றுமைச் செய்யுட்கிழமை. கம்பர் என்னும் உயர்திணைப் பெயரின் ஈற்றுமெய் கெட்டது.

ராமாயணம் என்பது முதனூலின் பெயர். கம்பர் தமது காப்பியத்திற்கு இட்ட பெயர் 'இராமாவதாரம்' என்பது. இஃது, 'இராமாவ தாரப்பேர்த், தொடை நிரம்பிய தோமறு மாக்கதை' என்பதனுல் அறியப்படும்.

ராமாயணம் என்பது ராம + அயநம் என்னும் இரண்டு வடசொற்களாலாகிய தொகைநிலைத் தொடர்மொழி. இவ்விரண்டு சொற்களும் தொடருமிடத்து, வடநூல் விதிப்படி, அயநம் என்பதிலுள்ள நகாரம் ணகாரமாக, ராமாயணம் என்ருயிற்று. அயநம் - அறிவிப்பது. ஆகவே, ராமாயணம் என்பது இராமனது சரித்திரத்தை யறிவிக்கும் நூல் என்னும் பொருளதாகும்.

ராமன் என்னுஞ் சொல், ரமிக்கச்செய்பவன் என்னும் பொருளுடையது. அஃதாவது, தன் திருமேனியழகினுலும் நற்குண நற்செய்கைகளாலும் எல்லாரையும் மகிழ்விப்பவன் என்பதாம். 'ஒருநாள் முகத்திலே விழித்தவர்களை வடிவழகு படுத்தும் பாடாயிற்று இது' என்பதனுல், குகன், இராமரது திருமேனியழகில் ஈடுபட்டது அறியலாகும்.

இராம சரித்திரத்தை வான்மீகிமுனிவர் முதலியோர் பலர் வடமொழியில் காவியமாகச் செய்தனர். அவருள் வான்மீகியார் செய்த ராமாயணத்தைப் பின்பற்றிக் கம்பநாடர் தமிழில் இராமாவதாரச் செய்யுளை இயற்றினர். ஆயினும், வான்மீகிராமாயணத்தில் இல்லாத கதைகளும், வேறு சில மாறுபாடுகளும் கம்பராமாயணத்தில் காணகின்றன.

கம்பநாடர்

கம்பநாடர் சோழநாட்டில் திருவழுந்தூரில் வாழ்ந்திருந்தவர். இவர் உவச்சகுலத்தவர் என்றும், இவர்தந்தையின் பெயர் ஆதித்தன் என்பது என்றும் கூறுவர். இவர் வைஷ்ணவ சமயத்-

தைச் சார்ந்தவர். இராம சரித்திரத்தில் தமக்கிருந்த பேராவலால் அதனை இவர் தமிழில் மொழிபெயர்ப்பாராயினர். இஃது, 'ஆசை பற்றி அறையலுற் றேன்மற்றிக், காசில் கொற்றத் திராமன் கதை யரோ' என்பதனுல் அறியலாகும்.

கம்பர், கவிச்சக்கரவர்த்தி என்னுஞ் சிறப்புப்பெயர் பெற்ற வர். 'கம்பநா டுடைய வள்ளல் கவிச்சக்ர வர்த்தி' என்பது காண்க. 'கல்வியிற் பெரியர் கம்பர்' என்னும் வழக்கினுல் இவ ரது கல்வியின்பெருமை புலனுகும். 'விருத்தம் என்னும் ஒண்பா வில் உயர்கம்பன்' என்பதனுல், இவர் விருத்தம் பாடுதலில் வல்ல வர் என்பது நன்கு விளங்கும்.

இராமாயணம்

இராமாயணம் என்னும் பெருங்காப்பியம் ஏழு காண்டங்களை யுடையது. காண்டம் ஏழாவன : 1. பாலகாண்டம், 2. அயோத் தியா காண்டம், 3. ஆரணிய காண்டம், 4. கிஷ்கிந்தா காண்டம், 5. சுந்தர காண்டம், 6. யுத்த காண்டம், 7. உத்தர காண்டம் என்பன. அவற்றுள் உத்தரகாண்டம் ஒன்றொழிய ஏனை ஆறு காண்டங்களையும் கம்பர் தமிழில் இயற்றினுர் ; உத்தரகாண் டத்தை வாணிதாதன் என்பவர் இயற்றி முடித்தார்.

கம்பநாடர், கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் இராமாயணத்தை அரங்கேற்றினுர் என்பது, 'எண்ணிய சகாத்தம் எண்ணூற் றேழின்மேல்....அரங் கேற்றி னுனே' என்னுஞ் செய்யு ளால் அறியப்படுகின்றது. ஆயினும் இவர், கி. பி. பதினொன்றும் நூற்றுண்டில் வாழ்ந்திருந்தார் என்று சிலர் கூறுவர்; வேறு சிலர் பன்னிரண்டாம் நூற்றுண்டில் வாழ்ந்தார் என்பர்.

அயோத்தியா காண்டம்

அயோத்தியில் நிகழ்ந்த வரலாற்றைக் கூறும் பகுதிக்கு அயோத்தியா காண்டம் என்று பெயர். இக்காண்டத்தில், தசர தர் ஸ்ரீராமருக்குப் பட்டங்கட்டுதற்காக ஆலோசனை செய்தது முதல், பரதன் ஸ்ரீராமர்முதலியோரைச் சித்திரகூடத்தில் கண்டு அயோத்திக்கு மீண்டுவந்ததுவரை நிகழ்ந்த வரலாறு கூறப்பட் டுளது. காண்டம் இந்நூலில் பெரும்பிரிவு; சிறுபிரிவிற்குப் பட லம் என்று பெயர்.

[கதைத் தொடர்ச்சி]

அயோத்திமாநகரில் தசரதர் என்னுஞ் சக்கரவர்த்தி வாழ்ந் திருந்தார். அவருக்குக் கோசலை, கைகேசி, சுமித்திரை என்பார் மூவர் தேவியர். கோசலை, ஸ்ரீராமரையும், கைகேசி பரதனையும், சுமித்திரை லக்ஷ்மணனையும் சத்துருக்கனையும் பயந்து இன்புற்றிருந் தனர். சில காலத்திற்குப்பின், விசுவாமித்திரர் தமது வேள்வி யைக் காக்கும்பொருட்டுத் தசரதரிடம் இராமரையும் லக்ஷ்மண னையும் பெற்று வனஞ்சென்று வேள்வி செய்து முடித்தார். பின்னர் அவர், அவ்விருவரையும் உடன்கொடுசென்று மிதிலையை யடைந்தார். அங்கு ஜனகன், தன்னிடம் இருந்த வில்லை இராமர் வளைத்ததனால் அவருக்குச் சீதையை மணஞ்செய்து கொடுத் த்தான். பின்பு, பரதன் முதலியோருக்கும் அங்கேயே மணம் நிகழ்ந்தது. சிலநாளாயினபின்னர், தசரதர் இராமர் முதலியோர் அயோத்திக்கு மீண்டு செல்லுகையில், பரசுராமன் இராமரை எதிர்த்து வந்தான். இராமர் அவனை வென்றார். அதனால் அனை வரும் மகிழ்வுடன் அயோத்தியை யடைந்தனர்.

பின்னர், பரதன் சத்துருக்கனோடு கேகயநாட்டுக்குச் சென்று அங்குச் சிலநாள் வாழ்ந்திருக்கலானான். அக்காலத்தில் தசரதர் இராமருக்கு முடிசூட்ட எண்ணி உறுதிசெய்தார். அச் செய்தியை அறிந்த மந்தரை என்பவள், தன் தலைவியாகிய கைகேசியினிடஞ் சென்று, அவளெண்ணத்தை மாற்றி, பரதன் நாடாளவும் இராமர் காடாளவுஞ் செய்யுமாறு சூழ்ச்சி செய்தாள். கைகேசி, தசரதரிடம் அவ்வாறே வரம் பெற்றுக்கொண்டாள். அதனால் தசரதர் உள்ளம் நொந்து உளைந்தார். அப்பொழுது, கைகேசி இராமரை அழைத்துவருமாறு தசரதர் கட்டளையிட்ட தாக ஆள் அனுப்பினாள். இராமரும் தந்தையைக் காணவந்தார். அவ்வளவில் கைகேயி இராமனை நோக்கி, 'பரதன் நாடாளவும், நீ பதினான்கு யாண்டுகள் காட்டில் வாழவும் உன் தந்தையார் கட் டளையிட்டிருக்கின்றார்' என்றாள். அச் சொல்லைக்கேட்ட இராமர் மகிழ்வுற்று அவளிடம் விடைபெற்றுச் சென்று, தம் தாயாரிடம் அச் செய்தியைக் கூறி அவரைத் தேற்றிவிட்டு, சினங்கொண்ட இலக்குவனை ஆற்றிச் சுமித்திரையிடமும் விடைகொண்டு, இலக் குவனோடும் சீதையோடும் காடுசென்றார். நகரமாந்தர் வருந்திப்

பின் சென்றனர். இரவில் அவர்கள் அறியாதவாறு, தேவியோடும் இளையவனோடும் இராமர் நடந்து சென்று கங்கையை அடைந்தார். அங்கு, குகனைத் துணைவனாகக்கொண்டு கங்கையைக் கடந்து சித்திரகூட மலையை அடைந்து, அவ்விடத்தில் தங்கியிருந்தார்.

இராமர் வனஞ்சென்றதை யறிந்த தசரதர் இரங்கி உயிர்நீத்தார். பின்னர், பரதனும் சத்துருக்கனும் கேகயநாட்டினின்று அயோத்திக்கு வந்து, நிகழ்ந்தவற்றை யறிந்து வருந்தினர். தந்தைக்கு ஈமக்கடன் முடித்தபின், பரதன் நாடாள உடன்படாமல் இராமரை அழைத்துவர எண்ணித் தாய்மாருடனும் வசிட்டர் முதலியோருடனும் புறப்பட்டான். நகரமாந்தரும் உடன் சென்றனர். பரதன் வழியில் குகனைக் கண்டு அவன் துணையால் கங்கையைக் கடந்து எல்லாரும் பின்வர, சித்திரகூடம் நோக்கிமுற்பட்டுச் சென்றான்.

கிளை கண்டு நீங்கு படலம்

1. குறிப்பின் - தன் கருத்தின்படி. எய்திய - அடைந்த. வேதனை - துன்பம். வேதனை மெலிகின்றாள் திருமகள் என்று மாற்றுக.

தசரதர் இராமனுக்கு முடிசூட்ட உறுதி செய்திருந்ததனால் 'எய்திய' என்றார். பிரிந்தனள், நீங்கினாள் என்பன முற்றெச்சம்.

2. சொல்லினான் - சொல்லையுடையவனாகிய பரதன். மறந்தனன் - (மெய்) மறந்து. தாதையை எதிர் கண்டென்ன வீழ்ந்தனன் என்று இயைக்க. தாதையை - தந்தையை.

பரதன், 'அறந்தனை நினைந்திலை....முறைமையை' என்று சொல்லிக்கொண்டே வந்தான் என்க.

3. ஒடுங்கினான் - ஒடுங்கினவனான பரதனுடைய. கண்டனன் - கண்டு. கண்ணன் - இராமன். அவன், பரதன். வழிந்து சோர நின்றனன் என்க.

4. அயா வுயிர்த்து - பெருமூச்சுவிட்டு. உயாவுற - வந்து சேர. புல்லினான் - தழுவினான். நிலயம் - இருப்பிடம். தயாமுதல் - தயையையுடைய முதல்வன்; கடவுள். தழுவி என்ன - தழுவினாற்போல.

தயாமுதல் அறத்தைத் தழுவினாற்போல இராமன் பரதனைத் தழுவினான் என்க. நிலயம் வடசொல். நிலையம் தமிழ்ச்சொல்.

5. புல்லினன் நின்று - தழுவி நின்று. அவன், பரதன். இனி 'புல்லினன்' என்பதற்குத் தழுவினவனாகிய இராமன் என்றும், 'நின்றவன்' என்பதற்கு நின்றவனாகிய பரதன் என்றும் பொருள் கூறலாம். வேடத்தை - தவவேடத்தை. உன்னினான் - நினைத்தான். அல்லல் - துன்பம். அழுங்கினை - வருந்தினாய். மல் உயர் தோளி னான் - மற்போரிற் சிறந்த தோள்களை யுடையவன்; தந்தை. மல், வலிமை எனவும் ஆம்.

6. அரியவன், இராமன். கரியவள் - (மனத்தில்) கருமை உடையவள்; கைகேயி; கருமை - களங்கம். மெய் நிறுவி - உண் மையை நிலைநிறுத்தி. உம்பரான் - மேலுலகத்தை உடையனா யினான்.

'போய்' என்னும் வினையெச்சம் 'உம்பரான்' என்னும் குறிப்புவினை கொண்டது. ஆயினான் என்னும் ஆக்கச்சொல் தொக்கது செய்யுள்விகாரம்.

7. அயில் - வேல். கறங்கு - காற்றாடி. வானின் உம்பரான் - வானுலகத்திற்கும் மேற்பட்ட பரமபதத்தை உடையவன்; இரா மன்.

'ஆய்' என்னுஞ் சினை வினை 'விழுந்தனன்' என்னும் முதல் வினை கொண்டது.

8. இறை - சிறிதும். உருமின் - இடியினால். நை - வருந்து கின்ற. அகம் - மனம்.

அயர்வுயிர்த்து என்பதை அயாவுயிர்த்து என்றும் கொள்ள லாம்.

9. சொல் - புகழ். நோன்பு - தவம். நோன்பின் துறை யோன், கலைக்கோட்டுமுனிவன். நல் - நன்மை. வேள்வி - புத்திர காமேஷ்டி. நவை - குற்றம். எற்பெற்று - என்னைப் பெற்று கொன் பெற்ற - அச்சத்தை உடைய. இனி 'கொல் பெற்ற' என்று பிரித்தலும் ஆம்.

10. தரியாது - பொறுக்க முடியாமல். ஊன் - தசை. தெவ் வர் - பகைவர்.

11. பன்னி - திரும்பத் திரும்பக் கூறி. குவவு - திரட்சி. கோளரி - சிங்கம். தடக்கை - நீண்ட கை.

12. அவலிப்பாய் அல்லை - கவலைப்படாதே. உய்திறம் - ஈடேறும் வகை. ஊங்கு - மிக்கது. வரன்முறை - மரபின் முறைப்படி. திருத்தி - நன்றாகச் செய்து. சேந்த - சிவந்த. கடன் - நீர்க்கடன்.

13. ஏந்தல், இராமன். ஏந்தி - தாங்கி. பொன் திணிந்தன சடை - பொன் இறுகினாற்போன்ற சடையையுடைய. புனிதன் - பரிசுத்தன்; வசிட்டர். நான்மறைப் புனிதன், சடைப் புனிதன் என்று தனித்தனியே கூட்டுக. செறி திரை - நெருங்கிய அலைகளையுடைய; வினைத்தொகை. செய்கென - செய்க என்று நியமிக்க; 'செய்கென' என்பதில் அகரம் தொக்கது. நெறி - முறைமை.

14. மறையவன், வசிட்டர். முக்கை நீர் - கையால் மூன்று தடவை எடுத்துவிட்ட தர்ப்பணநீர். ஒக்க - ஒருதன்மையாக. உணர்வு நல்குவான், இராமன்.

15. பிற உள யாவும் - மற்றுமுள்ள எல்லாக் கிரியைகளையும். ஆற்றி - செய்து. மானம் மந்திரத்தவர் - பெருமையை யுடைய மந்திரிகள். ஏகினன் - ஏகி. சானகி, தத்திதாந்த நாமம்.

16. தமியள் - தனியளாய். தையல், சீதா பிராட்டி. சாலை - பர்ணசாலை. கைகளின் - கைகளால். கால்மிசை வீழ்ந்து அரற்றினான் என்க.

17. வீரனை, பரதனை. நல் நெடும் கூந்தலை - நன்றாகிய நெடிய கூந்தலைஉடைய சீதாபிராட்டியை. நெடுங் கூந்தல், பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. நாயகன், தசரதன்.

18. துளங்கினாள் - நடுங்கினாள். துணைக்கண் - இரண்டுகண். கலுழி - கலங்கல்நீர். மண் - பூமிதேவி. செவிலி - வளர்க்குந் தாய். கிளவி - சொல். மண்ணெனும்....கையினள் என்பது தரைமேல் கைகளை ஊன்றினவளாய் என்பதாம்.

19. கல் நகு - (தனக்கு நிகர் ஆகாதென்று) மலையைச் சிரிக்கின்ற. மாற்றத்தால் - சொல்லால். அன்னம் - அன்னப் பறவை போன்ற சீதை. துயர்க்கடல் அடிவைத்தாள் என்றது, துன்பம்

அநுபவிக்கத் தொடங்கினாள் என்றபடி. இனி இராமனைப் பிரிதல், இலங்கையிற் சிறையிருத்தல் முதலான பல துன்பங்கள் வருதல் குறிப்பிக்கப்பட்டது.

20. நேர்ந்து - நேரே சென்று. அம் கை - அழகிய கைகளால். ஏந்தினர் - ஏந்தி ; தாங்கி. தாயரின் - தாய்மாரைப்போல. இன், ஐந்தனுருபு ஒப்புப்பொருளது. பன்னி, பத்நீ என்னும் வடசொல் லின் திரிபு. நாயகன், இராமபிரான். நாயகன் என்னும் உயர் திணைப் பெயரின் ஈற்று னகரம் திரிந்தது இரண்டாம் வேற்றுமை யால். நவையின் - குற்றத்தினின்று; ஐந்தாம் வேற்றுமை நீங்கற் பொருள். நவையின் நீங்கினர் முனிவர்தங் தருமப் பன்னியர் தாய ரின் ஏந்தினர், நீராட்டினர், துயரம் நீக்கினர், நாயகற் சேர்த்தினர் எனக் கூட்டுக.

21. தேன் தரும் - தேனை உடைய. தெரியல் - பூ மாலை. செம்மல் - தலைமைக்குணமுடைய. இருமை - இம்மை மறுமை. நோக்குறும் - மனத்தால் நோக்குகின்ற. தோன்றல், இராமன்.

22. எந்தை - எமக்குத் தந்தை. யாண்டையான் - எவ்விடத் தில் இருக்கின்றார்? வயங்கு - விளங்குகின்ற. சேந்த - சிவந்த. கண்ணநீர் சேவடிச் சிந்தி நின்றனன் என்க. முந்தையான் - முற் பட்டவன் ; விஷ்ணு ; ஈண்டு இராமபிரான்.

23. தலைப்பெய்து - கூடி. தழீஇ - (இராமனைத்) தழுவி. ஒய்வு இல்-நீங்குதல் இல்லாத. உரறல் - அலறல். அணங்கு அ(ன்) னார்களும் - தேவமாதரைப்போன்ற பெண்களும். தீ மெழுகின்- தீகின்ற மெழுகுபோல. தீதல், ஈண்டு உருகுதல். மெழுகின், இன் ஐந்தனுருபு ஒப்புப்பொருள்.

24. பெற்றி - பெருமையை யுடைய. பொன்னனார்கள் - திரு மகளை ஒத்தவர்கள் ; கோசலை முதலியோர். பூவை - நாகணவாய்ப் பறவை போன்ற சீதை ; உவமையாகுபெயர். இன்னல் வேலை - துன்பக் கடல். அழுந்துவார் - அழுந்துவாராயினர்.

25. மானம் - பெருமை. யாவரும் குறையும் சிந்தையார் கோனை எய்தினர் என இயைக்க. குறையும் சிந்தையார் - அழியும் மனத்தை யுடையராய். கோன், இராமன். பிறர், அமைச்சர் முதலியோர்.

26. நாகணைப் பள்ளி நீங்கினன், விஷ்ணு; இராமன். நாக அணை பள்ளி - சேஷ சயனமாகிய படுக்கை. நாக அணை என்பது நாகணை என்று தொக்கது. இடம்செய் - (தான் அவதரிக்க) இடமாகக் கொண்ட. தொல் - பழமை. தேரினன், சூரியன். சூரியன் மேல்கடலில் மறைந்தது, தன் குலத்தவனான தசரதனுக்கு நீர்க்கடன் ஆற்றப்போயினது போலும் என்று கற்பித்துக் கூறப்பட்டதனால், ஏதுத்தற்குறிப்பேற்ற அணி.

27. அரசவேலை - அரசர் கூட்டம்; உயர்திணை ஈறு விகாரமாயிற்று. வேலை என்னுங் கடலின் பெயர், கூட்டத்துக்கு உவமையாகுபெயராயிற்று. செம்மல், இராமன். (27) செம்மல் (28) கூறினன் என்று இயைக்க.

இதுவும் வருஞ் செய்யுளும் குளகம்.

28. வரதன் - தசரதன். ஆணையால் - (தந்தையின்) கட்டளையால். சரதம் - உண்மையாக. வையம் நின்னதே என்க. தாங்கலாய் - தரிக்காமல். பரிந்து - அன்போடு.

29. கைதொழா நின்று - கைதொழுதுகொண்டு. இனி கை தொழா - கை தொழுது; நின்று - நின்றுகொண்டு எனவுமாம். தோன்றலே, இராமனே. அறத்துளோர் நீ அன்றி யாவர் என்க. அதர் - (அற) நெறி. பின்றுவாய் கொல் - பின்னிடுவாயோ? கொல், வினாப் பொருளில் வந்துளது.

30. மனக்கு ஒன்றுதன - (கேட்போர்) மனத்துக்குப் பொருந்தாதனவாகிய; மனக்கு, அத்துச் சாரியை தொக்கது. வரத்தின் - வரங்களால். நிறுவி-நிறுத்தி. நேமியான் தனை - சக்கரவர்த்தியை; நேமி - சக்கரம். தனயன் - மகன். தவம் அடுப்பது எனக்கு ஒன்றுது என்க. ஒன்றுது என்பதில் து, தொக்கது. இனி, ஒன்று என்பதற்குத் தக்கதொன்றுகுமா எனவுமாம்.

31. நோவதாக - வருந்துவதாக; வருந்தும்படி. பாவகாரி - பாவம் செய்பவள்; பாவி. இது பாபகாரிணீ என்னும் வடசொல்லின் சிதைவு. ஓர்கிலேன் - நினைக்கின்றிலேன். யாவன் - எத்தன்மையன். ஏறுவேன் - ஈடேறுவேன்?

32. பிறந்து - (முதற்புதல்வனாகப்) பிறந்து. தொல்பதம் - பழைமையாய் வருகின்ற அரசபதவி. மறந்தும் - மறந்தாயினும்.

திறம்பி - மாறுபட்டு. அறம் வாளிற் கொன்று தின்றால் என என்க. அறம் கொன்று தின்றலாவது, அறத்தை முற்றும் கெடுத்தல். மறந்தும் அரசதாள்வெனோ என இயைக்க.

33. தொகை இல் - அளவு இல்லாத. இறைவன், தசரதன். வெஞ்சுரம் - கொடுங்காடு; சுரம் - கடத்தற்கரிய வழி எனினுமாம். புந்தியால் - அறிவோடு. வவ்வ - கவர்ந்துகொள்ள. பகைவனே - பகைவனோ. ஏகாரம் வினா. கொல் அசைநிலை. இறவு - சோருங் காலம்; வன்மை முதலியன கெடுங் காலம்.

34. உந்தை - உமது தந்தை. தாய், கைகேயி. எந்தை - எமது தலைவனே. சிந்தையாவதும் - எண்ணம் முழுவதும்.

தசரதன் செய்த தீமையாவது, மூத்த புதல்வனுக்கன்றி இளையவனுக்குப் பட்டங் கட்ட வரந் தந்தமை. 'உந்தை தீமை' என்றது, அத் தீமையை நீயே நீக்குதல் வேண்டும் என்பது வலியுறுத்தற்பொருட்டு.

35. சொற்ற - சொல்லிய. இற்றதோ - இத்தன்மையதோ. எண்ணுவான் - எண்ணினவனாய். நோக்கினான் - மனத்தில் ஆராய்ந்து. எண்ணினான் நோக்கினான், முற்றெச்சம். இனி, நோக்கினான் என்பதற்கு நோக்கினவன் (இராமன்) என்றும் பொருள் கூறலாம்.

36. முயலும் - முயலத்தக்க. அறையும் - சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற. சுருதி - வேதம். இறைவர் - அரசர். முறை, வாய்மை முதலியன அரசராணையால் நடைபெறுவன என்பதாம். இயைவ, பலவின்பாற் பெயர்.

37. பரவு கேள்வியும் - துதித்துக் கேட்டற்குரிய நூற்கேள்விகளும். பழுது - குற்றம்; குற்றமாவன ஐயமும் விபரீதமும். சீலம் - நல்லொழுக்கம். உரம் விலோய் - வலிய வில்லையுடைய பரதனே. குரவர் - பெரியோர்; குரவ: என்னும் வடசொல். கோடி - கொள்ளுதி; கொள் என்னும் பகுதி கோள் எனத் திரிந்தது; இ எதிர்கால விகுதி என்றும், ட் எழுத்துப்பேறு என்றும் கூறுவர்.

38. தேர்வு உற - தெளிவு உண்டாக. தெரிய - விளங்க. என்றிவர்கள் - என்ற இவர்கள். தம்பியை 'எந்தை' என்றது மரபுவழுவமைதி; 'ஐயா' என்பதுபோல.

39. மேய - பொருந்திய. நீ வரம் கொள - நீ (இப்பொழுது) வேண்டிக்கொள்ளுதலால். தவிர்தல் - (தந்தை ஏவலின்படி ஏற்றுக்கொண்ட செயலை) விட்டுவிடுதல். ஆய்வு அரும் - ஆராய்தற்கு அரிய. புலத்து - நூல்களின்.

40. வினையின் - (தாங்கள் செய்யும்) செயல்களால். இசை - புகழ். வேய்தலோ - போர்த்தலோ. நினையல் ஒவிடா - நினைப்பினின்றும் நீங்காத. புனைதலோ - சூட்டுவதோ.

41. இம்மை - இப்பிறப்பில். இவறி - உலோபம்செய்து. அம்மை - மறுமையில். கொம்மை - திரட்சி. குவை - குவியல். நிலத்து - இவ்வுலகத்தில்.

எந்தையார் இம்மை இவறிப் பொய்யுரைத்து என மாறுக. எந்தையார், ஆர் என்னும் பலர்பால் விகுதி உயர்வுப்பொருளில் ஒருமைக்கு வந்தது.

42. வரன் நில் - (கொடுத்த) வரத்திலே நிற்கின்ற. சொல் மரபினல் - சொல்லின் முறைமைப்படி. உடை - (அவர்க்கு) உடையதாகிய. உரனின் - வலிமையோடு, அறிவோடு. நீ பிறந்து - நீ கைகேயிக்குப் புதல்வனுகப் பிறந்ததனுல்.

'ஆள்க என்ன' என்னுஞ்சொல் 'மகுடஞ்சூடெனு' (43) என்பதனேடும், அது, பூண்டுவேண்டினன் (44) என்பதனேடும் முடியும்.

தசரதர் கைகேசியை மணம் புரியுஞ் சமயத்தில் 'கன்யா சுல்க' மாகத் தமது நாடு முழுவதும் அவளுக்குக் கொடுத்துவிட்டதனுல், அவள்வயிற்றிற் பிறந்த பரதனுக்கு அந்நாடு அவன் பிறந்தபோதே உரியதாயிற்று என்பது இச்செய்யுளின் கருத்து. இவ்வரலாறு வால்மீகி ராமாயணத்தில் விளக்கமாகக் கூறப்பட்டுளது. இச்செய்யுளுக்கு இவ்வாறு கூறுது வேறு பொருள் கூறுதலும் உண்டு.

43. முன்னர் - எனக்கு முன். பார், ஈண்டுக் கோசலநாடு. போந்து - வந்து.

44. வருந்தி வைக - வருந்தி இருக்க. உலம் - திரண்ட கல். உறுவ - நன்மை செய்பவற்றை. காத்தி - காப்பாய். காத்தி -

கா, பகுதி; இகரம் எதிர் காலம் காட்டும் விகுதி என்பர். பொலம் குலாவு - அழகு விளங்குகின்ற.

வையகமெல்லாம் வருந்த நீ உனக்குமட்டும் நன்மை தருப வற்றைச் செய்யலாகுமோ ? போந்து காப்பாயாக என்று வேண்டி னான்.

45. பசைந்த - அன்புள்ள. சிந்தை நீ - மனத்தையுடைய நீ. வசைக்கு அசைந்த - பழிக்கு அஞ்சிய. அன்று - (கைகேசிக்கு வரமளித்த) அந்நாள்.

46. உண்மை - உள்ளதாக, இருக்கிறதென்று. அதின் - அவ் வுண்மையில்நின்று. அதிற் றீர்தலன்றித் தீமை தான் வேறு அறையலாவதே? என இயைக்க. ஆய் - ஆராய்ந்த.

47. வைக - தங்கியிருக்க. தந்த - (தந்தையார்) அருளிய. அந்த நாள் - (யான் காட்டிலிருக்க வேண்டிய) பதினான்கு வரு டங்களும்.

48. இயைந்தது - உடன்பட்டது. ஏயது - ஏவியது. அயரல்- தளராதே. 'மன்னவன்........மறுக்க அஞ்சி' என்பது,

தாதை அப்பரி சுரைசெயத் தாமரைக் கண்ணன்
காத லுற்றிலன் இகழ்ந்திலன் கடனிதென் றுணர்ந்தும்
யாது கொற்றவ னேவிய ததுசெய லன்றோ
நீதி யெற்கென நினைந்துமப் பணிதலை நின்றான்

என்னுஞ் செய்யுளால் நன்கறியப்படும்.

49. ஒள்ளியோன், இராமன். 'உரைக்க லுற்ற பள்ளநீர் வெள்ள மன்ன பரதன்' என்றது, இராமன் கூறியவற்றிற்குப் பரதன் விரைவில் மறுமொழி கூறத் தொடங்கினான் என்பதை உணர்த்தும். இனி, 'நற்குணங்கள் தங்குங் கடல்போன்ற பரதன்' எனலுமாம். 'தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும், பள்ள மெனுந் தகையானைப் பரதனெனும் பெயரானை' என்றது காண்க. வள்ளியோய் என்றது இராமனை. கேட்டி (கேள் + த் + இ) - கேட்பாய். 'சிந்தை நோக்கிக் கேட்டி' என இயைக்க. இனி 'நோக்கி' என்பதைக் 'கூறும்' என்பதனோடும் முடிக்கலாம்.

50. இதம் இயல் - நன்மையான செயல்கள். மதம் இயல் - மதம் பொருந்திய. பதவிய - பதவியாக உள்ள. பயக்க - கொடுக்க.

விஞ்சைகள் உதவிய ஒருவன் என்க. விஞ்சைகள் உதவியவன், குரு.

> 'அரசன் உவாத்தியான் தாய்தந்தை தம்முன்
> நிகரில் குரவர் இவர்'

என்பதனால், குரவர் ஐவர் இவர் என்பது அறியப்படும். அவருள் குருவே சிறந்தவர் என்பதாம்.

51. உதவிற்று - உதவியது. உண்மையால் - உளதாதலால். அன்று எனாது - தக்கதன்று என்று மறுக்காமல். அளி - இரட்சிப்பாய்.

52. குவிந்த தாமரை சீறிய - குவிந்த தாமரையைத் தனக்கு ஒப்பாகாதென்று சினந்த. அஃதாவது இராமனது குவிந்த கைகள், குவிந்த தாமரையினும் பொலிவுற்றிருந்தன என்பதாம். செங்கணான், இராமன். ஆறிய - அடங்கிய.

53. மலருளான் - பிரமனுடைய. ஏன்றபின் - ஏற்றுக் கொண்டபின். ஒருவன் ஒன்றனைச் செய்வேன் என்று ஏற்றுக் கொண்டபின்பு அவனை யாவராயினும் தடுத்தல் முறையாகாது என்பது கருத்து.

'சிறுவ' என்றதனால் வசிட்டர் ஆராய்ந்து கூறிற்றிலர் என்பது குறிப்பிக்கப்பட்டது என்பர்.

54. பணித்து - கட்டளையிட்டு. உவந்தன - மகிழ்ந்த செயல்களும். இனி, 'பணித்து வந்தன' என்றுகொண்டு பொருள் கூறுதலு முண்டு. ஏய - ஏவிய செயல்களும் ஆகிய. புலையனின் - புலையனைப்பார்க்கிலும். செய்கை - செய்யத்தக்கசெயல்களை.

தந்தை தாயர் ஏவியவற்றை மேற்கொண்டு செய்யாதவனைப் பார்க்கிலும் நாய் உயர்ந்ததாகும் என்பதாம். பெற்றோர் பணியை மேற்கொள்ளாதவனைப் புலையன் என்று இழித்துக்கூறினார்.

55. முன்னுற - முற்பட. என சென்னியில் - என்னுடைய தலைமேல். என என்பதில் அகரம் ஆறனுருபு ஒருமைக்கு வந்தது. அது - அப்பணியை. ஈங்கு - இப்பொழுது. செய்வதை - செய்ய வேண்டுவதை. 'இனி செய்வது என்? எனக்கு உரைசெய்' என இயைத்து, செய்வதை என்பதில் உள்ள ஐகாரத்தைச் சாரியை என்றலும் பொருந்தும்.

56. அனையதேல் - அப்படியானுல். அஃதாவது இராமர் காட்டுக்குப் போவதே உறுதியானுல். பனிபடர் காடு - பனிமிக்க காடு. உடன் - இராமனுடன். படர்தல் - செல்லுதல்.

57. அவ்வழி - அச்சமயத்தில். செவ்வழித்து அன்று - நல்ல வழியில் முடிவதாகாது. கவ்வையர் - துன்பமுற்றவர்களாய். கழறல் - சொல்லுதல்.

58. ஏத்த அரும் - புகழ்தற்கு அரிதாகிய. ஏத்தரும் என் பதில் அகரம் தொக்கது. போத்தரும்-போவான்; தகரம் எதுகை நோக்கி விரிந்தது. புரக்கும் பூட்சியான் - பாதுகாத்தலை மேற் கொண்டவனுய். பூட்சி, பூண் பகுதி. ஆத்த - யாத்த ; அள விட்ட. இவை கடமை - இவை நீங்கள் இருவீரும் செய்ய வேண் டிய கடமை.

59. இரந்தனன் - வேண்டிக்கொண்டேன். அளித்தி-காப்பா யாக. அவன் - அப்பரதனது.

மறுக்கற் பாலதன் றியான் என்பதில், றி குற்றியலிகரம் அலகு பெற்றிலது.

60. நாம நீர் - அச்சத்தைத் தருகின்ற நீர்; அகழி. கூர் எரி - மிக்க தீயில். சாம் இது - சாவதாகிய இது.

61. அன்பினன் - அன்புடையவனுய். ஆகென்றுன், அகரம் தொக்கது. தன்புகழ் தன்னினும் பெரிய தன்மையான் என்பது, புகழினும் மிக்க குணத்தையுடையவன் என்றபடி.

62. இன்மையின் - இல்லாததனுல். திருவடித்தலம் - திருவடி நிலை ; பாதுகை. தந்தீக - தந்தருள்க. எம்மையும் - எல்லா உலக இன்பங்களையும். இரண்டும் - இரண்டு பாதுகைகளையும்; எண்ணுகு பெயர்.

63. படித்தலம் - பூமியில். பொடித்தலம் என்பதை தலம் பொடி என மாற்றுக. தலம் பொடி - பூமியில் உள்ள புழுதி. பொலம் - அழகு.

3. வில்லிபுத்தூராழ்வார் பாரதம்

பாரதம், இதிகாசங்கள் இரண்டனுள் ஒன்று. வடமொழியில் இதனை இயற்றியவர் வேதவியாசர். தமிழ்மொழியில், கடைச் சங்க காலத்தை யடுத்திருந்த பெருந்தேவனார் என்பவர் முதன் முதல் பாரதத்தை இயற்றினார். அதனால் அவர், பாரதம் பாடிய பெருந்தேவனார் எனப்பட்டார். அவர்பாரதத்தில் சில செய்யுட்கள் பழைய உரையாசிரியர்களால் எடுத்தாளப்பட்டுள்ளன. அவையே யன்றி நூல் முழுதும் கிடைத்திலது. அதன்பின்னர் எட்டாம் நூற்றுண்டில் நந்திவர்மன் காலத்திலிருந்த பெருந்தேவனார் என்னும் புலவரொருவர் வெண்பா முதலிய பாக்களும் உரையும் விரவ, பாரதமொன்று இயற்றினார். அது 'பாரதவெண்பா' எனப் படும். அதிற் சில பகுதிகளே இப்பொழுது கிடைக்கின்றன. பின்னர், வில்லிபுத்தூராழ்வார், அகஸ்தியபட்டர்செய்த பால பாரதத்தை முதனூலாகக்கொண்டு பாரதத்தின் முதல் பத்துப்பருவங்களை இயற்றினார். மற்றைப் பருவங்களை அரங்கநாத கவிராயர் இயற்றி முற்றுவித்தார். அதன்பின்னர் நல்லாப்பிள்ளை என்பவர் வில்லிபுத்தூராழ்வார் கூறாதுவிட்ட கதைகளைச் சேர்த்தும், சுருக்கிக் கூறியதை விரித்தும், இடையிடையே செய்யுட்களைப்பாடி வில்லியின் செய்யுளோடு சேர்த்தும் பாரதம் முழுவதும் விரிவாக இயற்றினார்.

வில்லிபுத்தூராழ்வார்

வில்லிபுத்தூராழ்வார் என்பது ஸ்ரீ வில்லிபுத்தூரில் பிறந்த ஆழ்வார் (பெரியாழ்வார்) என்று பொருள்படும். அப்பெயர் இவர்க்கு இயற்பெயராய் வைக்கப்பட்டது. நம் புலவராகிய வில்லிபுத்தூராழ்வார் திருமுனைப்பாடி நாட்டில் சனியூரில் வாழ்ந்த வீரராகவன் என்னும் வேதியர்க்குப் புதல்வர். இவர் வடமொழியும் தென்மொழியும் நன்கு கற்றவர்; ஸ்ரீ வைஷ்ணவ சமயத்தைச் சார்ந்தவர். இது சருக்கங்களின் முதலில் திருமாலைத் துதித்திருத்தலான் அறியப்படும். ஆயினும், பிறசமயத்துக் கடவுளரையும் புகழ்ந்து கூறும் இயல்பினர். வக்கபாகை என்னும் ஊரில் ஏறக்குறைய 450 வருடங்கட்குமுன் அரசு செலுத்திய வரபதியாட் கொண்டான் என்னுங் கொங்கர் கோமான் வேண்டுகோட்படி இவர் இவ்விதிகாசத்தைத் தமிழில் இயற்றினார். இவர் செய்யுட்கள் சந்த நயம் உடையன. செய்யுட்களில் வடசொற்கள் மிகப்பயின்று

வந்துள்ளன. சில இடங்களில் வடமொழிநடையில் வந்த சொற்களும் (மந்த்ரம் என்பது போல்வன) காணப்படுகின்றன.

பாரதம்

பாரதம் - பரதன் வமிசத்தில் பிறந்தோரது சரித்திரத்தைக் கூறும் நூல். இது வடமொழித் தத்திதாந்த நாமம். பாரதம் பதினெட்டுப் பருவங்களை யுடையது. அவற்றுள், மூன்றும் பருவமாகிய ஆரணிய பருவத்தின் ஒருபகுதி ஈண்டுப் பாடமாக வைக்கப்பட்டுளது.

[கதைத் தொடர்ச்சி]

அத்தினபுரியில் அரசு செலுத்திய சந்திரவமிசத்தரசர் பரம்பரையில், திருதராஷ்டிரன், பாண்டு, விதுரன் என்னுஞ் சகோதரர் மூவர் தோன்றி வாழ்ந்துவந்தனர். அவர்களுள் திருதராஷ்டிரனுக்குத் துரியோதனன் முதலிய நூற்றுவர்புதல்வரும்,பாண்டுவிற்குத் தருமபுத்திரர் முதலிய ஐவர்புதல்வரும் தோன்றினர். அவர்கள் இருதிறத்தாருக்கும் இளமைமுதலே பகைமை வளர்வதாயிற்று.

பாண்டு இறந்துபோனபின், அவன்புதல்வர் ஐவரும் இந்திரப்பிரத்தம் என்னும் நகரில் இசையுடன் வாழ்ந்திருக்குங்காலத்தில், துரியோதனதியர், அவர்களைக் கெடுக்க எண்ணித் தம் நகருக்கு (அத்தினபுரிக்கு) வருவித்து, வஞ்சகச் சூதாட்டத்தால் அவர்கள்நாடுமுழுவதுங் கவர்ந்தனர். பின்பு துரியோதனன், பாண்டவர்கள் பன்னீராண்டு வனவாசஞ் செய்து ஓராண்டு ஒரு நகரில் கரந்துறைந்து வருவார்களாயின், அவர்கள்நாட்டை அளித்தல் கூடும் என்றான். அதனால் பாண்டவர் வனவாசஞ் செய்யலாயினர். அவர்கள் பல வனங்களில் வாழ்ந்து பல இன்னல்களை யடைந்து, இறுதியில் விண்டுசிந்தன் என்னும் முனிவன் தவஞ்செய்யும் வனத்தில் வதிந்துவந்தனர்.

அக்காலத்தில் துரியோதனன், 'இப்பொழுதே பாண்டவர்களை அழித்துவிடல்வேண்டும்' என்று எண்ணி, காளமாமுனி என்பவரை வருவித்து, அவரை வணங்கித் தன் எண்ணத்தைக் கூறினான். அவரும் இறுதியில் உடன்பட்டு வேள்வியொன்றனைச் செய்தார். அதிலிருந்து பூதம் ஒன்று எழுந்தது.

[இச்சருக்கத்துக் கதை வியாசபாரதத்தோடு பெரிதும் மாறுபட்டுள்ளது.]

நச்சுப் பொய்கைச் சருக்கம்

1. ஓமம் - வேள்வி. இவன், காளமாமுனி. வனசரிதர் - காட்டில் திரிபவராகிய. முப்பால் - அறம் பொருள் இன்பம். முதற்பாலாய் - அறமாய். மும்மைப் புவனம் - மூன்றுலகம்; மும்மை என்பது ஈண்டு எண்ணின்மேல் நின்றது, 'தெரிமாண் தமிழ் மும்மை' என்னுமிடத்திற்போல. அறக்கடவுள்-எமதருமன். எண்ணம் - துரியோதனனது எண்ணத்தினின்றும்.

துரியோதனன் காளமாமுனியால் இவ் வேள்வி செய்த வரலாறு வியாஸபாரதத்தில் இல்லை.

2. தன் மைந்தன், தரும புத்திரன். அசினம் - மான்தோல். வில் மைந்தர் - வில் வீரர். விசைத்து - விசைகொண்டு. அகல் - அகன்ற. வான் தொல் மைந்தன் - ஆகாயத்தின் பழமையான புதல்வன்; காற்று. காற்று ஆகாயத்தினின்று தோன்றிற்று என்று வேதம் கூறுமாகலின், காற்றினை 'ஆகாயத்தின் புதல்வன்' என்றார். உழை - மான்.

எமன் மானாக வந்து முனிமைந்தனுடைய அரணி முதலியவற்றைக் கொண்டு சென்றான் என்று வியாஸ பாரதம் கூறும்.

3. கலைத்தோலை - மான்றோலை. வானிடையில் - நெடுந்தூரத்தில். பொறைவாய் - மலையிடத்தில். நறை - தேன். தொடையல் - மாலை. அறன் - எமதருமன். இனி 'தொடையலவன்' எனக் கொண்டு பூமாலை உடையவன் (எம தருமன்) எனலுமாம். மகன் - தருமபுத்திரன். துறைவாய் - (விற்) கூறுபாடு வாய்த்தலையுடைய. சிலை - வில். அதனை - மான்றோல் கவர்ந்த மானை.

சிறுவன் அபயமெனப் புகுந்து புலம்புதலும் சிலையோடு அம்பேந்தித் தொடர்ந்தார் என்க.

4. ஆசுகம் - அம்பு. முரண்-வலிமை. தகைப்பட்டு - தடுக்கப்பட்டு.

5. கான் - காடு. தலை தெரியா - இடந் தெரியாத. பானீயம் - குடித்தற்குரியது; நீர். சூழ்வர - சூழ. எல்லாம் ஆனேன் - எல்லாப் பொருள்களுமாய் இருப்பவன்; எமதருமன்.

யான் நீ அவன் என்றது தன்மை முதலிய மூன்றிடத்துப் பொருள்களையுங்குறித்தது. இவ்வரலாறு வியாஸபாரதத்தில் இல்லை.

6. தாலு - நாக்கு. தாகத்து - தாகத்தினால். எரியுறு கானம்- தீப்பட்டு எரிகின்ற காடு. கானம் போல்வான், தருமபுத்திரன். 'எரி....போல்வான்' என்றது மிக்க வெப்பமடைந்தான் என்றதைக் குறிக்கும். இளவல் - சகதேவன். மருஅரும் - (ஈண்டுக்) கிடைத் தற்கரிய.

7. அடவி - காடு. எக்கணும் - எவ்விடத்தும். என்று - சூரி யன். காணு - கண்டு. புக்கனன் - புக்கு; முற்றெச்சம்.

எ + கண் = எக்கண் - 'எகரவினா....பிறவரின் அவையும்' என் பது விதி.

8. அறிவுரு து - (தருமன்) அறிந்துகொள்ளாமல். அழுங்கி னன் - வருந்தினவனாகிய தருமபுத்திரன். அப்பரிசு - அத்தன்மை. படை - ஆயுதம்.

9. இறைவன் - தலைவனாகிய தருமபுத்திரன். இனைந்து - வருந்தி.

10. அவனை, தருமபுத்திரனை. ஈமம் - மயானம். அங்கு - நச்சுப் பொய்கையுள்ள அவ்விடம். எய்தி - அடைந்து. தடம் - பொய்கை. ஆம் - நீர்; இனி (குடித்தற்கு) ஆகும் என்றும் கூறலாம். ஆலம் - விஷம்.

11. குசை - கடிவாளம். புரவி - குதிரை. குரக்குப் பதாகை- குரங்குக் கொடி; அனுமக்கொடி. பொற்சயிலம் - பொன்மலை; மேரு. ஆண்டகை - வீரனுக்குரிய தகுதிப்பாடு. நாமம் - பெயர். சிலை - வில்.

12. சிறுவன், சகதேவன். அந்தோ, இரக்கச் சொல். இது தமிழ்ச்சொல் என்றே தொல்காப்பியத்தால் தெரிகின்றது. எற்றுணை = என் + துணை. என்னும் - என்பான். முற்றுணைவன் - அண்ணன்; தருமபுத்திரன். முடிந்திடும் - இறந்து விடுவான். மொழிய - (இச் செய்தியை அவரிடத்துச்) சொல்ல.

என்னும், முடிந்திடும் என்பன செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று, ஆண்பாற்கண் வந்தன.

13. முரசு உயர்த்தோன், தருமபுத்திரன். நச்சுத்தோயம் - நச்சுத்தண்ணீர்; விஷஜலம். என்று-என்று நினைத்து. பணியுடன் - ஏவலால். மணல் ஏட்டில் - மணலாகிய ஏட்டில். துய்த்தான் - உண்டான்.

14. ஆருயிர் - அருமையாகிய உயிர், (உடலில்) நிறைந்த உயிர். மாருதி - வீமன்; வாயுவின் குமாரன் என்பது பொருள். ஒருவன் - ஒப்பில்லாதவனாகிய தருமபுத்திரன். ஒருவன் - தனியன்.

15. கட்புலன் - பிரத்தியட்சம். வெட்புலம் - வெளியான இடம். விஞ்சி - மிகுந்து. உட்புலன் - அறிவு. உயங்கி - தளர்ந்து. நட்பு உலந்தவரால் - சிநேகம் விட்டவரால்; துரியோதனாதியர் களால். நண்ணினான், தரும புத்திரன்.

16. அவண் - அவ்விடத்தில். அம்முனி, காளமாமுனி.

17. இமைப்பில் - இமைப்பளவில். துன்றிடா - சேர்ந்து. வைகும் - தங்கி யிருக்கின்ற. சூழல் - இடம். சென்றிடா-சென்று. ஒன்றாய் - உயிரொன்றாய். கொன்றிடா - கொன்றிட்டு. கேளா - கேட்டு. இது குளகம்.

18. ஐம்பெரும் பூதம் - நிலம் நீர் தீ காற்று ஆகாயம். இலக்கு - குறி; இலட்சியம். எம்பிரான் - எம்பிரானே; அண்மை விளி; 'அண்மையின் இயல்பும்' என்றதனால் இயல்பாய் நின்றது.

19. களைகுவான் - களைய; வான் ஈற்று எதிர்கால வினை யெச்சம். மோட்டுரு - பெரிய உரு. எயிறு - பல். தோள்துணை - இரண்டு தோளை. புடைகொண்டு - தட்டிக் கொண்டு. சூறை - சுழல் காற்று. வீழ்த்தி, வீழ்த்து பிறவினைப் பகுதி. வாழ்க்கையான் - தருமபுத்திரன்.

20. அந்தணன் - காளமாமுனி. அறன் - எமதருமன். விஞ்சைமாக்களின் - வித்யாதரரைப்போல.

21. யாண்டும் - எவ்விடத்தும். துப்புஇலா - (தனக்குச்) சரி இல்லாத. நிருபர் - அரசர்; மனிதரைக்காப்பவர் என்பதுபொருள். காணா - கண்டு.

22. பச்செனும் புனலால் - குளிர்ந்ததாகிய நீரால். பங்கயம் - தாமரை; பங்கஜம் என்பதன் திரிபு. இச்சுனை - இந்தச் சுனைநீர்; சுனை, ஆகுபெயர். நிட்டூரம் - கொடுமை.

23. காவலன், துரியோதனன். நாவலன் - நாக்கு வன்மை யுடையவன்; வேதபாராயணம் செய்தவன் ஆதலின் நாவலன் என்று பூதம் கூறிற்று. மேவலர் - பகைவர். வீந்தனர் - இறந்த னர். இது குளகம்.

24. ஞாலம் - பூமி. நசையின் - விருப்பத்தால். இல்லா நயனி - இல்லாத கண்ணையுடையவன்; கண்ணில்லாதவன்; திருத ராஷ்டிரன். இது வடமொழி நடை. சில் நீர் - சிறிது நீர். கொல் வான் - கொல்ல.

25. பொடிக்கும் - தோன்றிய. மூவிலைச்சூலம் - மூன்று இலை வடிவமுள்ள சூலம். முனி - காளமாமுனி. துணிந்து - துணிபட்டு; துண்டாகி. பழுது - குற்றம். இவனை, முனியை. எறிந்தது - வீசி எறிந்தது.

26. உயங்கிய - வருந்திய. கொடியோன் - கொடியையுடையவன். வெம்முரசக் கொடியோன் என்க. மா சினை - பெரிய கிளை. மகீருகம் - மரம்; நிலத்திலுண்டாயது. உயிர் - உயிர்ப்பை. நாச் சுவைப்படு - நாவினுக்குச் சுவையைத் தருகின்ற. ஞான மந்திரம் - அஷ்டாக்ஷரம். நவிலா - நவின்று; பலகாற் சொல்லி.

27. பயந்த - பெற்ற. வீட்டி - அழித்து.

28. அறன் - எமதருமன். சுவடு - அடையாளம். வீழ் - வீழ்ந்த.

29. ஊறு - இடையூறு, புண் முதலியவை. உடற்றினர் - பொருதழித்தவர். பேறு - நலன். போலும் என்பது அசைநிலை.

30. அண்ட கோளகை - அண்டத்தின் மேல்வட்டம். ஆத பத்திரத்தால் - குடையினால்; ஆதபத்திரம் = வெயிலைக் கெடுப்பது. ஈரொன்பது மண்டலம் - பதினெண் பூமி. 'சிங்களம் சீனகம்' என்னுஞ் செய்யுளானறிக. வல்லான், தருமபுத்திரன். சண்டம் - உக்கிரம். அறல் - நீர். கண்டான் - அறிந்தான்.

31. வெஞ்சமம் - கடும் போர். அருள்இல் - இரக்கமில்லாத. வஞ்சகன், துரியோதனன். நேர்ந்தான் - அடைந்தான்.

32. நல்வரை - உத்தம இரேகை. அசரீரி - சரீரமில்லாதது; ஆகாயத்தில் உண்டாகும் ஒலி. தடம் - பொய்கை. கருதேல் - எண்ணாதே; எதிர்மறை ஏவல் வினை. விருந்தர் - புதியராய் வந்தவர்.

33. புரந்திடும் - பாதுகாக்கின்ற. இன்று - இப்பொழுது. 'இன்று பெருந்தாகம் விஞ்சிடினும் என்னையோ என' என்று மாற்றுக.

34. அருவம் - உருவமில்லாதது. மாற்றம் - வார்த்தை. பொருவிலா - ஒப்பில்லாத. புகலுவ - சொல்லுவனவற்றை. புகறி = புகல்தி - சொல்லுவாய்; இ, எதிர்காலவிகுதி என்பர்.

35. எண் - மதிப்பு. மல்லல் - வளம். மாலே - பூமாலே. சாதி - பிச்சிப்பூ. புரி - செய்கின்ற; ஒழுகுகின்ற. நடை - ஒழுக்கம்.

36. முனிகுலம் - முனிவர் கூட்டம். நனே - பூவின் அரும்பு. அரண் - பாதுகாவல். குதலேயர் - குதலேச்சொல் பேசுங் குழந்தைகள்.

'குழலினிது........கேளா தவர்' என்னுந் திருக்குறள் ஈண்டு அறிதற்பாலது.

37. இசை - புகழ். அனேத்தினும் அற்பமாவது ஏது என மாற்றுக. ஏற்றல் - இரந்து பெற்றுக்கொள்ளுதல். சிற்பம் ஆம் - அருமையாகிய. சிறுவன், தருமபுத்திரன்; தந்தையோடு பேசுதலின் 'சிறுவன்' எனப்பட்டான்.

'கற்க கசடறக் கற்பவை' என்பது அறியத்தக்கது.

38. கண்ணினுக்கு இலக்காகி - பிரத்தியட்சமாகி. பொலம் சிலம்பு - மேருமலே. வெவ் வயின் - வெப்பமான காட்டினிடத்தில். விரகு - உபாயம்.

39. மறம் - வீரம். நும்பியர் - நின் தம்பியர்.

இச்செய்யுள் குளகம்

40. உச்சம் - மிகுதியான. மறை - மந்திரம். எண்ணி - நினேத்து.

41. தாதை - தந்தை; எமதருமன். சுதன் - மகன்; தருமபுத்திரன். ஏதம் - துன்பம். இளேய தம்பியை - நகுலனே. இது வியாஸ பாரதத்தால் அறியப்பட்டது; சகதேவனேக் குறிக்கும் என்றலும் உண்டு. ஊதை - மூச்சு. விரதவாய்மையான் - வாய்மையை விரதமாக உடையவன்; தருமபுத்திரன்.

42. வாயுவின் மகன், வீமன். தேவர்கோ மகன், விசயன். மண்டு - மிகுகின்ற. அழல் விடத்தினுல் - கொதிக்கின்ற விஷத்தினுல். மடிய - சாவ. மருத்து அண்டர் - மருத்துக்கள் என்னுந் தேவர்கள். இளவலே - தம்பியை, நகுலனே; இளேயவனே என்று பொருள் கூறிச் சகதேவன் என்பர்.

43. குத்திரம் - க்ஷூத்ரம்; இழிவு. 'குந்திக் கியானொரு' என்பதில் கி குற்றியலிகரம். உளன் என - இருக்கிறான் என்று சொல்லும்படி. புரிந்து - விரும்பி.

44. மன்றல் - வாசனை. அம் - அழகிய. தொடை - மாலை. அமர் - போர். எஃகம் - ஈட்டி, எறியும் ஆயுதம். யாவும் - (கேட்ட வரங்கள்) எல்லாம். கேட்ட வரங்களை எல்லாம் நல்கினான் என்பது வியாஸபாரதத்தில் உளது.

45. அம்பகம் - கண். அடவி - காடு. ரைவதவனம் என்பது வியாஸபாரதத்தால் தெரிகிறது.

4. பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடற்புராணம்

திருவிளையாடற் புராணம், பரஞ்சோதி முனிவரால் செய்யப் பட்டது. இதற்கு முதனூல் 'ஹாலாஸ்ய மாஹாத்ம்யம்' என்னும் வடமொழிப் புராணம். வடமொழிப் புராணத்தின் பொருள்களைத் தமிழ்மட்டுமே அறிந்தவர் அறிதல் இயலாதாகலின், அவரும் அறிதற்பொருட்டுத் தமிழில் இயற்றித் தருமாறு பெரியோர் பலர் வேண்டிக்கொள்ளப் பரஞ்சோதியார் அவ்வாறே செய்தருளினர். இது, பாயிரச் செய்யுட்களால் தெரியவருகின்றது. திருவிளை யாடற் செய்திகளைக் கூறும் வேறு புராணங்களும் தமிழில் உள் ளன. அவை, திருவாலவாயுடையார் திருவிளையாடல், கடம்ப வனபுராணம், சுந்தரபாண்டியம் என்பன.

பரஞ்சோதிமுனிவர் தாமியற்றிய திருவிளையாடற் புரா ணத்தை மதுரையில் சொக்கநாதர்கோயிலில் வைத்து அரங் கேற்றினார். இஃது, 'அறுகாற்பீ டியர்முடியார் சொக்கேசர் சந்நிதி யில் அமரர் சூழும், அறுகாற்பீ டத்திருந்து பரஞ்சோதி முனிவ னரங் கேற்றினனே' என்பதனால் அறியப்படும்.

பரஞ்சோதி முனிவர் வேளாண் குலத்தினர்; சிவபக்தி மிக்கவர்; சொல்நயம் பொருள்நயம் அமையச் செய்யுட் செய்யுந் திறஞ் சிறந்தவர். பிற்காலத்துச் செய்யுட்களுள் இவர்செய்யுட் கள் தலைசிறந்து விளங்குவன. பரஞ்சோதியார் இற்றைக்கு முந்நூறு யாண்டுகட்குமுன் வாழ்ந்தனர் என்பர்.

திருவிளையாடற்புராணம், மதுரையில் எழுந்தருளியிருக்குஞ் சோமசுந்தரக்கடவுள் புரிந்தருளிய 64 திருவிளையாடல்களைக் கூறுவது. இப்புராணம் - மதுரைக்காண்டம், கூடற்காண்டம், திருவாலவாய்க்காண்டம் என்னும் மூன்று காண்டங்களை யுடையது. இங்குப் பாடமாகக் குறிக்கப்பட்டுள்ள 'விறகு விற்ற படலம்' என்பது, இரண்டாங்காண்டமாகிய கூடற்காண்டத்தில் உளது. இத்திருவிளையாடல், இப்புராணத்தில் 41 - ஆம் திருவிளையாடலாக அமைந்துளது. ஆயின், 'திருவாலவாயுடையார் திருவிளையாட'லில், இது சாதாரிபாடின திருவிளையாடல் என்னும் பெயருடன் 54-ஆம் திருவிளையாடலாகக் காண்கின்றது.

விறகு விற்ற படலம்

1. ஓச்சி - செலுத்தி. பொன் தலம் காவலானில் - தேவேந்திரனைப்போல; பொன்தலம்-தேவலோகம். விறல்-வெற்றிபெற்ற. விஞ்சை - வித்தை; வித்தையை உடையோர்க்கு ஆகுபெயர்.

2. பூழியர் பெருமான் - பாண்டியன். கோயில் - அரண்மனை. வேத்தவை - அரச சபை. சூழி - முகபடாம். மால் - பெரிய. ஏழ் இசை - ஸரிகமபதநி என்பவை; குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்றல் தமிழ்வழக்கு. மழலை, ஈண்டு இன்னோசை என்னும் பொருளது. இடம் - இடப்பக்கம். இசை - கீதம். செவி வழிய - செவி நிறைந்து வழியும்படி.

வேந்து + அவை = வேத்தவை. 'மென்றொடர் மொழியுள் சில வேற்றுமையில், தம்மின வன்றொடர்' என்பது நன்னூல்.

3. முகை - அரும்பு. துளக்கி - அசைத்து. தூசு - ஆடை. பகல் அவிர் - ஒளி விளங்குகின்ற. உணக் கருவி - உணவுப் பொருட் டொகுதி. அகல் மனை - அகலமான வீடு. காட்டி - காட்டிக்கொடுத்து. இகல் - மன மாறுபாடு.

4. செருக்கினும் - கர்வத்தாலும். மானம்-பெருமை. தானம் - ஏழு சுரங்களும் எழும் இடம். தருக்கும் - கர்வித்திருக்கிற. கோன், வரகுண பாண்டியன்; னகரமெய் சாரியை. உழையர் - பக்கத்திலிருப்பவர்; ஏவலர். பத்திரன் கொணர்திர் - பாணபத்திரனைக் கொண்டுவாருங்கள்.

5. உவரி வென்றோன், பாண்டியன்; உவரி - கடல். உக்கிர குமார பாண்டியன் கடல் சுவற வேல்விட்டானாதலின், அதுபற்றி.

அவன் மரபினனுக்கும் அவ்வென்றி கூறப்பட்டது. கவுரியன் - பாண்டியன். பாணி - தாளம். இசை வல்லான், ஏமநாதன்.

6. தென்னவர் - பாண்டியர். திருவுள வலன் - திருவுள்ளத்தில் உள்ள அன்பின் மிகுதியாலும். கூடல் - மதுரை. முன்னவன், சொக்கநாதர். வீறு - மேம்பாடு. வரைந்து - காலவரையறை செய்து.

7. இசை வல்லான், பாணபத்திரன். இருந்துழி - இருந்த விடத்து, இருந்தபோது. அனையான் பாங்கர் - ஏமநாதனிடத்தில். பாண்மக்கள் - பாணர். மல்லல் - வளமுள்ள. ஆவணம் - கடைத் தெரு. கவலை - கவர்வழி; நாற்சந்தி ஐஞ்சந்தி முதலியன. மன்றம் - பொதுவிடம். மறுகு - நெடுந்தெரு.

8. இசை வல்லான், ஏமநாதன். வவ்வு இசை - கற்றுக் கொள்ளுகின்ற கீதம்: கெட்டேன், வருந்துவோர் சொல்லுஞ்சொல். எற்றோ - எத்தன்மையதோ. எவன் - எப்படி. திவவுக் கோலான், பாணபத்திரன்; திவவுக்கோல் - வார்க்கட்டினையுடைய யாழ்.

9. மை யணி மிடற்றினன், சிவபெருமான்; மை - கருமை; மிடறு - கண்டம். வேண்டு கொண்டு - வேண்டுதல் செய்து கொண்டு. தோய்ந்த - படிந்த. பொய்யறு மனத்தான், பாண பத்திரன்.

10. வருத்தன் - வருத்தத்தையுடையவன். இரந்தவன் - வேண்டியவணங்கிய பாணபத்திரன். விருத்தன் - முதியன். அறிவு - ஞானம். திருத்தனார் - நிறைவினை யுடையவர். தீர்த்தன் என்பது திருத்தன் என்று வந்தது என்பர்; தீர்த்தன் - பரிசுத்தன்.

11. தறிந்த - தறிபட்ட. இந்தனம் - விறகு. பங்கி - தலைமுடி. மறிந்த - மடங்கி வீழ்கின்ற. பங்கு - (இடப்) பாகம். எறிந்த - வெட்டிய.

12. கொள்ளுநர் - விலைக்கு வாங்குபவர். பகர்ந்து - சொல்லி. மிடைந்த - நெருங்கிய. முடுக்கர் - முடுக்குக்கள்; இறுதிப்போலி. இசைவலான், ஏமநாதன். கடைத்தலை - வீட்டுவாயில்.

13. முயல் - சந்திரனில் தோன்றுங் களங்கம். மங்குல் - முகில்; ஆகாயம் எனவுமாம். அஃதாவது செவ்வானம். ஓதி - கூந்தல். ஆரம் - முத்துமாலை. கொண்கன் - கணவன். பொருப்பன் மங்கை - பார்வதி.

உருவகவணியை யங்கமாகக் கொண்டுவந்த தற்குறிப்பேற்ற அணி.

14. எழீஇ - எழுப்பி. மடுத்து - சேர்த்து. மடுத்தியார் என்பதில் குற்றியலிகரம் அலகு பெற்றது. இசை வல்லான், ஏமநாதன்.

15. அறை - ஒலிக்கின்ற. யாரை, இதில் ஐகாரம் முன்னிலை ஒருமையை விளக்கிற்று. விபஞ்சி - வீணை. முண்டகம் - தாமரை. புரந்தரன் - தேவேந்திரன். அண்டர் - தேவர்.

16. கனி - கனிவாகிய; உருக்கமான. இசைக்கிழவன், பாணபத்திரன். வினைஞன் - தொழிலையுடையவன்.

17. விலை பகர்ந்தேனும் - விலைக்கு விற்றாயினும். நய்வளம் = நைவளம் - ஒரு பண் ; குறிஞ்சியாழுக்குரியது. பாடும்-பாடுவான்.

18. விரை - வாசனை. விகிர்தன் - விளையாடல் புரிபவன் ; விஹ்ருதன் என்னும் வடசொல்லின் திரிபு. என்னே-என்ன ஆச்சரியம். புரை - குற்றம். மனன் - மனம்.

இச்செய்யுள் கந்தருவ மார்க்கம்.

19. பைத்தலை - பையை உடைய தலை. பொறி - புள்ளி. மஞ்ஞை - மயில். நால் வாய் மத்த மான் - தொங்குகின்ற வாயையுடைய மதம் பொருந்திய யானை. அரிமான் - சிங்கம். புல்வாய் - ஓர் வகை மான். வல்லியம் - புலி. மருட்கை - ஆச்சரியம். ஆறு - வழி. தலைத்தலை மயங்கி - ஒன்றோடொன்றுகூடி. இத்தகை - இவ்விதம். மா - மிருகம். புள் - பறவை. பட்ட - பட்டன. அம்மா, ஆச்சரியத்தைக் குறிக்கும் இடைச்சொல்.

20. வீழ் - விழுது. வான் சினை - பெரிய கிளை. ஒன்று அறி மரங்கள் - ஓரறிவினையுடைய மரங்கள்; ஓரறிவாவது ஸ்பரிசம். போது - பேரரும்பு. கண்ணீர்(கள் + நீர்) - கள்ளாகியநீர்; கண்ணீர் எனவும் குறிக்கும். மலர்ந்த - மலர்ந்தன. மாது, ஓ, அசைநிலைகள்.

21. கண் நிறைநுதலோன், சிவபெருமான். நுதற்கண் இறையோன் எனப் பிரித்துக் கூட்டவுமாம். சாம கண்டம் - சாமவேதத்தைப்பாடிய கண்டம். முல்லைப்பண் - சாதாரி. சராசரவுயிர் - அசையும் பொருளும் அசையாப் பொருளும். இசை வல்லானை, ஏமநாதனை.

22. சிந்தை - மனம். ஐம்பொறி - மெய் வாய் கண் மூக்கு செவி. செவிகள் ஆ - செவிகளாக. புலன்கள் - ஊறு சுவை ஒளி நாற்றம் ஓசை. இசைவலான், ஏமநாதன். பந்தம் - பல உறுப்புக்களோடு சேர்ந்திருக்கிற. பாடினார் - பாடினவர் ; வினையாலணையும் பெயர்.

23. இம்பருள் - இவ்வுலகத்தில். ஈது, இது என்னுஞ் சுட்டு நீண்டது. என்று - என்று சொல்லி.

24. இழுக்கி விட்ட - நீக்கிவிட்ட. வழுக்கு - குற்றம். பத்திரன் - பாணபத்திரன். அழுக்கம் உற்று - துன்பமடைந்து. பண்டர் - பண் பாடுவோர். குழு - கூட்டம். இருள் - இரவில்.

25. ஆடல் - வெற்றி. ஏறு - இடபம்; எருது. பத்திர, விளி. பாண் செய்து - பாடி. பத்திரம் - நன்மை. செய்தும் - செய்தோம்; தும் விகுதி இறந்தகாலத்தில் வந்தது.

26. கண் மலர்ந்து - துயிலினின்று நீங்கி. ஊக்க - செலுத்த. விசும்பு - ஆகாயம். மலர்ந்த - விரிந்த. நான்மறைப்பொருள், சொக்கநாதர்.

27. அடாத சொல் - தகாதசொல் ; அஃதாவது பாணபத்திரனடிமை என்றது. குறை இரந்தவா - குறை கூறி வேண்டிக் கொண்டபடி ; று, தொகுத்தல் விகாரம்.

28. நெடியன், திருமால். சுருதிமுடி - வேதாந்தம். செடியனேன் பொருட்டு - இழிந்தவனாகிய என்பொருட்டு. சேண் நிலம் - நெடுந்தூரத்திலுள்ள பூமி. தோய்ந்த - படிந்தன. ஐய, விளி. 'அண்மையின் இயல்பும் இறுழிவும்' என்பது விதி.

29. கயற்கண்மின் - மீனாக்ஷியம்மை. தந்திரிக்கிழவோன் - வீணையையுடைய பாணபத்திரன். தந்திரி - வீணையின் நரம்பு.

30. ஏழிசைத்தலைமகன், பாணபத்திரன். ஏழிசைக் கிழவனை, ஏமநாதனை. உழையோர் - பக்கத்திலிருப்பவர் ; ஏவலர். பந்தம் - நரம்பின்கட்டு. ஆகுலம் - வருத்தம். அவன், ஏமநாதன். போனவா - போனவாறு ; போனவழி. தெரியார் - தெரியாராகி.

31. அயல்வாய்-பக்கத்தில். அவன், ஏமநாதன். போந்தான்-புகுந்தான் ; வந்து சேர்ந்தான்.

32. பட்டது - உண்டான செய்தி ; வினையாலணையும் பெயர். பால் நாள் - நடு இரவு. கொற்றஞ்சூடினான், பாண்டியன். கொற்

றம் - வெற்றி. அவர், அயலார். ஆடினர் - உரையாடினர்; சொன்னர். அனுமானம் - அனுமானப் பிரமாணம்; கருதலால் அறிதல்.

33. தந்திரிக்கலைவன், பாணபத்திரன். இங்கினும் - இங்கு நின்றும். 'நீ இங்கினும் போன பின்னை யாது செய்தனை' என்க. இசைப்பெருமான், பாணபத்திரன்.

34. இசைத்ததும் - சொன்னதும். வீணைக் காவலன், பாணபத்திரன். ஒத்தலின் - ஒத்திருத்தலால். கைக்கும் பூ - கசக்கும்பூ; வேப்பம்பூ. அலங்கலான் - மாலையை யுடையவன்.

35. கூற்று - எமனை. எறி - எறிந்த; உதைத்த. இடையறு - நீங்காத. காப்பான் - காக்க; பான் எதிர்கால வினையெச்ச விகுதி. பணியா - பணிந்து.

36. பத்தர் - யாழினுறுப்பு. பனைக் கை மான் - பனைபோலும் நீண்ட கையினைஉடைய யானை. எருத்தில் - பிடரியில். மிதப்புற - அதிகமாக. தத்து மான் தொடை - தாவுகின்ற குதிரைகளைக் கட்டிய. தேரினன், வரகுண பாண்டியன்.

5. ஸ்ரீமத் குமாரசுவாமியம்

ஸ்ரீமத் குமாரசுவாமியம் என்பது குமாரசுவாமியின் (குமாரக் கடவுளின்) சம்பந்தமான நூல் என்று பொருள்படும். ஸ்ரீமத் என்பது அடைமொழி. இந்நூலைச் செய்தவர் குமாரசுவாமி என்னும் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள். சுவாமிகள் தம் எழுபதாம் வயதில் இந் நூலை இயற்றினர்.

குமரகுருதாசர்

குமரகுருதாசர், கி. பி. 1850-ல் பாம்பன் என்னும் பதியில் சாத்தப்ப பிள்ளை என்பவருக்குப் புதல்வராகத் தோன்றினர். இவர் இளமைப்பருவத்திலேயே தெய்வபக்தியுடையவராய் விளங்கினர்; கிறிஸ்தவர் முகம்மதியர் வழிபாடு செய்யும் இடங்களைக் காணும் போதும் கடவுள் நினைவுடையராய்க் கைதொழுது செல்லும் பரந்தநோக்கமுடையவராயும் இருந்தார். இவர் தம்மிளமையில் சிலம்பம், மற்பயிற்சி, நீந்துதல் முதலியவற்றால் தம்மழகிய உடலை மிக்க வலியுடையதாய்ச் செய்துகொண்டார். பின்னர், இராமேச்சுவரத்தில் சேதுமாதவ ஐயர் என்னும் மறையவரைக் குருவாக அடைந்து, அவரிடம் ஆறெழுத்து மந்திரத்தை யுபதேசம்

பெற்றார்; அவர் சொற்படி, (காளிமுத்தம்மாள் என்பவரை மணந்து) இல்லறம் மேற்கொண்டார். மேற்கொண்டும், இவர் உப்பையும் புளியையும் தள்ளி ஒருபொழுதுமட்டும் உணவு கொள்ளும் நியமத்தைக் கைக்கொண்டார். இவருக்கு ஆண்மக்களிருவரும் பெண்மகளொருத்தியும் பிறந்தனர். முருகவேளை இவர் கனவிற் பலமுறையும், நனவிற் சிலமுறையும் தரிசித்ததாக இவர்நூல்கள் கூறும். சுவாமிகள் 35 நாள் நிட்டைகூடி முருகவேளிடத்து நேரே உபதேசம் பெற்றார் என்பர். அப்பால், சுவாமிகள் துறவறம் பூண்டார். சென்னையில் பல ஆண்டுகள் தங்கியிருந்து, இடை யிடையே காசி முதலிய தலங்கட்குச் சென்று மீண்டார். 1929-ல் இவர் முருகன் திருவடி நீழலை யடைந்தார். இவர் சமாதி திருவான்மியூரில் உளது.

கடுந்துறவியாகிய இச்சுவாமிகள் பள்ளியிற் படித்தது தமிழ் ஒன்றே. ஆனால் தம் முயற்சியால் வடமொழியிலும் தமிழ்மொழியிலும் பெரும்புலமை யடைந்தார். எதையும் துருவி ஆராய்ந்த பின்பே மெய்யெனக் கொள்ளவேண்டும் என்னுங் கொள்கையை இவர் கடைப்பிடித்தவர்; பொய்யைப் பெரிதும் வெறுப்பவர்; செய்வன திருந்தச் செய்யும் இயல்பினர்; மிக்க சீவகாருண்யமுடையவர்; ஆடம்பரத்தில் விருப்பற்றவர்; நிகரற்ற சொல்வன்மை படைத்தவர்; முருகப்பெருமானிடத்துத் தனிப்பேரன்பு பூண்டவர்.

குமரகுருதாசர் - தகராலய ரகசியம், பரிபூரணானந்தபோதம், ஸ்ரீ சுப்பிரமணிய வியாசம் முதலிய பல நூல்களை இயற்றியுள்ளார்.

ஸ்ரீமத் குமாரசுவாமியம்

குமாரசுவாமியம் என்னும் நூல் 5 காண்டங்களை யுடையது. அவற்றுள் முதலது திருவிளையாடற்காண்டம். அது 19 உட்பிரிவுகளை யுடையது. அப்பிரிவுகளுள் 9 - ஆவது பிரிவாகிய வீரமாகேந்திரத் திருவிளையாடலின் ஒருபத்து ஈண்டுப் பாடமாகக் குறிக்கப்பட்டுளது. ஒவ்வொரு பத்தின் இறுதிச்செய்யுளிலும் அருணகிரிநாதரை இவர் பாராட்டியுள்ளார்.

திருவிளையாடற்காண்டம்முழுவதற்கும்தமிழறிஞர் திரு. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் (Educational Officer, Corporation of Madras) பொழிப்புரை எழுதியுள்ளார்கள். இவ்வுரை பெரிதும் பயனுடையது.

கதைத் தொடர்ச்சி

சிவபெருமானது நுதல்விழிப் பொறிகள் சரவணப்பொய்கையில் ஆறு குழந்தைகளாய்த் தோன்றின. பார்வதிதேவி அருளியவாறு அவை ஆறும் ஒன்று சேர்தலின், அறுமுகக் குழவி அமைந்தது. அக்குழவி பார்வதியோடு கைலையடைந்து, வீரவாகு தேவர் முதலிய நவவீரரோடு நட்புச்செய்து வளர்ந்தது. அக்காலத்தில், நாரதர் செய்த யாகத்திற் றோன்றிய யாட்டுக்கடாவொன்று ஆர்ப்பரித்துவர, அறுமுகக்கடவுள் அதனைக் கொணர்வித்து வாகனமாகக் கொண்டார்; பின்னர், நான்முகன் பிரணவப்பொருள் அறியாமையின், அவனைக் கந்தகிரியிற் சிறையிடுவித்து, அதன் பொருளைச் சிவபெருமானுக்கு உபதேசஞ் செய்தார்.

அக்காலத்தில் சூரபதுமனுக்கஞ்சிய வானவர்கள் அறுமுகக் கடவுளிடம் குறையிரக்க, அவரும் 'அஞ்சல்' என்று கூறலும், வானவர்கள், அவரைக் கைலைக்கு அணித்தாயதொரு மலையில் ஓர் ஆதனத்தமர்த்தி அபிஷேகஞ் செய்தனர். அதனால், அம்மலை கந்தகிரி எனப் பெயர் பெற்றது.

பின்னர், அறுமுகப்பெருமான் மேருமலையையடைந்து அதன் சிகரங்களைப் பெயர்த்துத் திசைகளில் வீசி விளையாட, தேவேந்திரன், யமன், அக்கினி, வருணன், வாயு, சூரியன், சந்திரன் இவர்கள் எதிர்த்துப் பொருது வீழ்ந்தனர். அதனை யறிந்த தேவகுரு வணங்கி வேண்ட, அவர்கள் உயிர்த்தெழுமாறு அறுமுகனார் அருள்செய்தார்.

நான்முகனைச் சிறையிலிட்ட அறுமுகக்கடவுள் கந்தகிரியில் நின்று சிருஷ்டித்தொழிலைச் செய்துவருகையில் தேவர் முதலியோர் வேண்டுகோளால் அவனைச் சிறைவிடுத்தார்; பின்னர், வாமன மூர்த்தியின் திருக்கண்களிற் றோன்றிய மங்கையரிருவர், இமயமலையில் தம்மை விரும்பித் தவங்கிடக்க, அவர்முன் சென்று ஒருத்தியை இந்திரனுக்கு மகளாகவும், ஒருத்தியை மண்ணுலகில் சிவமுனிவர்க்கு மகளாகவும் பிறக்குமாறு பணித்தார். அதன்பின் கைலைமலை யடைந்து சிவபெருமானோடு வீற்றிருக்கையில் தேவர் முதலியோர் சென்று வேண்டிக்கொள்ள, சிவபெருமான் செவ்வேள் கையில் வேலாயுதத்தை நல்கி, நவவீரருக்கும் இலக்ஷம் வீரர்களுக்கும் ஆயுதங்கள் பலவற்றை நிரம்ப வழங்கினார்; வழங்கி, அறுமுகக் கடவுளை மார்புறத் தழுவி, ஆசிகூறி அசுரரோடு போர்

புரிய அனுப்பினர். உமாதேவியும் வாழ்த்தினர். வாயுவினால் செலுத்தப்பட்ட நூறுயிரம் குதிரைகள் கட்டிய தேரில் அறுமுகக் கடவுள் அமர்ந்து, தேவரும் பூதரும் வீரரும் புடைசூழ மண்ணுலகத்திற்கு எழுந்தருளினர். அவர் வரவை யறிந்த தாரகன் அவரை எதிர்த்து அம்புகளைச் சொரிந்தான். அவை அவரை வலம்வந்து திருவடி தொழுதன. பின்பு அவன் எறிந்த பாசுபதத்தை அவர் தம் கரத்தில் தாங்கினர்; கிரௌஞ்சனும், தாரகனும் மாயங்களால் வேறு வேறு உறுக்கொள்ள, அவ்வவற்றிற் கேற்ற உருவமெடுத்து அழித்தனர். இறுதியில் செவ்வேள் ஏவிய வேல், அவ்வசுரருடலைப் பிளந்து உயிரைக் குடித்தது. பின்பு செவ்வேள், சூரன் மனநிலையை அறிந்துவர வீரவாகுதேவரை அனுப்பினர்.

1. சூரன்-சூரபதுமன். செவ்வேள்-முருகன். செந்தி - திருச்செந்தூர். நெய்தை - பெருமை. மாவீரம் - மஹாவீரம். விண்டு - மலை. விசுவரூபமாய் - விசுவரூபமாகி. அவாசி - தென்திசை.

2. இலங்கை, இது சூரனுடைய தளபதிகளுள் ஒருவனுகிய ஆயிரந்தலை யாளிமுகனுக்கு கெடிஸ்தலமாய் வீரமாகேந்திர புரத்திற்கு வடபாலுள்ள கடலில் இருந்ததொரு தீவு. இதுவே, பின்னர் இராவணனது ஆட்சியில் இருந்த தென்பர். வடாது - வடக்கில். பம்பு - செறிந்த. காய்ந்து - கோபித்து. காளை - இளமைப் பருவம் வாய்ந்த. முதல் நகர் - முதன்மையான நகரை, வீரமாகேந்திரபுரியை. உத்தரம் - வடக்கிலும், இயங்கு - சஞ்சரிக்கின்ற. தானை - சேனையை.

3. வெள்ளம் - ஓர் பேரெண். ஈரம் - அன்பு. ஆயிரங்கயச்சிரத்தான் - ஸஹஸ்ர கஜமுகன். இரியுமாறு - ஓடும்படி, மடிய. ஏர் அலங்கு - அழகு விளங்குகின்ற. கால்கொடே - கால்களினாலேயே. குழைத்து - துகைத்து. மேலை - மேற்றிசை வாயிலை.

4. மா உடம்பு - பெரிய உடம்பு; விசுவரூபம். கோன் - சூரபதுமன். மன்றம் - கொலு மண்டபம். மாண் - சூரனுடைய மாட்சிமையை. வேல் தேவு - வேலையுடைய தேவன்; முருகன். அந்த வீரன் - வீரவாகு தேவர். எண்ணுமாறு - எண்ணியபடி. ஆவயின் - அவ்விடத்தில்.

5. மன் - (தம் உடம்பில்) பொருந்தியுள்ள. எழில் - அழகு. வாள் - வாளாயுதம். மஞ்சு - அழகு. கொன் நலத்தனை - பெரிய

நன்மையுடைய வீரவாகு தேவரை. ஆதி - வரலாறு. அத்தன், சூரன். வீரன் - வீரவாகு தேவர். எம்பிரான் - எமது தலைவன். இளம்பிரான் - குமாரக் கடவுள்.

6. இறுதினத்தில் - (உலகம்) அழியுங்காலத்தில். தெரி - தெரிந்து கொள். குறிய சொற்கள் - (அடா என்பது முதலிய) புன் மொழிகளை. நறிய கோல் - செங்கோல்.

7. கௌஞ்ச சயிலன் - கிரவுஞ்சனும். முரணி - மாறுபட்டு.

8. தடிந்த - கொன்ற. முன் - முதலில். தெறுநிர் - கொல்லுங்கள். உருத்து - கோபித்து. எற்றி - உதைத்துத்தள்ளி; கொன்று. தறுகண் - அஞ்சாமையை உடைய. நூறு தலையன் - சதசிரன். சவட்டி - புடைத்து.

9. பதாதி - காலாட்படை. முருக்கினன் - அழித்தான்.

10. ஆயிரம் புயத்து வீரர் - ஆயிரம் தோள்களை யுடையவர்; ஸஹஸ்ர பாகுக்கள். ஒருவன் உள்ளம் - வீரவாகு தேவன் உள்ளத்தில். தே - தேவனே.

புகழ்ப் புதன் - திருப்புகழைப்பாடிய அறிஞராகிய அருணகிரி நாதர்.

IV

வருணனை

இமயமலை

இமயமலையைக் குறித்துள்ள செய்யுட்களை இயற்றினவர்கள் கா. நமச்சிவாய முதலியாரவர்கள். இவர்கள் தொண்டைமண்டலத்தில் காவிரிப்பாக்கம் (காவிதிப்பாக்கம்) என்னும் ஊரில் வேளாண்மரபினராகிய இராமசாமி முதலியாரவர்கள்தம் முதற் புதல்வர்; திருமயிலை மஹாவித்வான் சண்முகம் பிள்ளையவர்களிடம் தமிழிலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தவர்கள். காஞ்சீபுரம் மஹாவித்வான் இராமசாமிநாயுடவர்களிடத்துஞ் சில நூல்களைப் பாடங்கேட்டார்கள் எனத் தெரிகின்றது. இவர்கள் சென்னை வேப்பேரி, திரு. பவுல்கலாசாலையில் பல யாண்டுகள் தமிழாசிரியராய் விளங்கி, பின்னர் மேரிமஹாராணியார் கல்லூரியிலும்,

சென்னை அரசாங்கக் கல்லூரியிலுஞ் சிற்சில யாண்டுகள் தமிழ்ப் புலமை நிகழ்த்தி வந்தார்கள். பாடசாலை மாணவர்க்கும் உயர்தரக் கலாசாலை மாணவர்க்கும் உரிய பாடபுத்தகங்களை முதன்முதலில் எழுதிய தமிழாசிரியர் நம் முதலியாராவர்களே. தமிழ்மொழி வளர்ச்சியையும் புலவர்தம் முன்னேற்றத்தையுங் கருதி, இவர்கள் அரும்பாடுபட்டனர்; சாதி மத வேற்றுமை கருதாது அனைவரையும் சம நோக்கால் நோக்கி, அவர்கட்கு வேண்டுவனவற்றை உவந்து செய்தனர். இவர்கள் உதவிபெற்றுக் கல்வி கற்ற மாணவர்கள் பலர்; பதவி பெற்ற ஆசிரியர் பலர். இவர்கள், அறுபத்தொன்றும் வயதில் உலகவாழ்வினைத் துறந்தனர்.

முதலியாரவர்கள் உரைநடை எழுதுதலில் தலைசிறந்தவர்கள். செய்யுட் செய்யுந் திறனும் வாய்க்கப்பெற்றவர்கள். இவர்கள் இயற்றியுள்ள செய்யுள் நூல்கள்—குணவான் தன் குற்றம் உணர்வான், பேராசைப் பேயன், கயவன் கல்வியருமை அறிந்தது, தணிகைச் சிங்கார சதகம் முதலியன.

இமயமலையைப்பற்றிய இச் செய்யுட்கள், 'இமயமலை' என்னும் வசன பாடத்தின் முதற்கண் உள்ளவை.

1. அலகு - அளவு. அறவோர் - துறவறத்தோர். எழில் - அழகு.

2. அளாம் - அளாவிய; அளாவும் என்பதனீற்றயல் உகரம் கெட்டது. மய் = மை - மேகம்.

மேகங்கள் இமயமலையின் (உச்சியிலன்றி) இடைநிலத்துத் திரிகின்றன என்பது, 'மய்யளாவிய உடலது' என்பதன் கருத்து.

3. கோடு - உச்சி; சிகரம். புனிதம் - பரிசுத்தம். புரை - குற்றம். வரைப்பில் - தன் எல்லையில்; தன்னிடத்தில். ஆன் இனம் - பசுக்கூட்டம். பேரது - பெருமையுடையது.

4. நான்முகன் புத்திரை - பிரமபுத்திரா. புனலும் - வெள்ளத்தையுடைய நதியும். இழி - இறங்கிப் பாய்கின்ற.

Printed at the 'Tamil Kadal' Press, San Thome, Madras.